உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்.— { ரா. இராகவையங்கார்,
ஸேது ஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-௨.] குரோதி ௵ புரட்டாசிமீ. [பகுதி-௧௧.

உள்ளுறை.

அச்சிட்ட தொல்காப்பியமரபியலுரை.—பத்திராசிரியர். ௫௬௧
செல்வம்.—ஸ்ரீமத்-தி. செல்வக்கேசவராய முதலியார், M. A. ௫௬௭
வெண்பாவிலக்கணம்.—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௫௭௨
நன்னூற்குறிப்பு.—ஸ்ரீமத்-திரு. நாராயணையங்கார் ௫௭௭
ஓரடித்தமிழ்ச்சொற்கள்.—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௫௮௨
திவ்வியகவி பிள்ளைப்பெருமாளையங்கார்.—ஸ்ரீமத்-கல்குளம்-குப்புசாமி முதலியார்.—B. A. ௫௮௭
நான்மணிக்கடிகை (பழைய உரையுடன்) ௧௭
தொல்காப்பியம் செய்யுளியல்.—நச்சினார்க்கினியருரை. ௨௫
விவசாயநூல்.—ஸ்ரீமத்-சே. ப. நரசிம்மலு நாயடு. ௨௫
சுகசந்தர்சனதீபிகை.—ஸ்ரீமத்-பண்டித—நடேசசாஸ்திரியார். ௨௫

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ - 4.] 1904. [தனிப்பிரதி அணா-8.

விளம்பரம்.

ஒருமுறை பாருங்கள்.

மதுரை கீழமார்க்கட்டுத் தெருவில் நம்முடைய ஜவுளிமாளிகையில் **கொறநாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, சேலம் காஞ்சீபுரம், பனாரசு, உள்ளூர்** முதலிய தினுசுகளும் **பங்காளத்திலிருந்து** பலவிதமானநார்ப்பட்டு, வெண்பட்டுதினுசுகளும், நூதனமாய் அச்சிடப்பட்ட புதுச்சேரித்துண்டுகளும்; பற்பல உபயோகமுள்ள நாகரீக ஜவுளிதினுசுகளும்; மொத்தமாகவும் சில்லறையாகவும் கறார்விலையாக விற்கப்படும். தலைவியாபாரிகளுக்கு ஜவுளி தினுசுகள் வேண்டியமாதிரியில் உடனேயும் பத்திரமாயும் தபால் வாலியூபேயபிள் மார்க்கமாய் அனுப்பப்படும். சாமான்களின் ஜாப்தா கேட்பவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

கு. தெய்வசிகாமணி பாகவதர்,

டி. லட்சுமண பாகவதர்,

கறார் ஜவுளிக்கடை மதுரை

☞ தயவுசெய்து தங்களுடைய சினேகிதர்களுக்குத் தெரிவியுங்கள்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உ.] குரோதி௵ புரட்டாசிமீ [பகுதி-கக.

அச்சிட்ட
தொல்காப்பிய மரபியலுரை.

இஃது அச்சிட்ட தொல்காப்பியப் பொருளதிகாரவிறுதிக்கண் உள்ளதாகும். 'தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியார் இயற்றிய உரையோடும் பதிப்பிக்கப்பட்டது' என்று வெளியிட்டவாற்றான், அப்பொருளதிகாரம் அச்சிட்டார்கருத்து, அவ்வதிகாரத்துள்ள ஒன்பதியலுரையும் நச்சினார்க்கினியரியற்றியனவே என்பதாம். 'செந்தமிழ்' முதற்றொகுதி முதற்பகுதி ஆராய்ச்சிக்கண் அச்சிட்ட பொருளதிகாரச் செய்யுளியலுரைகாரர் பேராசிரியரென்பதூஉம், நச்சினார்க்கினியார் அல்லரென்பதூஉம் தெளிவிக்கப்பட்டன. அச்செய்யுளியல் நச்சினார்க்கினியருரை இப்போது "செந்தமிழ்" வாயிலாக வெளிவருதலும் பலரும் அறிவர். மற்றுஅவ்வதிகாரத்துள்ள மரபியலுரையினை, நச்சினார்க்கினியரியற்றியன என நன்குதெளியப்பட்ட இயல் நூல் உரைகளோடு வைத்து ஆராய்ந்தஇடத்து, அம்மரபியலுரைக்கும் மரபியல்பற்றி ஆங்காங்கு வந்துள்ள அந்நச்சினார்க்கினியருரைகட்கும் கருத்து மாறுபாடும், உரைவேறுபாடும், ஒவ்வாமையும் பலபலவாகக்காணப்படுதலால், இப்போதுவழங்குகின்ற அம்மரபியலுரை நச்சினார்க்கினியருரையன்றென்பது தெரிவது. அவ்வொவ்வாமை முதலியவற்றைப் பின்வருவனவற்றானுணர்க.

சிந்தாமணிக்குணமாலையாரிலம்பகத்து, 'மங்கைநல்லவர்' என்னுஞ் செய்யுளுரையில், நச்சினார்க்கினியர் சுரும்பு, ஞிமிறு, வண்டு,

தேன் என்னும் நான்கும் தும்பியது கிளையாமென்று கூறி, இவற்றிற்குச் செவியுணர்வும் உண்டென்று கூறுவாராய் "நண்டுந் தும்பியு நான்கறி வினவே, பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே" (மரபியல்-௩௧) என்னும் மரபியற்சூத்திரத்து "ஆசிரியர் நண்டுந் தும்பியும் என்று தும்பியைப் பின் வைத்தது, மேல்வருஞ் சூத்திரத்தின் 'மாவுமாக்க ளுமையறிவென்ப' என்ற ஐயறிவு இதற்கும் ஏறுதற்கென்றுணர்க; இதனை வாராததனால்வந்ததுமுடித்தல் என்னும் தந்திரவுத்தியாற் கொள்க என்று ஆண்டு உரைகூறிப்போந்தாம்" எனவுரைத்தார்.

இக்கருத்தேபற்றிப் பெரும்பாணாற்றுப்படையுரையினும் 'பல்காற்பறவைகிளைசெத்தோர்க்கும்' என்புழி *"'நண்டுந் தும்பியும்' என்னுஞ் சூத்திரத்துச் செவிப்பொறியால் அவையுணர்தல் கூறினும்" என வுரைத்தார்.

இவ்வாறு இவ்விரிடத்தும் வற்புறுத்தப்படுகின்ற இந்நச்சினார்க்கினியருரைக்கருத்துத் தானும் அச்சிட்ட மரபியலுரைக்கண் இல்லாமை காண்க.

மற்றுஞ் சிந்தாமணி நாமகளிலம்பகத்து 'மெல்விரன் மெலியக் கொய்த' என்னுஞ் செய்யுளுரையில், "குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை' (மரபியல்-௧௬) என்றதனுட், கோடையென்றதனான் ஆமான்குழவியுங் கோண்டவாறுணர்க" எனவும், கனகமாலையாரிலம்பகத்து 'ஊனுண்சிங்கக்குழவி' என்னுஞ்செய்யுளுரையில் அம்மரபியற் சூத்திரத்தையேஎடுத்தோதி, 'என்றதனுட் கோடை யென்றதனாற் சிங்கக்குழவியுங்கோண்டவாறு காண்க' எனவும், காந்தருவதத்தையாரிலம்பகத்து 'எழுந்துவிண் படருஞ்சிங்கம் பெட்டைமே லிவர்ந்து நின்றால்' என்னுஞ் செய்யுளுரையில் "ஒட்டகங் குதிரை கழுதை

---

* பத்துப்பாட்டுரையில் 'வண்டுந்தும்பியும்' என்ற பாடங்காணப்படுவது ஏடு எழுதினர் பிழைப்பாகும். நச்சினார்க்கினியர், வண்டுமுதலிய நான்கும் தும்பியது கிளையென்றும், இச்சூத்திரத்துத் தும்பியைப் பின்வைத்தது வருஞ்சூத்திரத்துக் கூறப்படுகின்ற ஐயறிவு இதற்கும் ஏறுதற்கு என்றுங் கருதியதனால், தும்பியது கிளையல்லாததும் ஐயறிவு ஏறலாகாததும் ஆகிய தொன்றே தும்பிக்குமுன்வைச்சதாகும் என்பது நன்கறியத்தக்கது.

மனையிவை, பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய' (மரபியல்-ருஉ) இதனுட் கோடையென்றதனுற் சிங்கத்துக்கும் பெட்டைகொண்டவாறுகாண்க" எனவும் நச்சினர்க்கினியர் கூறினர்.

அச்சிட்டமரபியலுரைக்கண் ஈண்டு நச்சினர்க்கினியர் கூறியவாறென்றுமில்லாமை அவ்வச்சூத்திரவுரை நோக்கித்தெளிக.

இனிக் கலித்தோகையில் 'வாரிநெறிப்பட்டு' என்னும் முல்லைக்கலியுரையில் நச்சினர்க்கினியர் "எருமைப் பெடை யென்றது 'பேடையும் பெடையும்' (மரபியல்-ருச) என்னுஞ்சூத்திரத்து நாடின் என்றதனுல் அமைத்தாம்" எனக்கூறினர்.

அச்சிட்ட மரபியலுரைக்கண் அச்சூத்திரவுரையில் "நாடின் என்றதனுல், பெட்டை யென்பது வழக்கினுட் பயிலா என்பது" என வேறோருரையுள்ளதல்லது ஈண்டு நச்சினர்க்கினியர் கூறியாங்கு ஒன்றுங்காணுமை யுணர்க.

'மன்னுயிரேமுற' என்னும் பாலைக்கலி யுரையில் நச்சினர்க்கினியர் 'கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி' என்புழி, "புல்லு மரனு மோரறி வினவே, பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே' (மரபியல்-உஅ) இதனுட் பிறஅறிவும் உளவென்று கூறினர், அதனுற் பாவத்திற்கு அஞ்சி மரங்கவின்வாடிற்றென்றார்" எனவுரைத்தார்.

அச்சிட்டமரபியலுரைக்கண், ஈண்டு நச்சினர்க்கினியருரைத்தாங்கு, மரங்கட்குப் பிறஅறிவும் உளஎன்று ஒன்றுங்கூறப்படாமையும், 'பிறவும் உள' என்பதற்கு "அப்புல்லுக்கும் மரனுக்கும் ஒத்த கிளையாய புதலுங்கொடியும் அவற்றுக்கொத்த பிறப்பாகிய ஓரறிவுப்பருவமுள்ள மக்கட்குழவியும் விலங்குக்குழவியும் எஞ்ஞான்றும் ஓரறிவினவாகிய என்பில் புழுவும் ஆகிய பிறவும் உள்ளன" என்று வேறு கூறப்பட்டிருத்தலும் அச்சூத்திரவுரைநோக்கித் தெளிக.

தோல்காப்பியத்து அகத்திணையியலுரையில் நச்சினர்க்கினியர் 'உயர்ந்தோர்க் குரிய வோத்தி னை' என்புழி "இது நான்கு வருணத்தோர்க்கும் எய்தாததெய்துவித்தது ; இதன்பொருள்—வேதத்

தினுற் பிறந்த வடநூல்களும் தமிழ்நூல்களும் அந்தணர், அரசர், வணிகர், உயர்ந்த வேளாளர்க்கும் உரிய என்றவாறு” எனக்கூறினர். இதனல் நச்சினர்க்கினியர் ‘உயர்ந்தோர்க்குரிய’ என்னும் இவ்வகத்திணையியற் சூத்திரம் நான்குவருணத்தோரையும் நோக்கியதென்று கருதினராதல் தெள்ளிது.

அச்சிட்ட மரபியலுரைக்கண் ‘வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும், வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே’ (மரபியல்-அக) என்புழி “இது நான்காம் வருணத்தார்க்கோர் புறனடை; இதன்பொருள்—வேந்தர்கொடுப்பின் வேளாண்மாந்தர்க்குப் படைக்கலமுங் கண்ணியும் பெறும்பொருளாகச் சொல்லப்படும் என்றவாறு.........(இது) அகத்திணையியலுள், ‘உயர்ந்தோர்க்குரிய வோத்தினை’ என்புழிக் கூறப்பட்டதெனின், வேளாளரையொழித்து ஒழிந்தோரை நோக்கிற்று அச்சூத்திரமென்பது” எனவுரைக்கப் பட்டுள்ளது.

ஈண்டு இவ்விருரையும் தம்முண் மலைதல் எளிதிலுணரத்தக்கது.

தொல்காப்பியப்பொருளியலுரையில் ‘உயர்ந்தோர் கிளவியும்’ என்னுஞ் சூத்திரவுரைக்கண் நச்சினர்க்கினியர் “வழக்கெனப்படுவது’ என்னும் மரபியற்சூத்திரத்தான் வழக்கு உயர்ந்தோர் கண்ணதாயிற்று; அவர் அகத்தியன்முதலியோரேன்பது பாயிரத்துட்கூறினும்” என்றார். பாயிரவுரைக்கண்ணும் அவ்வாறே “உயர்ந்தோராவார் அகத்தியனும், மார்க்கண்டேயனும், தலைச்சங்கத்தாரும் முதலாயினோர்” என்றார். இவற்றிற்கேற்பப் புறத்திணையியற்கண் ‘மறுவில் செய்தி மூவகைக் காலமு, நெறியி னுற்றிய வறிவன் றேயமும்’ என்பதனுரைக்கண் “கலசயோனியாகிய அகத்தியன் முதலியோரும் அறிவர் என்றுணர்க” என்றார். இவையெல்லாம் ஒரு கருத்தாதல் காண்க.

அச்சிட்ட மரபியலுரைக்கண் ‘வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே’ என்னுஞ் சூத்திரத்து ‘உயர்ந்தோரெனப் படுவார் அந்தணரும் அவர்போலும் அறிவுடையோரும் ஆயினர்’ எனவுள்ளது.

இவ்வச்சிட்ட மரபியலுரைக்கருத்து 'பார்ப்பாரறிவர்' என்னும் செய்யுளியற் சூத்திரவுரையிற் பேராசிரியர் "அறிவரெனப்படுவார் மூன்று காலமுந் தோன்றநன்குணர்ந்தோரும் புலனன்குணர்ந்தபுலமையோரும் ஆகலானும், இனிப்பார்ப்பாரும் அவ்வாறே சிறப்புடையராகலானும் அவர்வழி நிற்றல் அவர்க்குக்கடன்" எனவுரைத்ததனோடு பெரிதும்ஒப்பதாம்.

நச்சினார்க்கினியர் இச்செய்யுளியற் சூத்திரவுரைக்கண் பெரும்பான்மையும் பேராசிரியர் உரைத்தவையேதழீஇயுரைத்து, 'இனிப் பார்ப்பாரும் அவ்வாறே சிறப்புடையராகலான்' என்பது மட்டிற் கூறாமல் விடுத்தமையால் 'உயர்ந்தோர்' என்பதற்கு 'அந்தணரும் அவர் போலும் அறிவுடையோரும்' என்பது அவர்கருத்தன்றென்பதூஉம், மேற்பாயிரத்தும்பிறவிடத்தும் உரைத்தாங்கு 'அகத்தியனார் முதலியோர்' என்பதே அவர்கருத்தாம் என்பதூஉம் உய்த்துணர்க.

தோல்காப்பியத்து அகத்திணையியலுரையில் 'மன்னர் பாங்கிற் பின்னோராகுப' என்புழி, வேளாளர்—உழுவித்துண்போரும் உழுதுண்போரும் எனப்பலராவர் என்றுகூறி, அப்பலராதற்கு இலக்கணங்காட்டுவாராய் 'வேளாண்மாந்தர்க்கு' (மரபியல்-அ0) 'வேந்துவிடுதொழிலிற்' (மரபியல்-அக) என்னும் மரபியற் சூத்திரங்களான் வேளாளர் இருவகைரென்ப எனவுரைத்தார்.

அச்சிட்ட மரபியலுரைக்கண், வேளாளரை இவ்வாறு இருவகையரெனவகுத்துரைகூறப்படாமையும், அவ்விருசூத்திரவுரைகளினும் உழுவித்துண்போர் என்னும் வகையே அறியலாகாமையும் நோக்கித்தெளிக.

சிந்தாமணி இலக்கணையாரிலம்பகத்து 'எத்துணைத்தவஞ்செய்தான்கொல்' என்னுஞ் செய்யுளுரையில், நச்சினார்க்கினியர் "அந்தணாளர்க் கரசுவரைவின்றே' (மரபியல்-அஉ) என்பதனான் அந்தணரொழிந்த இருவருக்கும் முடியுடைவேந்தாதற்றன்மையின்மையின் ஈண்டு அரசளித்தது குறுநிலமன்னர்க்குரிய அரசாயிற்று" எனவுரைத்தார்.

இதன்கண் 'அந்தணரொழிந்த இருவர்' எனப்பட்டார் வைசியரும் வேளாளரும் ஆவர். இதனால் வேளாளரும் குறுநிலமன்னராதற்குரியர் என்றுகருதினாராயிற்று. இதற்கேற்பவே அவர் அகத்திணையியலுரைக்கண் பலவிடத்தும் 'வேளாளரில் மண்டிலமாக்களுந் தண்டத்தலைவருமாய் வேள் எனவும் அரசு எனவும் உரிமையெய்தினோரும், காவிதிப்பட்டமெய்தினோரும், குறுமுடி குடிப்பிறந்தோரும் முடியுடைவேந்தர்க்குமகட்கொடைக்குரியர்' (௩0) எனவும், 'வேளாளரே அரசராற் சிறப்புச் செய்யப்பெறுவர்' (உ௪) எனவும், அவர் அரசரான் ஏவப்பட்டுப் பகைவர் மேலும், நடுகாத்தன்மேலும், சந்து செய்வித்தன் மேலும், பொருள் வருவாய் மேலுஞ் சென்று வினைமுடித்தற்குரியர் (௩0) எனவும், புறத்திணைக்கண் தருக்கமும் கணிதமும் வேளாளர்க்கும் உரித்தாம் (உ0) எனவும் வேளாளரைச் செல்வம்பற்றியும் கல்விபற்றியும் சிறப்பித்தேகூறுவர்.

அச்சிட்ட மரபியலுரைக்கண் வேளாண்மாந்தரைப் பற்றி வருகின்ற சூத்திரவுரைகளில் மேற்காட்டிய நச்சினார்க்கினியர் கருத்தொன்றும் பயிலாமையும், அவர் வேளாளரும் குறுநிலமன்னராதற்குரியர் என்று கருதிய கருத்திற்குமாறாகக் குறுநிலமன்னர்க்குரியனகூறிய 'வில்லும் வேலும்' என்னும் மரபியற் சூத்திரத்து 'மன்பெறுமரபினேனோர்க்குமுரிய' என்பதன்கண் "மன்பெறு மரபினேனோர்' எனவே அரசர் வைசியரன்றிக் கீழ்அமையா ஆயிற்று" எனவுரைக்கப்பட்டிருத்தலும் 'அன்ன ராயினு மிழிந்தோர்க் கில்லை' என்னுஞ்சூத்திரவுரை நோக்கித்தெளிக. 'வேந்துவிடு தொழிலிற்' என்னும் மரபியற்சூத்திரவுரையில் 'உயர்ந்தோர்க் குரிய வோத்தினான' என்னும் அகத்திணையியற்சூத்திரத்து வேளாளரை ஒழித்து ஒழிந்த மூவரையுமே உயர்ந்தோரெனக் கருதியுரைத்தமை மேலே காட்டினாம்.

இவ்வாறு இன்னும் நுனித்து ஆராயின் நச்சினார்க்கினியருரைக்கும் அச்சிட்டமரபியலுரைக்கும் வேறுபாடு மிகப்பலவாகக் காணலாகும்.

இத்துணை மாறுபாடு தெளியக்காண்டலால், அச்சிட்ட மரபியலுரை நச்சினார்க்கினியர் இயற்றியதன்றென்பது நன்குகொளற்பா

ற்று. மற்றிம்மரபியலுரைகாரர் யாவரெனின்;— ஆழ்வார் திருநகரியினின்று இச்சங்கத்துக் கிடைத்த இம்மரபியலுரைப் பழையஏட்டுப் பிரதிகள் இரண்டிலும் 'பேராசிரியனுரை' யென்றெழுதப்பட்டிருத்தலாற் பேராசிரியரேயாவரென்க.

இதுபோலவே ஆராய்ந்த அளவில், அச்சிட்ட பொருளதிகாரவுரைக்கணுள்ள மெய்ப்பாட்டியலுரையும், உவமவியலுரையும் நச்சினார்க்கினியருடையனஅல்ல எனத்தெரிவது: அவ்வாராய்ச்சியை அடுத்த பகுதியில் வெளியிடுவேம்.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

செல்வம்.

(௩௪௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

நமது அநுபவத்தின் பொருட்டுச் செலவிடுவதில், நாம் தேடும்பொருள்முழுவதையும் எவ்வாற்றானும்அழித்தலாகாது. வருவாயின்அளவினும்செலவின் அளவு சுருங்குதல் வேண்டும். அது இயலாதாயின் வரவுக்கொப்பவாயினும் செலவிடுதல் வேண்டும்.

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் எழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானா நாடு.

எவனிடத்தில் வருவாயிற் செலவு மிகுமோ அவன் வாழ்க்கை உள்ளதுபோலத் தோன்றி மெய்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமுமில்லாமற் கெடும்.

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

"வளவனாயினும்அளவறிந்தழித்துண்." "அளகேசனாறுலும்அளவறிந்துசெலவு செய்யவேண்டும்."

வரவுசெலவுக் கணக்கெல்லாம் அப்பொழுதப்பொழுது எழுதல் வேண்டும். எல்லா அமிசங்களையும் பன்னிப்பன்னி எழுதவேண்டு மென்கிற அவசியமில்லை. வந்த வரவு எவ்வளவு? வாங்கவேண்டிய பண்டங்களின் விலை எவ்வளவு? இன்னும் என்னென்ன செலவுகள் நேரிட்டிருக்கின்றன? என்னென்ன செலவுகள் நேரிடுவதாக இருக்கின்றன? அவையத்தனையும்அவசியமான செலவுகள் தானா? என்பவற்றை ஒருவாறாக அறியவேண்டும். வந்த வருமானம் இவ்வளவு, செலவழிந்த மொத்தம் இவ்வளவு என்று அப்போதைக்கப்போது எச்சரிக்கையாகப் பார்த்து வருபவன் ஆராதூரித்தனமாகச் செலவிடமாட்டான். பாங்கு பரிசனை யறிந்து குடும்பபாரத்தை நிர்வகிப்பவர் தமது வருவாயில் பாதிக்கதிகம் செலவிடலாகாது: தனிகராக விரும்புவோர் மூன்றிலொருபங்கில் தமது செலவுகளை அடக்கவேண்டு மென்பது ஐரோப்பியரில் அநுபவமுதிர்ச்சி யுடையவர்களது கொள்கை.

மிதமான வருமானமுள்ளவர்கள் உயர்ந்தஉடுப்பு உடுத்தால் அன்னப்பிடி வெல்லப்பிடியாகிவிடும். "உயர்ந்த உடுப்பு அயர்ந்த அடுப்பு." இவர்கள் போக்கியமான உணவைஉண்ண விரும்பினால் சாதாரண உடை உடுப்பதும் கஷ்டமாகும். ஐசுவரியவான்களும் பல விதத்திலும் கங்குகரையின்றிச் செலவு செய்து வந்தால் விரைவிலே ஊதாரிகளாய் அழிவர். எப்படிப்பட்டவர்களும் அததற்குரிய செலவைத் தங்கள் வருமானத்துக்கும்இருப்பிற்கும் ஏற்றவாறாக வரையறுத்துக் கொள்ளவேண்டும். ஓரொரு சமயம் ஏதாயினும் ஒரு வழியிற் செலவு மிகுவதாயின், மற்றொருவழியில் நேர்தலான செலவைக் குறைத்தல்வேண்டும். "குந்தித் தின்றால் குன்று மாளும்" ஆகையால், தனிகரானவரும் கலியாண முதலான விசேஷங்களில், தங்கள் நிலைமைக்கும் இருப்புக்கும் ஏற்றவாறு செலவைச் சிறிது தளரவிட்டாலும், மற்றை வாலாயமான செலவுகளை வரையறைப்படுத்தியே வைத்திருக்கவேண்டும். இன்னதற்கு இவ்வள வென்று செலவு ஏற்பட்டுவிட்டால், பின்பு அதைக்குறைப்பது இலகுவாய் இயலாது.

"உப்பில்லாவிட்டால்தெரியும் உப்பின் அருமை." ஆகையால் கையிருப்பாக ஒருபண்டம்இருக்கும்போதே மேலும்மேலும் வாங்

குதலாகாது. அதுசெலவாகி முட்டுற்றபின்னர் வாங்குவதே நலம். அப்போதுதான் அதன் அருமை விளங்கி, அதனைத் திட்டமாகக் கையாளும் வழக்கம் உண்டாகும். யாதொரு பண்டம் மலிவாக இருக்கிறதே, எப்படியும் கையிற் பொருளிருக்கிறதே என்று, அந்தப்பண்டத்தை வாங்கவேண்டா. பார்த்த பார்த்த பண்டங்களையெல்லாம் வாங்கவிரும்புவது கேவலம் குழந்தைகளின் இயற்கை. இன்றியமையாதவை நீங்க ஏனையவற்றை வாங்குவது வீண்விரயமே. இவ்வகைவிரயம் உப்பின் குவியலிற்படிந்த நீருக்குச் சமானமாகும்.

பண்டங்களைப் பாழாக்காமல், வீண்செலவு செய்யாமல், செய்தமட்டில் சிறுஞ்செட்டுமாகச் செய்யும் குடித்தனப்பாங்கைக் கண்டு எல்லோரும் நன்குமதித்து மெச்சுவர். உள்ளபடி தமக்குள்ளநிலைமையைப் பின்னும் பெரிதாக ஊரிலுள்ளவர் மெச்சுமாறு, கூழ்குடித்தும் பன்னீர் கொப்புளிக்கின்ற வீணர்கள் விருதுக்கு வேட்டையாடுவோராவர். உத்தியோகத்துக்குத்தக்க சுகந்தேடாமல், காலத்துக்கேற்ற கோலங்கொள்ளாமல், குடுமிக்கேற்ற கொண்டைபோடாமல், விம்புக்கு வேடங்கொண்டு வீண்விபரீதத்தால் பேதையர் வீண்செலவு செய்ய உடன்படுவர். இங்ஙனம் டால்டம்மாரம் போட்டுக்கொண்டு திரியும் டாம்பிகர்களுடையகதி கடன்பட்டுக் கடைகெடுவதேயாகும்.

குடிசூதுவிபசாரம் குடியைக் கெடுக்கும். குடிக்கிற வீடு விடியுமா? "சாராயத்தைத்தான் தினங்குடித்தால் காராளனும் கடைமகனுவான்" "சொக்கட்டான் சூது சதுரங்கம் இம்மூன்றும், துக்கமற்றோர் செய்யுந் தொழில்" "சூதர்களாகார்குடி" சூதுக்காரர்பணம் சுற்றியிருக்கிற பேயைச் சேரும். கூத்திக்கிட்டுக் குரங்காவார் சிலர்: வேசைக்கிட்டு விறகாவார் சிலர்.

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

இம்மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளன. "கள்ளும் சூதும் இருக்கிறஇடத்தில் கூத்திக்கள்ளனும்கூடவேயிருப்பான்." இவற்றை மேற்கொண்டவர்கள் கடன்பட்டுக் கடைகெடுவர். இம்மூன்றில் ஒன்றே குடிகெடுக்கப்போதும். இரண்டுமூன்றை மேற்கொண்டவர்க

*

ளுடைய கதி என்னும்? இவர்களை நம்பினர்கதி அதோகதிதான். சூதாடிக்கெட்டதற்குப் பாண்டவரே சாக்ஷி. கூத்திக்கிட்டுக் கெட்டதற்குக் கோவலனே சாக்ஷி. விறலிவிடுதூது சாக்ஷிக்குமேல்சாக்ஷி. சூதாடுவோரும் கூத்திக்கள்ளரும் மறைவிடந்தேடுவர். சாராயத்தைக்குடித்தவர்கள் தாங்களே தங்கள் பூராயத்தைச் சொல்லிவிடுவர். கள்ளைக்குடித்தவன் உள்ளதைச்சொல்வான். ஆகையால் இவர்களுக்கு சாக்ஷி வேண்டா.

எங்கிலாந்தில் கல்விகற்று இராசசேவை இராணுவசேவைமுதலிய சேவை செய்வோரினும் இரும்புவேலைநெசவுவேலை முதலியகைத்தொழில் செய்வோர் அதிகமாகப் பொருள் தேடியும், அனேகர் அப்பொருளிற் பெரும் பாகத்தைச் சாராயத்திற் கரைத்துவிட்டுப் பஞ்சைகளாகி இருக்கவிடமும் உண்ணச்சோறும் உடுக்கக்கந்தையு மின்றி அலைகின்றனர். இந்துதேசத்திலும் இருப்புப்பாதை பஞ்சாலை முதலிய தொழிற்சாலைகளில் பல கூலியாள்கள் தினந்தோறும் இரண்டணா முதல் ஒன்றரைரூபா வரையிற் பெறுகின்றனர். சகலகலாசாலைகளிற் கல்விகற்றுப் பட்டதாரிகளான அனேகர் இராசசேவையிலும் இதர சேவையிலும் பெறும்சம்பளத்தைக்காட்டிலும் அதிகமாகப் பெற்றும், இக்கூலியாள்களில் அனேகர் குடிக்குக் கொத்தடிமைகளாய்ப் பெண்டிர் பிள்ளைகளைத் தெருவில் அலையவிடுகின்றனர். பட்டதாரிகளாய்ப் பெரிய உத்தியோகங்களை நிர்வகிப்பவர்களிலும் சிலர் (பலரென்றும் வதந்தி) சிலகாலமாய் இந்தக்குடி யென்னும் அரசனுக்கு அடிமைகளாய் வரவுக்குமேற் செலவு செய்து கடனாளிகளாய் இடர்ப்படுவதும், கடன் கொடுக்க நிர்வாகமில்லை யென்று நியாயஸ்தலத்தில் தாக்கல் செய்வதும், மானமுள்ளவர்வைரத்தை யிழைத்துக் குடித்து அகாலமரண மடைவதும் நாணத்தை விளைவிக்கின்றன. ஆகவே கூலியாளர்களைப் பழிக்க நா எழுகின்றிலது. முன்னோர் சரியாகப் போனலல்லவோ பின்னோனாச் சரியாக நடத்தலாம்.

வரவுக்கு மேலே செலவு செய்யப்புகுவோர் களவு முதலிய பாவச்செய்கைகளைச் செய்யப்புகுவர். அல்லது கடன்படத் தலைப்படுவர். கடன்படத் தலைப்பட்டவர், கடனோடு கடன் கதம்பப்பொ

டிகாற்பணம் என்றும், நூறோடு நூறு நெய்யிற்சுட்டி பணிகாரம் என்றும், மேலுமேலும் கடன் வாங்கி, இதை எப்படித் தீர்க்கப்போகிறோம் என்றெண்ணுமல், கண்ணைமூடிக்கொண்டு செலவிடுவர். வரவு கொஞ்சமும் வலிப்பு மெத்தவுமாய்க் கடன்பட்டவர்கள், பின்னால் கடனைக்கொடுக்க வழியில்லாமல் கலக்கமடைவர். கடன்வாங்குகிறபோது இனிப்பு, கடன்கொடுக்கிற தென்றால் கசப்பு. கடன் வாங்குகிறவர் கடைத்தேறமாட்டார். மரமேறிக்கைவிட்டவனும் கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான். அரையிலே புண்ணும் அண்டையிலே கடனுமாகாது. ஆகையால் கடனில்லாச்சோறுகால்வயிறு போதும். எதிர்பாராத செலவு நேரிடுவதாயின், அது அவசியமானதாக இருக்கிறபக்ஷத்தில், அதை எவ்விதத்திலும் நிர்வகிக்கவேண்டும். "கடங்கொண்டுஞ் செய்வார் கடன்." அப்படிப்பட்ட தறுவாயிலும், கடன்படுவோமாயின், இதைத் தீர்த்தற்குப் பொருள் வரும்வழி உண்டா? இல்லையாயின், கடன்படாது நம்முடைய தாவர சங்கமப் பொருளிலே சிலவற்றை விற்றே செலவு செய்யலாமே" என்றிங்ஙனம் செம்மையாக ஆலோசித்து, எது செய்வது யுக்தமென்று தோன்றுகிறதோ அதனைச்செய்க. கடன்படுகிற வழக்கம் உண்டாகிவிட்டால் பின் அதனை ஒழிப்பது கஷ்டமாகிவிடும். கடன்படக் கூசாதவர் பொய்புனைக்கவும் பொய்வழக்குத் தொடுக்கவும் விசுவாசகாதஞ் செய்யவும் கூசார். வழக்குத்தீர்ப்பிலே பரிதானம் வாங்கவும் களவு கொலைகளைச் செய்யவும் கூசார். கடன்படல் எல்லாப்பாவங்களையும் வலிந்து கைப்பிடித்தழைக்குந் தூது.

(இன்னுந்தொடரும்.)

இங்ஙனம்,

தி. செல்வக்கேசவராயமுதலியார்.

வெண்பாவிலக்கணம்.

தமிழ்ப்பாஷையிலே வழங்கப்படும் பாக்கள் வெண்பா என்றும், ஆசிரியப்பா என்றும், கலிப்பா என்றும், வஞ்சிப்பா என்றும் நான்குவகைப்படும். இந்நான்கனோடு மருட்பா என்பதனையுஞ் சேர்த்துப்பாக்கள்ஐந்துவகைப்படும் என்பாருமுளர். "ஐந்து பாவுடை நால்வகைக் கவிக்கதி பதியாய் வந்து" என்பது பாரதச் சிறப்புப் பாயிரம். மருட்பா என்பது வெண்பா முன்னும் ஆசிரியப்பாப் பின்னுமாக வருவதோரியல்புடைய ஒருபா. அஃது இருவேறு பாவின் சேர்வையாய் இருகூறெனப்படுவ தன்றித் தானே தனி நின்று ஒருபா எனப்படுந் தன்மையுடைய தன்று. அது பற்றியே அதனை விலக்கிப் பாக்கள் நான்குவகை என்றே யாப்பருங்கலம் முதலிய யாப்பிலக்கணங்களெல்லாம் எடுத்துக் கூறுவனவாயின. "வெண்பா வாசிரியங் கலிவஞ்சி யென்று-பண்பாய்ந்துரைத்த பாநான் காகும்" என்பது யாப்பருங்கலம்.

இந்நால்வகைப்பாக்களுள்ளும் வெண்பா, ஆசிரியப்பா என்னும் இருபாக்களுமே புலவர்களாற் பெரும்பாலும் விரும்பிப் பாடப்படும் வழக்குடையன. சங்கத்துச் சான்றோரும் மற்றைச் சான்றோருமாகிய அப்பொழுதைப் புலவர்கள் ஆக்கிய பாக்களை யெல்லாம் நோக்குழி வெண்பாவும், ஆசிரியப்பாவுமே பெரும்பாலனவாகக் காணப்படும். வெண்பா என்று காணப்படுவன;—நாலடியார், நான்மணிக்கடிகை, பெருந்தேவனார் பாரதம் முதலாயின. ஆசிரியப்பா வென்று காணப்படுவன;—திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, அகநானூறு, புறநானூறு முதலாயின. கலிப்பாவும் வஞ்சிப்பாவும் பெருவரவினவல்ல. அப்பொழுதைப் புலவர்கள் போல இப்பொழுதைப் புலவர்களும் அவ்விருவகைப் பாக்களையுமே செவ்வியன எனக்கொண்டு முத்தகமும் பிறவுமாகப் பெரிதும் இயற்றுவர். முத்தகம்-தனிக்கவி. ஆசிரியப்பா வியற்றும் புலவர்களினும் வெண்பாவியற்றும் புலவர்களே மிகப்பலராவர்.

வெண்பாவிற்கு வெள்ளை என்றும், அந்தணர்பா என்றும், முதற்பா என்றும் பெயருண்டு. வெண்பா, வெள்ளை என்பன வெண்மை போன்ற தன்மையுடைமை பற்றி வந்த ஒப்பினுகிய பெயர்கள். வெண்மை என்னும் நிறம் பிறநிறம் விராயவழித் தன்னியல்பு கெடுதல்போல, வெண்பாவும் பிறதளை விராயவழித் தன்னியல்பு குன்றிப் பிழைப்படுதலே வெண்மை போன்ற தன்மையாகும். அந்தணர்பா என்பது அந்தணர்சாதியுடைமைபற்றி வந்த பெயர். முதற்பா என்பது அந்தணர்பிள்ளைத் தமிழினும் பிறவற்றினும் முன்னிற்றல்பற்றி வந்த பெயர்.

வெண்பாவிற்குரியசீர் வெண்சீர் என்றும், வெண்பாவிற்குரிய தளை வெண்டளை என்றும், வெண்பாவிற்குரிய ஓசை செப்பலோசை என்றும் சொல்லப்படும். நேரசையீற்று மூவசைச்சீர்களாகிய தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் என்னும் வாய்பாட்டுச்சீர்கள் நான்கும் வெண்சீர் எனப்படும். வெண்சீர் வெண்டளை என்றும், இயற்சீர்வெண்டளை என்றும் வெண்டளை இருவகைப்படும். வெண்சீரின் பின்னே நேரசையை முதலாகக் கொண்ட மற்றொரு வெண்சீராவது இயற்சீராவது வந்து பொருந்தி நடப்பது வெண்சீர் வெண்டளையாகும். இயற்சீர்களாகிய தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் வாய்பாட்டுச் சீர்கள் நான்கனுள்ளே தேமா, புளிமா என்னும் மாவீற்றுச் சீரின்பின் நிரையசையையும், கருவிளம், கூவிளம் என்னும் விளவீற்றுச் சீரின்பின் நேரசையையும் முதலாகக்கொண்ட ஒரு வெண்சீராவது இயற்சீராவது வந்து பொருந்தி நடப்பது இயற்சீர் வெண்டளையாகும். இவ்விரு வெண்டளைகளுங் கலந்து வரும் வெண்பாக்களே பெரும்பாலன. கலவாது தனித்தனியேவரும் வெண்பாக்களுமுள. "யாதானு நாடாமா லூராமா லென்னெருவன்-சாந்துணையுங் கல்லாத வாறு" என்பது முற்றும் வெண்சீர் வெண்டளை பெற்றுவந்த குறள்வெண்பா. "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி-வாலெயி றூறிய நீர்" என்பது முற்றும் இயற்சீர் வெண்டளை பெற்று வந்த குறள் வெண்பா.

இவ் வெண்டளையே கட்டளைக் கலித்துறைக்கு முரியதாயினும் ஓரடியினிறுதி மற்றையடியின் முதலோடு பொருந்துழி நியமபாகக்

கொள்ளப்படுவதன்று. அவ்வாறே வெண்பாவினும் ஓரடியினிறுதி மற்றையடியின் முதலோடு பொருந்துழியுங் கொள்ளப்படும் என்று பாரதவெண்பாவிலும் ஒருதாரணங்காட்டி ஒருவர் கூறினர். அவர் காட்டிய கவி பிரதியோடகப்படாமையானும் அவ்வாறே வேறும் வெண்பாக்கள் வரக்காணாமையானும் அவர் கூற்றுச் சந்தேகத்திற் கிடனாயிற்று. பாவினோசைகளெல்லாம் நாவினாலோதி எஃகு செவி கருவியாக அஃகியறிதற்பாலனவன்றி வேறு வகையாற் கூறுந்திற முடையனவல்ல. அவ்வாறே செப்பலோசையும் அறிதற்பாலது.

அளவடியுஞ் சிந்தடியும் வெண்பாவுக்குரிய அடிகளாகும். நான்குசீர் பெற்று வருவது அளவடியாகும். மூன்று சீர் பெற்று வருவது சிந்தடியாகும். வெண்பாக்களெல்லாவற்றினும் இறுதியடி சிந்தடியாயே இருத்தல்வேண்டும். மற்றையடியொன்றுஞ் சிந்தடியாய் வராது. இறுதியடியின் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுடைய அசைச்சீர்களுள் ஒன்றாயிருத்தல் வேண்டும். நாள், மலர் என்பன நேரசைநிரையசைச்சீர்களுக்கும், காசு, பிறப்பு என்பன நேர்பசை நிரைபசைச்சீர்களுக்கும் வாய்பாடுகளாம். நேரசையோடு குற்றுகரமாவது முற்றுகரமாவது பொருந்தி ஒரு சொல் விழுக்காடுபட நிற்பது நேர்பு என்னும் அசையாகும். நிரையசையோடு அவ்வுகரங்களியைந்து அவ்வாறு நிற்பது நிரைபு என்னும் அசையாகும்.

நால்வகைப்பாக்களையும் நன்குபாடும் பயிற்சியிற் சிறந்த பாவலர்தாமும் வெண்பாவிலே பலவாறு தடுமாறுவர். வெண்பாவிலே சீரும், தளையும், பிறவுஞ் சிறப்புறவமைத்தல் அதிகிருச்சிரமேயாம். கிருச்சிரம்—பிரயாசம். இதுபற்றிப்போலும் "புலவர்க்கு வெண்பாப் புலி" என்பர். மோனைகளுள்ளே பொழிப்புமோனையும், எதுகைகளுள்ளே அடியெதுகையும் அமைந்துவருதல் வெண்பாவிற்குச்சிறப்பினைக் கொடுக்கும்.

இவ்வியல்புடைய வெண்பாவும் குறள்வெண்பா என்றும், சிந்தியல்வெண்பா என்றும், நேரிசைவெண்பா என்றும், இன்னிசை வெண்பா என்றும், பஃறொடைவெண்பா என்றும் ஐவகைப்படும்.

இரண்டடியுடையதாய் முடியும்வெண்பாக் குறள்வெண்பாஎன்று சொல்லப்படும். இதற்கு வெண்குறள் என்றும் பெயருண்டு. இது முதலடியிலே நான்குசீர்களும், மற்றையடியிலே மூன்று சீர்களுமாக ஏழுசீர்கள் பெற்று முடியும். திருவள்ளுவர்குறள், ஔவைகுறள் முதலியன குறள்வெண்பாவினால் வருவன.

மூன்றடியுடையதாய் முடியும் வெண்பாச் சிந்தியல் வெண்பா எனப்படும். இது முதலாமடியிலும், இரண்டாமடியிலும் நந்நான்கு சீரும் இறுதியடியில் மூன்று சீருமாகப் பதினொரு சீர் கொண்டு முடியும். ஆசாரக்கோவை, சிதம்பரச்செய்யுட்கோவை முதலிய நூல்களிலே சில கவிகள் சிந்தியல்வெண்பாவாகப் பாடப்பட்டிருக்கின்றன. குறள்வெண்பா, சிந்தியல்வெண்பா என்னும் இரண்டினையுங் குறுவெண்பாட்டு என்னும் ஒரு பெயரால் வழங்குவாருமுளர்.

நான்கடியுடையதாய் அந்நான்கடியுள்ளே இரண்டாமடி ஒரூஉ வெதுகை பெற்றுவரும்வெண்பா நேரிசைவெண்பா என்று சொல்லப்படும். நேரிசைவெண்பா இருகுறணேரிசை என்றும், ஆசிடை நேரிசை என்றும் இருவகைப்படும். இரண்டாமடியின் நான்காஞ் சீரினை விலக்கும்போது இரு குறள்வெண்பாவாகக் கொள்ளும்படி இரண்டாமடியின் மூன்றுஞ்சீர் காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டுச் சீர்களுள் ஒன்றாகி நிற்கப்பெற்று வருவது இருகுறணேரிசையாகும். அது நிரையசையை முதற்கொண்டு பாடப்படும். இரண்டாமடியின் மூன்றுஞ் சீர்க்கு முன்னே ஒரு குறள்வெண்பாவாகக் கொள்ளற்குரிய சீரளவிலமையாது வெண்டளைக்கியைய ஓரசையாவது ஈரசையாவது சேர்த்து முடிக்கப்படுவது ஆசிடைநேரிசைவெண்பாவாகும்.

இரண்டாமடியிலே ஒரூஉவெதுகை பெறாது நான்கடியுடையதாய் வரும் வெண்பா, இன்னிசைவெண்பா என்று சொல்லப்படும். நாலடியார் முதலிய நூல்களிலே சில இன்னிசைவெண்பாக்களேயாம்.

நான்கின்மிக்க பலவடிகளையுடைய வெண்பாப் பஃறொடைவெண்பா எனப்படும். நேரிசைவெண்பாப்போன்று நான்கின்மிக்க

பலவடிகளையுடையதாய் வரும் வெண்பாவினை வீரசோழியகாரர் கலிவெண்பா என்று கூறுவர். இக்கலிவெண்பா உலாவினும் மடலினும் நியமமாகக்கொள்ளப்படுகின்றது. யாப்பருங்கலகாரர் கலிவெண்பாவினைக் கலிப்பாவகையுள் ஒன்றாகவைத்துத் "தன்றளை யோசை தழீஇநின் றீற்றடி, வெண்பா வியலது கலிவெண் பாவே" என விதியுங் கூறினர். கலிவெண்பாவிலே இவ்விருவர் கூற்றும் வெவ்வேறுகின்றது.

இந்த வெண்பாக்களுள்ளும் பெருவழக்குடையது யாதென்றாராய்வுழி நேரிசை வெண்பாவே பெருவழக்குடையதாகக் காணப்படும். பெருவழக்காறுபற்றி வெண்பா என்னும் பொதுப்பெயரை நேரிசை வெண்பாவிற்கு ஒரு சிறப்புப் பெயராகவும் வழங்குவர். ஒற்றொழித்து ஐம்பத்தொன்று என்னும் எழுத்துவரையறை பெற்று முடியும் நேரிசை வெண்பாவே சிறப்புடையதென்று சிலர்கூறுவர். அவ்வாறே எழுத்தளவை கூறுதல் நேரிசை வெண்பாவிற்கு யாண்டும் பெறப்படாமையானும், சான்றோர் வெண்பாக்களிலே அங்ஙனம் வருதலின்மையானும் அவர் கூற்றுப் பொருந்துவதன்று. பிற்காலச்சான்றோர் வெண்பாக்களுள்ளே புகழேந்திப்புலவருடைய நளவெண்பாவிலே மோனை, எதுகை முதலியவற்றினிலையும், சொற்கள் ஒன்றோடொன்று சேர்ந்திணங்கும் போக்காகிய கதிநிலையும் பயனிலைமுன்னும் எழுவாயும் எச்சமும் பின்னுமாக நிற்கும் வாக்கியநிலையும் பிறவுஞ் சிறந்தமைந்தன எனக்கொண்டு அவ்வெண்பாவினையே பாராட்டுவாரும் பலர். அவரை "வெண்பாவிற் புகழேந்தி" எனப் புகழ்ந்தாருமுளர்.

இங்ஙனமே வெண்பாவின் இலக்கணமாக இன்னுங் கூறத்தகுவன பலவுளவாயினும் அவையெல்லாம் விரிவஞ்சியும், சேரக்கற்று விளக்குதலஞ்சியும் விலக்கப்பட்டன. இங்கே கொள்ளப்பட்டவைகளும் யாப்பிலக்கணங்கள் பலவற்றை அநுசரித்தும், சான்றோர் வெண்பாக்களின் போக்குகளை நோக்கியும் எழுதப்பட்டன. ஆதலிற் குற்றங்களை நீக்கிக் குணங்களைக் கொள்ளுதல் செந்தமிழ் கற்போர்க்குக் கடனாகும். தமிழ்ப்பாஷையிலுள்ள ஐந்திலக்கணங்களுள்ளே ஒன்றாகிய யாப்பிலக்கண விஷயமாதலால் இதுவுஞ் செந்தமிழுக்குரியதேயாம்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

ஸ்ரீ:

நன்னூற்குறிப்பு.

(௯உ௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

(உ௬௭) மின்பின் பன்கன் றொழிற் பெயரனைய.

(குறிப்பு) பன் - அறுவாட்பல். இது கதிர் தாள் முதலியன பன்னுதற்குக் கருவியாதலாற் பன்னெனப்பட்டது. பன்னுதல் கொய்தற்பொருளில் வழங்குவது பாண்டிநாட்டுப்பெருவழக்கு. இப் பன்னுடைய அறுவாளைப் பன்னறுவாளென்று வழங்குவதுண்டு. உ-ம்.—பன்னுக்கடிது முதலியன. (அறுவாளின் பற்கடிதென்பது பொருள்).

(௨௫௯) ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று
யிருதிணை ஐம்பாற் பொருளையுந் தன்னையும்
... ... சொல்லே.

(குறிப்பு) சொல்தன்னை விளக்குதல் தனக்குத் தன்னையே பொருளாகக்காட்டுதல். உ-ம்.— 'தெங்குநீண்டு ஈற்றுயிர் மெய் கெடும் காய்வரின்,' 'பனைமுன் கொடிவரின்,' 'நெல்லுஞ் செல்லுஞ் கொல்லுஞ்சொல்லும்,' 'ஆமாகோனவ்வணையவும் பெறுமே,' 'செய்யு நிகழ்பெதிர்வும்' 'மீன்றவ்வொடுபொரூஉம்' என்றற்றொடக்கங்களின் தெங்கு முதலிய சொற்கள் தென்னைமரமுதலிய பொருளை உணர்த்தாது அவ்வச்சொற்களாய தம்மையே உணர்த்திநிற்றல் கண்டுகொள்க. இதுவுமன்றி மாற்றம், நுவற்சி, செப்பு, உரை; கரை, நொடி, இசை முதலியனவும் சொல்லாகியதன்னையே யுணர்த்துதலும் கொள்க. இச்சூத்திரத்தால் சொல் செவிப்புலனாகிய ஓசையாய்நின்று பொருளை உணர்த்துவதுமன்றி அவ்வோசையாகிய தன்னையும்தானே உணர்த்துமென்பது பெறப்பட்டது. இதனை 'வயிரஊசியும் மயன்வினை இரும்பும், செயிரறுபொன்னைச் செம்மைசெய்யாணியும், தமக்கமைகருவியும் தாமாமவைபோல், உரைத்திறம் உணர்த்தலும் உரையது தொழிலே' என்றார் ஆசிரியரகத்தியனார்' மென உ௬௫-ம் சூத்திரத்தின் விருத்தியுரையிற் கண்டமையும் இங்கு நோக்கத்தக்கது.

(உ௬௪) பெண்மைவிட்டாணவாவுவபேடாண்பால்
ஆண்மைவிட்டல்லதவாவுவபெண்பால்
இருமையுமஃறிணையன்னவுமாகும்.

(இதன்பொருள்) பெண்மைவிட்டு ஆணவாவுவபேடு ஆண்பாலன்னவும்-பெண்தன்மையைவிட்டு ஆண்தன்மை விரும்பப்படுவனவாகிய பேடு ஆண்பால் போலவும்; ஆண்மைவிட்டல்லதவாவுவபேடு பெண்பாலன்னவும்-ஆண்தன்மையைவிட்டு பெண்தன்மையை விரும்பப்படுவனவாகிய பேடு பெண்பால் போலவும்; இருமையுமவாவுவ பேடு அஃறிணையன்னவும்-ஆண்தன்மையும் பெண்தன்மையுமாகிய இவ்விருதன்மையும் விரும்பப்படுவனவாகிய பேடு அஃறிணைபோலவும்; ஆகும்-ஆம் (என்றவாறு).

(குறிப்பு) அவாவுவ என்பதனை இருமையுமென்பதற்கும்: பேடு என்பதனை அல்லதவாவுவ, இருமையுமவாவுவ என்பவற்றிற்கும்: அன்னவுமென்பதனை ஆண்பால் பெண்பால் என்பவற்றிற்கும் கூட்டுக.

பெண்மைவிடுதல்-அதன்கண் உள்ள பெண்தன்மை நன்குபுலப்படாமை முதலியவற்றாற் சொல்வோன் குறிப்பின் உட்படுத்தாது விடுதல். ஆண்மை விடுதலுக்கும் இவ்வாறுரைத்துக்கொள்க.

ஆணவாவுதல் அதன்கண் உள்ள ஆண்தன்மை நன்குபுலப்படுதல் முதலியவற்றாற் சொல்வோன் விருப்பினுட்படுத்தல். பெண்ணவாவுதலுக்கும் இவ்வாறுரைத்துக்கொள்க.

இங்ஙனஞ்சொல்வோன் விருப்பினுட்பட்டதனை விவக்ஷாதீனமென்பர் வடநூலார். இதுவே தமிழ்நூல்களுட் சொல்வோன் குறிப்பென வழங்கப்படும். இதனை ஆசிரியர் 'முதலிவை சினையிவையெனவே றுளவில, வுரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும்' எனப் பிறவிடத்தும் கொண்டு வழங்குதல் கண்டுகொள்க.

ஆண்-இங்கு ஆண்மைத்தன்மை உணர்த்திநின்றது. அவாவுவ வென்பது செயப்பாட்டு வினையாலணையும் அஃறிணைப்பன்மைப்பெயர். அவாவுவ பேடுஎன்பது பெயரடுக்கு. விட்டுஎன்னும் வினையெச்சங்கள் அவாவுவ என்னும் செயப்பாட்டின் பகுதியாகிய அவாவென்

னும் செய்வினைமுதனிலைகொண்டன. அன்னவுமென்பதில் உம்மை எண்ணுப்பொருளில் வந்தது. ஆசிரியர் தம் விருப்பொடும் பொருந் திய (குறிப்பொடுபட்ட) இருமையுங்கருதிக்கூறினமையால் அவா வும் பேடன், அவாவும்பேடி என அவ்வப்பாற்கிணங்கக்கூறுது அவாவுவபேடு என அஃறிணையொப்பக் கூறினர். இதனுல் ஆணு றுப்பும் பெண்ணுறுப்பும் விரவி ஆணுமாகாது பெண்ணுமாகாது நின் றஅலி, சொல்வோன் குறிப்போடுபட்டு ஆண்பால்போலவாயினும் பெ ண்பால் போலவாயினும் அஃறிணைபோலவாயினும் வைத்துக்கூறப் படும் என்றவாருயிற்று. (உ-ம்.)

பேடன்	வந்தான்	ஆண்பால்.
பேடி	வந்தாள்	பெண்பால்.
பேடு	வந்தது	அஃறிணை.
பேடுகள்	வந்தன	அஃறிணை.

அன்னவுமென்றதனுல் ஆண்பன்மையும் பெண்பன்மையும் தனி த்தனியாகியும் விரவியும் பலர்பாலாவதுபோல இதுவும் பேடர்கள், பேடிகள், பேடியர் எனப்பலர்பாலிலும் பேடுவந்தது பேடுவந்தன எனப்பால்பகாஅஃறிணைபோலப் பாற்பொதுவினும் வழங்கப்படும் என்பதாயிற்று.

பேடென்னுஞ்சொல் இங்குத் தன்னையே உணர்த்தாது பொருளை யுணர்த்திநிற்றலால் அலி அழிதூ மகண்மா முதலியவற்றையும் இரு திணை ஐம்பாலிலும் வைத்தொட்டிக்கொள்க.

(உ௮௬) வினையின் பெயரே படர்க்கை வினையா
லணையும் பெயரே யாண்டு மாகும்.

(குறிப்பு) வினைப்பெயரிருவகைப்படும்: வினையின் பெயரும் வினையாலணையும் பெயருமென. இவற்றுள் வினையின்பெயராவன;— மூவிடப்பெயர்களுக்கும்பயனிலையாய் அவற்றோடொற்றுமைப்பட் டுவரும் யானுணல், நீயுணல், அவனுணல் என்றற்றொடக்கத்தன. இவை எனதுணல், நினதுணல், அவனதுணல் என வேற்றுமைப் பட்டு நிற்கும் தொழிற்பெயர்போலப் படர்க்கையாகாது யானுண்க, நீயுண்க, அவனுண்க என ஒற்றுமைப்பட்டுநிற்கும் வியங்கோள்போ

லத்தம்எழுவாய்க்குரிய இடமே தமக்கும் இடமாகப்பெறுவனவாய் நிற்றலால், அவை மூன்றிடத்திற்கும் பொதுவோ ‘அல்லனபடர்க்கை’ என்றதனால் படர்க்கையிடத்திற்கே உரியவோ என ஐயப்பாடு தோன்றுமாதலால் அதனையகற்றற்கு ‘வினையின்பெயரேபடர்க்கை’ என விதித்தார்.

யானுணல் என்றற்றொடக்கத்து வினையின் பெயர் அல்லீற்று வியங்கோள்போல மூவிடப்பொதுவாகக்கொள்ளில் உண்டாம் இழுக்கென்னையெனில்;—அங்ஙனங்கொள்ளில் அப்பெயர் எழுவாயாகிநின்று பிறிதோர் பயனிலைகொள்ளுமிடத்து, யானுணல் எளியேன், நீயுணல் எளியை, அவனுணல் அரியன் என முறையே மூவிடப்பயனிலைகளையுங்கொள்வனவே அன்றி, அவை, யானுணல் இனிது, நீயுணல் எளிது, அவனுணல் அரிது எனப்படர்க்கையஃறிணைப்பயனிலைகொள்வதற்கு இலக்கணமின்றி வழூவாய் முடியுமாதலால் இக்குற்றம் வாராதொழிதற்கு, ‘வினையின் பெயரே படர்க்கை’ என விதித்தாரென்க. யானுணல் எளியன், நீயுணல் எளியை என்றற்றொடக்கத்தன வழுவாமோஎனின்;—அவை ‘உயர்திணைதொடர்ந்த பொருள்முதல்’ என்னுஞ் சூத்திரவிதிப்படி சார்த்திமுடித்தலென்னும் இலக்கணம்பெற்றமையால் வழூவாகாவென்க.

(௨௮௮) ஒருவனொருத்திப்பெயர்மேலெண்ணில.

(இதன்பொருள்) ஒருவன் ஒருத்தி பெயர்—ஆண்பால் பெண்பாற்பெயர்கள்; மேலெண்ணில-இரண்டு முதலிய எண்ணை உடையனவல்ல (என்றவாறு).

(குறிப்பு) ஒருவன் ஒருத்தியென்பன முறையே ஆண்பாலையும் பெண்பாலையும் உணர்த்தவந்த வாய்பாடுகள். இங்ஙனமாதல் ‘ஒருவ னொருத்தி பலரொன்று பலவென’ ‘ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்’ என்பவற்றுள்ளுங்கண்டுகொள்க. ஒருவனொருத்தி உம்மைத்தொகைநிலைத்தொடர். அது பெயரென்பதனோடு பண்புத்தொகையாகத்தொடரப் பகரவொற்றிரட்டப்பெற்று மேலெண்ணில என்னும் பயனிலைக்கு எழுவாயாகிநின்றது. ஆண்பாலும் பெண்பாலுமாகியுள்ளபெயர்கள் என்றவாறாயிற்று. தனக்குக்கீழான எண்ணையுடைய எண்ணெல்லாம் மேலெண்ணாதலால்

மேலெண்ணென்றதற்கு இரண்டு முதலிய எண்ணெனப் பொருளு ரைக்கப்பட்டது. இதனால் 'கிளையெண்' என்னுஞ்சூத்திரத்துப் பின்னுமெடுத்தாளவேண்டிப் பொருட்பெயர்வகையுள் எண்ணெனப் பொதுப்படக்கூறியிருப்பினும் ஆண்பால் பெண்பாற்பெயர்கள் எண் ணால் வருமிடத்து ஒன்றென்னும் எண்ணால் வருவனவேயன்றி, இர ண்டுமுதலிய எண்களால் வாராவென விலக்கப்பட்டனவெனவறிக. இவ்வாறே அஃறிணையொருமை பன்மைகளுக்கும் முறையே 'ஒன் றனெண்' 'ஒன்றலெண்' என அவ்வச்சூத்திரத்து விலக்கப்பட்ட மையும் காண்க.

(உ௩௯) ஒருவ ரேன்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றேன்ப.

இஃது,ஒன்றென்னும் எண்ணாற் பலர்பாற்பெயர்வருமாறுணர்த் துதனுதலிற்று.

(குறிப்பு) (உ-ம்.) ஆணோ பெண்ணோ யாரோ ஒருவர் வரு கிறார், என்பதனுள் ஒருவரென்பது ஆண்பால் பெண்பால் இரண் டற்கும் பொதுவாய் வருதல்கண்டுகொள்க. இது பால் ஐயத்தில் வருவது. இங்ஙனமன்றி ஆசிரியரொருவர், அத்தையார் ஒருவர், என்பன 'உவப்பினும் உயர்வினும்' என்னுஞ் சூத்திர உதாரணமா கிய வழுவமைதியேயன்றி இச்சூத்திரத்திற்கு உதாரணமாகாவென அறிக. ஆடவருள் ஒருவர் அறத்தின்வழிநிற்பார், பெண்டிருள் ஒ ருவர் கொழுநன்வழிநிற்பார் என்பவற்றுள்ள ஒருமை எண்ணுப்பொ ருளுணர்த்தாது சின்மைப்பொருளுணர்த்தலால் அதனை இச்சூத்திர த்திற்குக்காட்டுவது ஆராயத்தக்கது. வடமொழியில் ஏகசப்தம் எண்ணுப்பொருளேயன்றி சின்மை சிறுமை தனிமை வேற்றுமை முதலிய பொருள்களை உணர்த்துவதுபோல் ஒன்றென்னும் சொல் லும் சின்மை சிறுமை தனிமை வேற்றுமை சுட்டு என்னும் பொ ருள்களை உணர்த்துவதுமுண்டு.

சின்மைப் பொருளையுணர்த்துவதற்கு உ-ம்.—ஒரு சிலர் என்ப தாம். இது சிற்சிலர் எனப்பொருள்படுதல் கண்டுகொள்க.

சிறுமைப்பொருட்கு உ-ம்:—ஒரு சிறிதென்பதும் வடமொழி யின் ஏகதேசம் என்பதின் மொழிபெயர்ப்பாகிய ஒருபுடை, ஓரிடம் என்பனவும் ஆம்.

தனிமைப்பொருள்பற்றிவருவதற்கு உ-ம்.—வடமொழியில் ஏகநாயகம் என்பதன் மொழிபெயர்ப்பாகிய ஒருநாயகம் என்பதாம்.

சுட்டுப்பொருளுக்கு உ-ம்:—'வள்ளுவனென்பானோர் பேதை' என்பதாம். இவ்வாறு ஒன்றென்பது பலபொருளுணர்த்தல் கண்டு கொள்க.

திரு. நாராயணையங்கார்.

௨

ஓரடித் தமிழ்ச் சொற்கள்.

வடமொழியை யுற்றுநோக்குமிடத்து அஃது ஒரு தொகைப்பட்ட தாதுக்களாலாகிய பாஷை யென்பது வெளிப்படையாம். ஒரு தாது எண்ணிறந்த பதங்களுக்கு மூலமாம். உலகத்துப் பொருளெல்லாம் குணப்பண்பும் தொழிற் பண்புமென விருவகைச் சிறப்பியல்புக உயுடையனவாதலின், குணங்களையுந் தொழில்களையுமுணர்த்தற்குப் போதிய குறியீட்டுச் சொற்களை ஆக்கிக் கொள்ளுமிடத்துப் பொருளெல்லாவற்றையும் மிக வெளிதிலே பெயரிட்டு வழங்குதல் கூடுமென்பது கருதியே சொற்களுக்கு வித்தாகிய தாதுக்களை முதனூலாசிரியர் வகுத்தாராகற்பாலர்.

வடமொழியிலே ஒவ்வொரு தாதினின்றும் பல சொற்கள் தோன்றி ஒவ்வொரு கணமாக வழங்குதல்போலத் தமிழிலும் ஒவ்வோரடியினின்றும் பல சொற்கள் தோன்றி ஒவ்வொரு கணமாக வழங்குமாயினும், வடமொழியிலே சொற்களுக் கெல்லாந் தனித்தனியே தாது நிச்சயிக்கப்பட்டிருத்தல்போலத் தமிழ்ச் சொற்களுக் கெல்லாந் தாதுக்களைப் பூர்வநூலாசிரியர்கள் நிச்சயித்து வைத்தாரில்லை. ஆசிரியர் தொல்காப்பியனாரும் "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்றார். 'விழிப்பத்தோன்றா' வென்றமையால் ஒவ்வொரு தமிழ்ச்சொற்குங் காரணமுண்டென்பது நன்கு துணியப்படும். தமிழிலும் ஒவ்வோரடியாகப் பிறந்து வழங்குஞ் சொற்கணங்கள் உளவென்பது மேல்வரு முதாரணங்களாற் காட்டுதும்:—

1. அண்—சமீபப்பொருள் தரும் ஓர் உரிச்சொல். இதனடியாகப் பிறந்து வழங்குஞ் சொற்களாவன.

அண்மை—சமீபம்.
அணை—சார். கரை.
அண்ணன்—அடுத்தோன். (தமையன்.)
அணவு—சார்.
அண்ணல்—அடைதற்குரிய பெரியோன்.
அண்டு—சார்.
அண்டை—அருகிடம்.
அட்டை—அடுக்கப்படுவது.
அணி—உடம்பை அணைந்து நிற்பது. (ஆபரணம்.)
அணங்கு—உடனிருந்து வருத்துவது. (நோய்)பக்கத்தே [கொள்ளத் தக்காள்—(பெண்.)
அண்ணம்—நாவையடுத்துள்ளது.
அண்ணி—அண்ணன் என்பதன் பெண்பால்.
அணம்—அண்ணம்.
அண்ணர்—பகைவர்—(சமீபத்தில் வராதவர்.)
அண்டார்—பகைவர்.
அண்டல்—கிட்டுதல்.
அண்டலர்—பகைவர் (கிட்டாதவர்.)
பட்டணம்—பட்டுக்கலையணிவிருப்பது. பட்டு-சிற்றூர்.

2. மண்—நிலைபெறல், பெருமை, பொருந்தல்.

மன்—அரசன்—(பெருமையுடையோன்)
மன்னன்—அரசன்.
மன்னு—நிலைபெறு.
மனை—வீடு—(நிலைபெறுமிடம்.)
மன்னல்—நிலைபெறல்.
மன்று—பெருமையுடையோர் சேருமிடம், சபை.
மன்றல்—கல்யாணம் (பெருமையினையுடையது.)
மன்னர்—பொருந்தார். (பகைவர்.)
மன்றம்—மன்று.

3. படு—இச்சொல் ஆக்கப்பொருளில்வரும்போதுபடுத்தும் கேட்டுப்பொருளில் வரும்போது எடுத்தும் உச்சரிக்கப்படும்.

படுதல்—உண்டாதல் (உப்புப்படுதல்.)
படல்—உண்டாதல்.
பாடு—படுதல்.

பட்டை—தோல்.
பட்டம்—குளம்.
பட்டாங்கு—உள்ளவாறு.—விளைந்தவண்ணம்.—மெய்.
பட்டு—பொருள்கள் படுமிடம்.—சிற்றூர்.
பட்டணம்—சிற்றூர்களை அணிவியிருப்பது நகரம்.
பட்டி—சிற்றூர்-பொருள்கள் படுமிடம்.-வளம்படுமிடம்.
படுகர்—மருதநிலம்.—வளமுடைய நிலம்.
படை—உண்டாக்கு.
படைத்தல்—உண்டாக்கல்.
படித்தல்—பதித்தல்.
படு—சாதல்—உறங்கல்.
படுதல்—சாதல்.
படை—போர்—சேனை.
படுத்தல்—கொல்லல்.
படுகளம்—போர்க்களம்.
படுகாடு—சுடுகாடு.
படுநிலம்—பாலைநிலம்.
படை—ஆயுதம்.
கண்படை—நித்திரை.
பட்டம்—ஆயுதம்-படுக்கை.
படுக்கை—பாயல் முதலியன.
பட்டி—வஞ்சன்.
படிறர்—திருடர்—வஞ்சர்.
படிறு—பொய்-வஞ்சம்.
பட்டிமை—வஞ்சம்.

4. கட—தாண்டல், செலுத்தல்.

கடத்தல்—தாண்டல்.
கடப்பாடு-தாண்டற்பாலது. செய்யவேண்டுவது.
கடம்—அருவழி.
கடல்—சமுத்திரம்—தாண்டப்படுவது.
கடவுள்—அனைத்தையுங் கடந்தவர்.
கடவை—ஏணி—கடத்தற்கருவி.
கடறு—அருநெறி.
கடன்—கடத்தற்குரியது. (இருணம்.)
கடா—வினா—கடத்தற்குரியது.
கடா—ஆடு எருமை இவற்றினாண்-செலுத்தற்பாலது.
கடை—கடந்தது-ஈறு.

5. குவவு—திரட்சி.

குவடு—திரட்சி-சிறுமலை.

குவால்—குவிதல்.
குவிதல்—திரளல்.
குவிவு—திரட்சி.
குவை—திரட்சி.
கொவ்வை—திரண்ட கனிகளையுடைய செடி.
கொம்மை—திரட்சி—தனம்.

6. ஒ—பொருந்தல், ஒன்றுதல், மெலிதல்.
ஒக்கல்—பொருந்தல்- உறவு.
ஒத்தல்—பொருந்தல்.
ஒடுக்கம்—ஒன்றுதல்.
ஒடுங்கல்—மெலிதல்.
ஒட்டம்—பொருந்தல்.
ஒட்டல்—உடன்படல்.
ஒட்டார்—பிரிந்தோர்.
ஒட்டு—பொருந்து.
ஒட்டுநர்—மித்திரர்.
ஒட்டை—மெலிந்தது, ஒட்டகம்.
ஒட்டகம்— ,,
ஒண்ணல்—பொருந்தல்.
ஒண்மை—அழகு, பொருந்தியது.
ஒத்தல்—பொருந்தல், ஒன்றுதல்.
ஒப்பு—ஒற்றுமை, நேர்.
ஒப்புரவு—முறைமை—ஒற்றுமை.
ஒருமை—ஒற்றுமை.
ஒருவுதல்—தனித்தல், வேறுதல்.
ஒல்லார்—பகைவர்.
ஒல்லுநர்—மித்திரர்.
ஒல்லல்—கூடுதல்.
ஒவ்வுதல்—பொருந்தல்.
ஒவ்வாமை பொருந்தாமை.
ஒழிதல்—ஒற்றுமை நீங்கல், ஒற்றுமை அழிதல்.

ஒழித்தல்—நீக்கல், பிரித்தல்.
ஒற்றல்—அடுத்தல்.
ஒற்றுமை—ஒருமை.
ஒன்றல்—பொருந்தல்.
ஒன்றார்—பகைவர், கூடார்.
ஒன்று—ஒன்று (எண்.)
ஒன்றுநர்—நண்பர்.
ஒன்னார்—பகைவர்.
ஒளித்தல்—மறைதல்—தனித்தல்.

இவ்வடியாகப் பிறந்த சொற்கள் இன்னுமுளவேனும் அவை இத்துணையாகப் பொருள் வெளிப்பாடுள்ளனவன்மையின் இங்கு நீக்கப்பட்டன.

7. பெண்—ஆசை விருப்ப முதலிய பொருள்தரும் ஒரு சொல்லடி.
பட்பு—ஆசை.
பெட்டல்—விரும்பல்.
பெட்டை—விரும்பற்பாலது—பெண்.
பெட்டார்—நட்டார்—ஆசைக்குரியோர்.
பெண்—ஆசைக்குரியாள்.
பெண்டு—பெண்மகள்.
பெண்டிர்—பெண்கள்.
பெண்மை—பெண்டன்மை.
பெடை—பெண்.
பேடி—பெண்மையன்.
பேடு—பெண்.
பேடை—பெண்.
பேண்—விரும்பு.
பேணல்—விரும்பல்.
பேடர்—பெண்மையர்.
பேணார்—பகைவர்—விரும்பப்படாதவர்.

8. பகு—பிரிதல்.
பகல்—பகுத்தல்—பாதி—நாள்.

பகலோன்—சூரியன்.

பகிர்—பகுப்பு.

பகுத்தல்—பிரித்தல்.

பகை—பிரிவு.

பகுவாய்—பிரிந்தவாய்.

பகைஞர்—பிரிந்தோர்.

பங்கு—பாதி.

பகுதி—பிரிவு.

பாகு—பங்கு.

பால்—பிரிவு.

பாநாள்—பாதிநாள்.

யாழ்ப்பாணம்,
நாவலர்கோட்டம்,
28—8—04.

இங்ஙனம்.
ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

திவ்வியகவி

பிள்ளைப்பெருமாளையங்கார்

இவர் சோழநாட்டிலுள்ள திருமங்கையென்னுந் திருப்பதியில் பிரமகுலத்தில் வைணவமரபிற்றோன்றியவர். இவர் இளமையிலேயே நல்லாசிரியர்பாற் றென்மொழியிலுள்ளதொல்காப்பியமுதலிய அரிய பெரிய இலக்கணநூல்களும் சங்கமரீஇய முத்தமிழ் நூல்களும் இன்னுமவர்காலத்து வழங்கிய மற்றைத்தமிழ்நூல்களும் கற்றுணர்ந்து, வடமொழியிலும் வேதம், வேதாங்கம், வேதாந்த முதலியவைகளில் மிக்கவல்லுநராகி, மற்றும் அவர்தம் வைணவசமயத்திற்குரிய சம்பிரதாய கிரந்தங்களெல்லாவற்றையுங் கற்று அவற்றிலும் அதிநிபுணராய், அடக்கமுதலிய நற்குணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்று ஆழ்வார்கள்'அருளிச்செயல்களில்' ஈடுபட்டவராய்த்திருவரங்கம்பெரியகோயிலிற் கிடந்ததிருக்கோலமா யெழுந்தருளியிருக்கும் அழகியமணவாளரது திருவடித் தாமரைக்குப் பேரன்பு

பூண்டவரா யொழுகுநாளில், அந்நாடாண்ட அரசன் அவரது சிறந்த குணங்களையறிந்து இத்தகைய நற்குணங்கள் ஒருங்கே ஒருவரிடம் அமைவது அருமை அருமை என வியந்து அவரைத்தனது அரண்மனைக்குத் தருவித்துப் பெரியதோர் உத்தியோகங்கொடுத்து அவரைத்தன்னருகே வைத்துக்கொண்டிருந்தான். இவர் இவ்வாறு சிலகாலம் இலௌகிகத் தொழிலில் அமர்ந்திருக்குநாட்களில் ஒருநாள் மற்றை உத்தியோகஸ்தருடனிருக்குங்காலத்துத் தமது உத்தரீயத்தை இரண்டுகையிலுங்கொண்டு "கிருஷ்ண கிருஷ்ண" என்று தேய்த்தனர். அதனைக்கண்ணுற்றசிலர் "ஐயங்காரே! நீர் நிரந்தரம் பகவத்குணானுபவசீலரே என்பது யாவரும் அறிந்தவிஷயம். ஆயினும் உமது உத்தரீயத்தை ஏன் இங்ஙன் செய்தீர்?" என வினவியவளவில், அவர், "ஆம் அருகுபந்தத்தின் சுவாலைதாவி எரிந்த திருத்திரையவிந்து நமது ஸ்ரீரங்கநாயகரும் திருத்தேரில் எழுந்தருளுகின்றார்" என்றார். அதைக்கேட்டு உடனிருந்த உத்தியோகஸ்தர்கள், "ஐயா, திருவரங்கம் பெரியகோயிற்றிருவீதியில் நம்பெருமாள் திருத்தேருற்சவம் கண்டருளுகிறது உமக்கு எங்ஙனே தெரியலாயிற்று" என்று நகைத்து "இவ்வாறு சித்தப்பிரமைஅடைதல் இராஜசேவைக்கு விருத்தமாகுமே" என்று பரிதபித்தனர். இஃதிப்படியாக, திருவரங்கத்திலே பெருமாள் திருத்தேரில் எழுந்தருளி உலாவரும்போது இரதத்திலிருந்த திருத்திரையிலே ஒருகைப்பந்தத்தின் சுவாலைதாவி எரிகையில், தேரின்மேலே பெருமாளைச்சேவித்துநின்ற ஐயங்கார் இதைக்கண்டு அத்திரையைப்பற்றி யுதறிக்கீழேதேய்த்து அவித்தருளினதை அர்ச்சகர் முதலானவர்கள் தெரிந்து உடனே தோஷபரிகாரஞ்செய்து திருத்தேர் நடாத்தியருளினார்கள்.

இவ்விஷயங்களைச் செவியுற்ற அரசன் ஐயங்காரைத்தருவித்து அவரை நோக்கி, "திருத்தேருற்சவத்திற்கு எங்ஙனேபோயினீர்" என்ன, ஐயங்கார் "எனக்கு மானஸாநுபவமே யல்லது கோவிலுக்குப் போனதில்லை" என்றார். அரசன் ஆக்ஷேபித்து "நீர் ரதோற்சவத்தன்று ஸ்ரீரங்கத்திலிருந்ததாக மற்றவர்கள் சொல்வது பொய்யோ?" என்ன, அப்போது, அவர் உத்தரீயத்தை "கிருஷ்ண கிருஷ்ண" என்றுசொல்லித்தேய்த்ததைக்கண்டிருந்தசிலர், 'அவர் அன்று

இங்குதானிருந்தார்' என்று நடந்ததைக்கூற, அரசன் 'நன்று நன்று' என்று இவரது தெய்வீகத்தன்மையை வியந்தனன். அன்றிரவு அரசன் நித்திரையில் தான் பெருமாள் சந்நிதிக்குப்போனதாகவும் காவேரிக்கரையில் ஐயங்கார் நிற்கக்கண்டு அவருடனே சந்நிதிக்குப் போய்ப் பெரியபெருமாளைச் சேவித்து மீளும்போது ஐயங்காரைக் காணுமல் மயங்கிக் கண்விழித்துப்பார்த்தும் நடந்ததெல்லாம் சொப்பனமெனத் தெளிந்து பொழுதுவிடிந்ததும் ஐயங்காரை வரவழைத்து, "நீரோ மகாநுபாவராயிருக்கிறீர், இனிஎன் சேவைக்குத்தக்கீரல்லீர், நீவிர் விரும்புவது யாது?" என்ன, ஐயங்கார் "பெரிய கோயில் தளிகைப்பிரசாதமும் அங்குற்ற வாசமும் வேண்டும்" என்ன, அன்று தொடங்கிச் சலவைக்கல்மண்டபப் பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் அவர் தமக்கோரறையும் தளிகைப்பிரசாதமும் கிடைக்கும்படியான ஏற்பாடுசெய்து ஐயங்காரை அனுப்பிவிட்டான். ஐயங்காரும் அங்ஙனே எழுந்தருளியிருந்து திருவரங்கம் பெரியகோவிலுக்கு மாலை, ஊசல், அந்தாதி, கலம்பகம் என்னும் நான்கு பிரபந்தமியற்றி, பிறகு அழகர் திருமலைக்கோரந்தாதியும் திருவேங்கடத்திற்கோர்மாலையும் அந்தாதியும், நூற்றெட்டுத்திருப்பதிக்கும் ஓர் அந்தாதியும் செய்தனர். இவ்வெட்டுநூல்களுக்கும் தான் அஷ்டப்பிரபந்தம் என்று பெயர்.

இவர் தமக்கு 'அந்தியதசை பசுமாட்டினாலே முடிவாம்' என்று சொல்லியிருந்தார். அதற்கிணங்க ஒருநாள் இவர் கோயிலிற் சக்ரவர்த்தித் திருமகன் சேவையாய் ஸ்ரீவைகுண்டநாதர் சந்நிதியிற் சேவித்துக்கொண்டிருக்கையில் ஒரு நொண்டிப்பசுவந்து தவறி அவர் மேல் விழ அவரும் கீழேவீழ்ந்ததனால் நேர்ந்ததுன்பத்துடனே,

" துளவ துளவ வெனுஞ்சொல்லும் போச்சே
அளவி னெடுமூச்சு மாச்சே—முளரிக்
கரங்கால் குளிர்ந்ததே கண்ணும்பஞ் சாச்சே
இரங்கா யரங்கா வினி"

என்றுசொல்லி உடனே வைகுண்டநாதரிடமே சேர்ந்தாரென்பது கல்விகேள்வியுள்ளோர் யாவரும் அறிந்த விஷயம். இவரைப்பற்றியகதைகள் இன்னுஞ்சிலவுள. இவர்பாடல்வல்லுநராயிருத்தல்பற்

றி இவரைக்கொண்டு தங்களுக்கொருநூல் செய்வித்துக்கொள்ளல்வேண்டும் என்னும் எண்ணங்கொண்ட (ஜம்புகேசுவரம்) திருவானைக்காவிலுள்ளோர் இவரை வேண்டுதலும் இவர் இணங்கவில்லை. ஒருநாள் அரங்கநாதர்கோயிற் பசு ஒன்று ஆனைக்காசென்று மேய்ந்துகொண்டிருந்த தருணம்பார்த்து அங்குள்ளோர் அதைப்பிடித்துக் கட்டிவைத்தலும், அதனையறிந்த கோயில் அதிகாரிகள் பசுவை விட்டுவிடும்படி கேட்டவுடன், அவர்கள் "ஐயங்கார் வந்து இவ்வூரைக் குறித்து ஒருபாட்டாயினும் பாடினல்தான் பசுவைக்கொண்டுபோகலாம்" என்றார்கள். இதனைக்கோயில் அதிகாரிகள் இவர்க்குச்சொல்லி வேண்ட, இவர் வைணவப்பற்றும் சிவத்துவேஷமும் உடையராதலால், "ஆனை துரத்திவரினும் ஆனைக்காபுகேன்" எனச்சொல்லி விட்டார்.

இவரும் சைவ எல்லப்பநாவலரும் ஒருகாலத்தவர் என்பது ஒருகொள்கை. ஐயங்கார் கலம்பகம்பாடியவுடன் அந்நூலை நாவலருடைய பார்வைக்கு அனுப்ப, அவர் அதனை வாங்கிப்பார்த்து,

"தேனமருஞ் சோலைத் திருவரங்க ரெப்பொருளு
மானவர்தாமாண்பெண்ணலியலர்காணம்மானை
யானவர்தாமாண்பெண்ணலியலரேயாமாகிற்
சானகியைக்கொள்வரோதாரமாயம்மானை
தாரமாய்க்கொண்டதுமோர்சாபத்தாலம்மானை"

என்னும் அம்மானையைப்பார்த்தவுடன், "ஐயங்கார் அம்மானையில் அடிசறுக்கினர்" என்று சொல்லி, தாம் உடனே கலம்பகம் (திருவருணைக்கலம்பகம்) ஒன்று பாடிமுடித்து அன்றிரவே அதனை ஐயங்காருக்கு அனுப்பினரென்றும் அவ்வருணைக் கலம்பகத்தைப் பார்த்து ஐயங்கார் மிகக்களித்தனர் என்றுஞ் சொல்லுப.

திருவரங்கக் கலம்பகத்து 39-வது செய்யுளாகிய,

"வாடியோடவனசமன்னவிருகண்வெள்ளமருவிபோன்
மருவியோடமதனன்வாளியுருவியோடவாடையூ
டாடியோடவன்றிலோசைசெவியிலோடவண்டுழா
யாசையோடுமெங்கள்பேதையாவியோடனீதியோ

மோடியோடவங்கிவெப்புமங்கியோடவைங்கரன்
முடிகியோடமுருகனோடமுக்கணீசன்மக்களைத்
தேடியோடவாணனுயிரம்புயங்கள்குருதிநீர்
சிந்தியோடநேமிதொட்டதிருவரங்கராசரே".

இவ்விருத்தத்தை எல்லப்பநாவலருடைய மனைவி கண்டு, ஐயங்கார் சிவபிரானையும் அவர்தம் குமாரர் முதலாயினோரையும் இவ்வாறு இழித்துக்கூறினதற்கு வெகுண்டு, தானதைப்போன்ற * ஒரு செய்யுள் செய்து அதனை அருணைக்கலம்பகத்துட் சேர்க்கும்படி வேண்டலும், நாவலர் அதன் பொருளும் மனைவியின்குரோதமும் கண்டு அவ்வாறு செய்திலர் என்ப. இன்னு மித்தகைய கதைகளனேகமுள. இவரும் ஐயங்காரும் ஒருகாலத்தவர் என்பது பட்டினத்துப்பிள்ளையாரும் அருணகிரிநாதரும் ஒருகாலத்தவர் என்னுங்கொள்கை போன்றது. ஆய்ந்துபார்க்கும்போது இக்கொள்கைகளும்வலியிழந்து விடுகின்றன.

ஐயங்காரவர்கள் சிலேடை,யமகம்,திரிபு,மடக்கு முதலிய சொல்லணிகொண்டு நூலை அலங்கரிப்பதில் மிக்க சமர்த்தர் என்பதற்கு அவருடைய அஷ்டப்பிரபந்தங்களே சான்று பகரும்.

'வெண்பாவிற்புகழேந்திபரணிக்கோர்சயங்கொண்டான்விருத்தமென்னு
மொண்பாவிற்குயர்கம்பன்கோவையுலாவந்தாதிக்கொட்டக்கூத்தன்
வண்பாயகலம்பகத்திற்கிரட்டையர்கள்வசைபாடக்காளமேகம்
பண்பாயபகர்சந்தம்படிக்காசலாதொருவர்பகரொணுதே'

என்னும்பாட்டிற் கூறியுள்ள வெண்பாப் புலியாகிய புகழேந்தியும் விருத்தத்தில் வல்ல கம்பரும், அந்தாதிபாடுவதிற் சமர்த்தரான

---

* "கருடனோட மற்சமாமை கமலமோட முற்காங்
காட்டிலோட மூன்றிராமற் கண்டமட்டி லோடவே
மருளிவந்த சிங்கமோட வாமனென்பு பாறவே
வஞ்சமுள்ள கண்ணனோட மாரனீறச் சேனனு
மிருளினோட முண்டகத்த னேங்கியோட வென்றவர்க்
கீறுறுதங் குயிரளித்த வேந்தல்யாவன் வேதமே
யருளுமந்த முதல்வன்யாவ னருணைகண்டு வாழ்மினோ
வாரநாதி மூலமென்ப தறிகிலாத மாக்களே."

ஒட்டக்கூத்தரும், கலம்பகத்திற் சிறந்த இரட்டையரும், சந்தப்பா வில்வல்லபடிக்காசும் ஒருங்கு சேர்ந்து பாடினாற் போன்றது ஐயங் காரியற்றிய திருவரங்கக் கலம்பகம். இதற்கு அக்காலத்துள்ளோர்,

சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்கு
நடைநோக்குந் துறையி னோக்கோ
டெந்நோக்குங் காணவிலக் கியமாவ தன்றியித்
வீடு பட்டோர்
நன்னோக்கும் புத்தியும்பத் தியும்பெறுவர் முத்தியுண்டா
நாவெனன் சொல்கேன்
பன்னோக்க மணவாளர் பகாரங்கக் கலம்பகத்தைப்
பாரீர் பாரீர்"

என்றிவ்வாறுசிறப்புப்பாயிரங்கூறியிருத்தலுங்காண்க. இச்சிறப்புப் பாயிரம் எவ்வளவு பொருத்தமுடைத்து என்பது இந்நூலைவாசித்து அநுபவித்தோர்க்கு நன்கு புலப்படும்.

அஷ்டப்பிரபந்தத்திலுள்ள மற்றை நூல்களும் எவ்வாற்றான் நோக்கினும் சுவைகனிந்த பாடல்கள் நிறைந்துள்ளனவாகவே காண ப்படுகின்றன. இக்காலத்துப்புலவர்பாடும் யமகங்கள் போலாது பதம்பிரித்துப் பொருள்காண்பது மிக்க எளிதாயும் நயமாயும் மன திற்கு ஒருவித மகிழ்ச்சி உண்டுபண்ணத்தக்கதாயுமிருப்பன இவர் பாடிய யமகக்கவிகள். அதன் ஆறுவது செய்யுளாகிய,

"தருக்காவலாவென்றுபுல்லரைப்பாடித்தனவிலைமா
தருக்காவலாய்மயிலேகுயிலேயென்றுதாமதராய்த்
தருக்காவலாநெறிக்கேதிரிவீர்கவிசாற்றுமின்பத்
தருக்காவலாயுதன்பின்றோன்றாங்கர்பொற்றாளிணைக்கே.

இதுவும் மற்றைப்பாக்களும் எவ்வளவு சிறந்து விளங்குகின்ற னவென்பது இந்நூலைக்கற்றுணர்ந்தோர் அறியக்கூடிய விஷயம்.

இவரது நூல்கள் ஆழ்வாரருளிச்செயல்கள், ஸ்ரீமந் நாதமுனி, யமுனைத்துறைவர் முதலான ஆசாரியர்கள் அருளின ரஹஸ்யார்த்தங் களின் ஸாரமாயுள்ளன.

(இன்னும் வரும்.)

கல்குளம்-குப்புசாமிமுதலியார்.

கைகளான் மிருவர் மக்களும்; தத்த நனைகொள்கையான் மிக்கு நல்லவாம் கள்; எ-று. (சஎ)

ருo சிறந்தார்க் கரிய செறுதலெஞ் ஞான்றும்
பிறந்தார்க் கரிய துணைதுறந்து வாழ்தல்
வரைந்தார்க் கரிய வகுத்தூ ணிரந்தார்க்கொன்
றில்லென்றல் யார்க்கு மரிது.

இ-ள்; தொடர்ச்சி மிச்கார்க்கு அரிய செறுதல்; எஞ்ஞான்றும் பிறந்தார்க்கு அரிய தம்மினத்தைத் துறந்து வாழ்தல்; உணவினை வரைந்தார்க்கு அரிய பிறர்க்குப் பகுத்துண்டல்; இரந்து வந்தார்க்கு அரியதாமொன்றினை இல்லையென்றல் யாவர்க்கும் அரிது; எ-று. (சஅ)

ருக இரைசுடு மின்புறு யாக்கையுட் பட்டா
லுரைசுடு மொண்மை யிலாரை—வரைகொள்ளா
முன்னை யொருவன் வினைசுடும் வேந்தனையுந்
தன்னடைந்த சேனை சுடும்.

இ-ள்; இரை.........பட்டால் எ-து பிணியினுற் றுன்பமுறுகின்ற உடம்பின்கட்பட்டவுணவு துன்பத்தைச் செய்யும் எ-று. உரை......யிலாரை எ-து அறிவினுண்மையிலாதார் தம்வாயிற் சொல்லே தங்களைத்துன்பம் உறுத்தும் எ-று. வரை...... சுடும் எ-து முற்காலத்துச் சீலங்களை வரைந்து கொள்ளாது நெறியைக்கடந்து செய்த தீவினைகள் பிற்காலத்து வந்து சுடும். வேந்தனை......சுடும் எ-து இதற்குமுன் சொன்ன வரைகொள்ளா என்னுஞ்சொல்லைவருவித்து, வரைகொள்ளாத தன்னடைந்த சேனை வேந்தனைச்சுடும் என்று பொருளுரைத்துக் கொள்க. (சகூ)

ருஉ எள்ளற் பொருள திகழ்தலொருவனை
யுள்ளற் பொருள துறுதிச்சொ—லுள்ளறிந்து
சேர்தற் பொருள தறநெறி பன்னூலுந்
தேர்தற் பொருள பொருள்.

இ-ள்; ஒருவற்கு இகழத்தக்கது பிறரை யிகழும் இகழ்ச்சி; ஒருவனை நட்பென்று உள்ளத்தகுவது அவன் சொல்லும் உறுதிச்சொல்லால்; உண்மையறிந்து அடையத்தக்கது அறநெறி; எப்பொழுதும் ஆராயத்தக்கன சகல நூல்களினுஞ் சொன்ன பொருள்கள்; எ-று. (ருo)

டுக யாறு ளடங்குங் குளமுள வீறுசான்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.

இ-ள்; யாறுகள்புகுந்தாலும் புறம்போகாது உள்ளடங்கும் குளங்களு முள ; சிறப்பமைந்த அரசரான் விரும்பப்படுங் குடிகளுமுள ; பழைய மரபினையுடைய வேதங்களைப்போலும் பாட்டுக்களுமுள ; யாகம்போலும் ஈகைகளுமுள; எ-று. (டுக)

டுச எருதுடையான் வேளாள னேலாதான் பார்ப்பா
னொருதொடையான் வெல்வது கோழி—யுருவோ
டறிவுடையா ளில்வாழ்க்கைப் பெண்ணென்ப *சேனை
செறிவுடையான் சேனா பதி.

இ-ள்; எருதுடையான் வேளாள னுவான் ; ஒரெற்றான்† வெல்வதாயுள்ள கோழிபோல ஒருவரோடு என்றும் மாறுபடாதான் பார்ப்பானுவான் ; வடிவழகும் அறிவுமுடையாள் ஒருவற்கு இல்வாழ்க்கையுடைய பெண்ணுவாள் ; சேனையொடு மேவியிருப்போன் சேனாபதியாவான்; எ-று. (டுஉ)

டுடு யானை யுடையார் கதனுவப்பர் மன்னர்
கடும்பரிமாக் காதலித் தூர்வர் கொடுங்குழை
நல்லாரை நல்லவர் நாணுவப்பா ரல்லாரை
யல்லா ருவப்பது கேடு.

இ-ள்; யானையுடையார் யானையினது சினத்தையுவப்பார் ; அரசராயினுர் கடிய செலவினையுடைய குதிரையைக் காதலித்து மேற்கொள்வர் ; கொடுங்குழையையுடைய நல்லாரை நல்லார் நாணுவுவப்பர் ; நாணுடைய ரல்லாத மகளிரை அறிவுடையரல்லாதார் உவந்தாற் கேடாம்; எ-று. (டுங)

டுரு கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானிற்
றுன்னிய கேளிர் பிறரில்லை மக்களி
னெண்மையவாய்ச் சான்ற பொருளில்லை யீன்றாளோ
டெண்ண கடவுளு மில்.

---

* 'சேனைச்செறிவு' என்பதும் பாடம்.

† எற்றுதல் - காலாற்றள்ளுதல்; 'ஓரொற்றான்' என்பதும் பாடம்.

இ-ள்; ஒருவற்குக் கண்போலச்சிறந்த உறுப்புப் பிறிதொன்றில்லை; தம்மைக்கொண்டானைப்போலச் செறிந்த கேளிர் மகளிர்க்கில்லை; புதல்வரைப்போல நன்மைநெறியமைந்த பொருளில்லை; தன்னை யீன்றாள்போல்வதோர் தெய்வம் எத்தெய்வத்துள்ளும் இல்லை; எ-று. (ருச)

ருஎ கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்
செற்றன்னர் செற்றாரைச் சேர்ந்தவர்—தெற்றென
வுற்ற துரையாதா ருள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறிவி னார்.

இ-ள்; கற்றாரனையர் அக்கற்றாரைக் காதலிப்பவர்; ஒருயிர்க்குங் கண்ணோட்டமில்லார் இடும்பைசெய்வாரோடு ஒப்பர்; அவரைச்சேர்ந்தொழுகுவார் தெளியத்தங்கட்டார்க்கு உறுதியாயினவுரையாதார்; உள்கரந்து பாம்புறையும் புற்றேயனையர் புல்லறிவினார்; எ-று. (ருரு)

ருஅ மாண்டவர் மாண்ட வினைபெறுப வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே—யாண்டும்
பிறப்பார் பிறப்பா ரறனின் புறுவர்
துறப்பார் துறக்கத் தவர்.

இ-ள்; அறிவான் மாட்சிமைப்பட்டார் மாட்சிமைப்பட்ட செயல்களைப் பெறுவர்; அம்மாட்சிமையை வேண்டாதார் தமக்கு விருப்பமில்லாத வினைப்பயன்களையும் பெறுவர்; எக்காலமும் மக்கட்பிறப்பிற் பிறப்பாரெல்லாரும் அறத்தையே விரும்புவார்; துறக்கத்தை வேண்டுவார் துறப்பார்கள்; எ-று. (ருசு)

ருசு என்று முளவாகு நாளு மிருசுடரு
மென்றும் பிணியுந் தொழிலொக்கு—மென்றுங்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாருஞ்
சாவாரு மென்று முளர்.

இ-ள்; எக்காலத்தும் இடையறாது உளவாம் நாண்மீன்களும் இருசுடரும்; இறந்தநாள்களும் பிணிவருநாள்களும் உழவுமுதலான தொழில்களும் எல்லாமொக்கும்; எக்காலத்தும் கொடுப்பாருங் கொள்வாரு முளர்; பிறப்பாருஞ் சாவாரும் எக்காலத்தும் உளராவர்; எ-று.

எனவே உலகினது இடையறாமை யுணர்த்தியவாறு. (ருஎ)

௬0 இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகனொழிந்து வாழ்வான்
றனிய னெனப்படுவான் செய்தநன் றில்லா
னினிய னெனப்படுவான் யார்யார்க்கே யானு
முனியா வொழுக்கத் தவன்.

இ-ள்; இனிதாக உண்பானென்று சொல்லப்படுவான் ஒருயிரையுங் கொல்லாதே உண்பான்; எல்லாராலும் வெறுக்கத்தக்கானென்பான் முகங் திரிந்து வாழ்வான்; துணையில்லானென்று சொல்லப்படுவான் தான்செய்த தொரு நல்வினையில்லாதான்; எல்லார்க்கும் இனியனெனப்படுவான் யாவர் யாவர்க்கேயாயினும் வெறுக்கத்தகாத செய்கையையுடையான்; எ-று. (௫அ)

௬க ஈத்துண்பா னென்பா னிசைநடுவான் மற்றவன்
கைத்துண்பான் *காங்கி யெனப்படுவான் றெற்ற
நகையாகு நண்ணார்முற் சேறல் பகையாகும்
பாடறியா தானை யிரவு.

இ-ள்; பிறர்க்குக் கொடுத்துண்பானென்று சொல்லப்படுவான் புகழை நிறுத்துவான்; கொடுத்துண்பவன் கைப்பொருளையுண்பான் அவாமிக்கா னெனப்படுவான்; தெளியவேஇகழ்ச்சியாம் தன்னைவிரும்பாதார் முன்னர் ஒன்றனை நச்சிச்சேறல்; தகுதியறியானைச் சென்றிரந்தாற் பகையாகும்; எ-று.

௬உ நெய்விதிர்ப்ப நந்து நெருப்பழல் சேர்ந்து
வழுத்த வரங்கொடுப்பர் நாகர் தொழுத்திறந்து
கன்றூட்ட நந்துங் கறவை கலம்பரப்பி
நன்றூட்ட நந்தும் விருந்து.

இ-ள்; நெய்யைப்பெய்ய நெருப்புச்சுடர் வளரும்; அடைந்துபோற் றத் தேவர் வரங்கொடுப்பர்; தொழுவைத்திறந்து கன்றுகளை யூட்டக் கற வைகள் நந்தும்; கலங்களைப்பரப்பி †மிகவூட்ட நந்தும் விருந்துகள்; எ-று.

௬௩ பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழியின்மை கேட்டா லறிக பொருளி
னிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியாற்
போற்றாதார் போற்றப் படும்.

---

* காங்கி வடமொழிச்சிதைவு.

† 'நன்றூசவூட்ட' என்பதும் பாடம்.

இ-ள்; பழிபட வாழாமை ஒருவன்தன் மக்கட்பேற்றானே அறிக; ஒருவன் தனக்குநண்பல்லாமை கேடுவந்தால் அறிக; பொருள்வருகின்ற நன்மையானே அவனதாக்கம் அறிக; ஒருவன் புகழ்பட வழங்குமாயிற் றன் பகையாலும் போற்றப்படும்; எ-று. (௬௧)

௬௨ கண்ணுள்ளுங் காண்புழிக் காதற்றாம் பெண்ணி
னுருவின்றி மாண்ட வுளவா மொருவழி
நாட்டுள்ளு நல்ல பதியுள பாட்டுள்ளும்
பாடெய்தும் பாட்டே யுள.

இ-ள்; தன்கண்ணுள்வைத்துக் காணுமிடம் அவனாற் காதலிக்குங் காதலையுடைத்தாம்; பெண்களுள் வடிவின்றியே குணமாண்டன உளவாம்; ஒருவனாட்டுள்வைத்தும் ஒரு கூற்றுள்ளே நல்லபதி உளவாம்; பாட்டுக்கள் பலவற்றுள்ளும் பெருமையெய்தும் பாட்டுக்களுள; எ-று. (௬௨)

௬௩ திரியழற் காணிற் றொழுவர் விறகி
னெரியழற் காணி னிகழ்ப—வொருகுடியிற்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்ற
விளமைபா ராட்டு முலகு.

இ-ள்; திரியானெரியுஞ் சுடரைக்கண்டாற் றொழுவர்; விறகானெரியுஞ் சுடரைக்கண்டால் இகழ்வர்; அவைபோல, ஒரு குடிப்பிறந்து கல்வியின்றியே மூத்தானைக்கைவிட்டு இளையானாயினும் கற்றானையே பாராட்டுவர் உலகத்தார்; எ-று. (௬௩)

௬௪ கைத்துடையான் காமுற்ற துண்டாகும் வித்தின்
முளைக்குழா நீருண்டே லுண்டாந் திருக்குழா
மொண்செய்யாள் பார்த்துறி னுண்டாகு மற்றவ
டுன்புறுவா ளாகிற் கெடும்.

இ-ள்; கைப்பொருளுடையான் காதலித்தது உளதாம்; வித்தின் முளைக்கூட்டம் நீருண்டாயின் உளதாம்; செல்வக்கூட்டம் ஒள்ளிய செய்ய பூமகள் பரிவுறின் ஒருவற்கு உளதாம்; மற்றவள் காதலியாது துன்புறுமாயின் அச்செல்வத்தின் றொகுதி அவர்க்குக் கெடும்; எ-று. (௬௪)

௬௫ ஊனுண் டுழுவை நிறம்பெறூஉ நீர்நிலத்துப்
புல்லினா னின்புறூஉங் காலேய நெல்லி
னரிசியா னின்புறூஉங் கீழெல்லாந் தத்தம்
வரிசையா னின்புறூஉ மேல்.

இ-ள்; ஊனையுண்டு புலி சிறம்பெறும்; நீருடைய நிலத்தெழுந்த புல்லினுன் இன்புறூஉம் நிரைமுதலாயின; அதுபோல, நெல்லினரிசியாற் பசிதீர்ந்து இன்புறுவர் கீழாயினர்; மேலாயினர் தத்தந் தகுதிச்செயலான் இன்புறுவர்; எ-று. (சுரு)

சுஅ பின்னவாம் பின்னதிர்க்குஞ் செய்வினை யென்பெறினு
முன்னவா முன்ன மறிந்தார்கட்—கென்னு
மவாவா மடைந்தார்கட் குள்ளந் தவாவா
மவாவில்லார் செய்யும் வினை.

இ-ள்; கருத்தான் ஆராய்ந்தறியாதார்க்குப் பின்பு நடுக்கத்தைச் செய்யும் வினைகள் தோன்றுவாம்; அறிந்தார்க்குப் பின்னதிர்க்கும் செய்வினைகள் என்பெறினும் முன்னவாகத் தோன்றும்; எல்லாவாற்றானும் அவாவேயாகும் யாதானும் ஒன்றனை அடைந்தார்க்கு உள்ளம்; கெடாவாம் அவாவில்லார் செய்யும் வினைப்பயன்கள்; எ-று. (சுசு)

சுசு கைத்தில்லார் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்
வைத்தாரி னல்லர் வறியவர்—பைத்தெழுந்து
வைதாரி னல்லர் பொறுப்பவர் செய்தாரி
னல்லர் சிதையா தவர்.

இ-ள்; கைப்பொருள்இல்லாதார் கைப்பொருளுண்டாகிக்காப்பாரின் மிக நல்லர்; அப்பொருளை வைத்திழப்பாரின் வறியவர் மிக நல்லர்; வெகுண்டெழுந்து வைதாரின் மிக நல்லர் பொறுப்பவர்; உதவியைச் செய்தாரின் நல்லர் அதனை மறவாதார்; எ-று.

அல்லதூஉம் 'செய்தாரி னல்லர் சிதையா தவர்' என்பது அறஞ்செய்தாரின் நல்லர் அவ்வறத்தை யழியாதார் என்றுமாம். (சுஎ)

எ0 மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை—யகனீர்ப்
புலத்தியல்பு புக்கா னுரைக்கு நிலத்தியல்பு
வான முரைத்து விடும்.

இ-ள்; மகனதுகுணமேபிறர்க்கறிவிக்கும் தந்தையது நற்செய்கையை; ஒருவன் முகமே உரைக்கும் அவன் மனத்தின்கணுள்ள காதலை; அகன்ற நீர்மையினையுடைய புலத்ினது நன்மையைப் புலத்தின்கட் புக்கவன் உரைக்கும்; நிலத்தின் மக்களது தன்மையை மழை பெய்தும் பெய்யாதும் அறிவிக்கும்; எ-று. (சுஅ)

௭௧ பதிநன்று பல்லா ருறைபி னொருவன்
மதிநன்று மாசறக் கற்பி—னுதிமருப்பி
னேற்றான்வீ றெய்து மினநிரை தான்கொடுக்குஞ்
சோற்றான்வீ றெய்துங் குடி.

இ-ள்; ஊர் நன்றாம் பலரும் உறைவாராயின்; ஒருவன் மதிநன்றாம் மாசற நூல்கற்றானாயின்; கூரிய கோட்டினையுடைய ஏற்றினானே சிறப்புப் பெறும் இனநிரைகள்; பிறர்க்குக் கொடுக்குஞ் சோற்றினானே சிறப்புப் பெறுந் தான்பிறந்த குடி; எ-று. (௬௯)

௭௨ ஊர்ந்தான் வகைய கலினமா நேர்ந்தொருவ
னாற்றல் வகைய வறஞ்செய ரொட்ட
குளத்தனைய தூம்பி னகலங்க டத்தம்
வளத்தனைய வாழ்வார் வழக்கு.

இ-ள்; ஏறினான் வகையவாயிருக்கும் முகக்கருவியையுடைய புரவிகள்; தலைப்பட்டு ஒருவனாற்றுதல்வகையவாம் அறஞ்செய்கை; தோண்டின குளத்தினதளவினவாம் தூம்பின்வாய்கள்; தத்தம் வருவாய்க்குத் தக்க வகைய வாயிருக்கும் மனைவாழ்வார்செய்கை; எ-று. (௭௦)

௭௩ ஊழியும் யாண்டெண்ணி யாத்தன யாமமு
நாழிகை யானே நடந்தன—*தாழியாத்
தெற்றென்றார் கண்ணே தெளிந்தனர் வெட்கென்றார்
வெஞ்சொலா லின்புறு வார்.

இ-ள்; ஊழிகளும் யாண்டுகளானே எண்ணப்பட்டு யாப்புற்றுக் கழிந்தன; தெளிந்தார் மாட்டே நீட்டியாதே தெளிந்தனர் நல்லார்; வெள்ளிய அறிவினையுடையார் பிறர்க்கு இன்னாத வெஞ்சொற் சொல்லியே இன்புறுவர்; எ-று. (௭௧)

௭௪ கற்றான் றளரி னெழுந்திருக்குங் கல்லாத
பேதையான் வீழ்வானேற் கான்முரியு மெல்லா
மொருமைத்தான் செய்த கருவி தெரியுங்காற்
†பொய்யாவித் தாகி விடும்.

---

* "முரசு முழங்கு நெடுநக ராசுதுயி லீயாது" (பதிற்றுப்பத்து உ-உ) என்புழித் துயிலியாது என்பது துயிலாது என்னும் வினைத்திரிசொல் என்றார் அதனுரைகாரர்; அதுபோல இதனையுங் கொள்க.

† 'வீயா வித்தாகி' எனவும் பிரதிபேதம்.

இ-ள்; கல்வியையுடையவன் கேடுற்றானாயின் அதனானிடர்ப்படான் எழுந்திருக்கும்; கல்லாத பேதையான் கேடுற்றானாயிற் காண்முரிந்தார் போல ஏறமாட்டான்; ஒருவன் ஒருபிறப்பிற் றான் செய்தனவெல்லாம் மறுபிறப் பின்கண் நுகருநுகர்ச்சிக்குக் காரணங்களாம்; மெய்யாகியவுணர்ச்சி பழுது படாத வீட்டுக்கு வித்தாம் ஆராயின்; எ-று. (எஉ)

எரு தேவ ரனையர் புலவருந் தேவர்
தமரனைய ரோரூ ருறைவார் தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் கற்றன்னர்
கற்றாரைக் காத லவர்.

இ-ள்; தேவரே போல்வர் அறிவுடையார்; தேவர் தமரேயனையர் அவ ருறையும் ஊரின்கண் வாழ்வார்; அத்தமருள் வைத்துத் தேவரால் அருள் பெற்றவரோடு ஒப்பர் அச்சொல்லியவரைப் பேணியொழுகுவார்; கற்றாரோடு ஒப்பர் கற்றாரைக் காதலித்தொழுகுவார்; எ-று. (எரு)

எசு தூர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே மருத்துவன்
சொல்லென்ற போழ்தே பிணியுரைக்கு நல்லார்
விடுகென்ற போழ்தே விடுக வதற்குரியான்
றாவெனிற் றாயம் வகுத்து.

இ-ள்; ஒருவனோடு கொண்ட நட்புத் தூர்ந்துவிடும், பொய்பிறந்த பொழுதே; பிணிக்கு மருந்து செய்வோன் சொல்லுக என்றபொழுதே பிணியுற்றவன் றானுற்ற பிணியைச் சொல்லும்; அதுபோல, அறிவுடைய நல்லார் இப்பெற்றிப்பட்ட தீவினைகளை விடுக என்றபொழுதே விட்டொழிக; ஒருபொருட்குரியான் தாவென்றால் அவனுரிமையைக் கூறிட்டுவிடுக; எ-று. விடுகவென்னுஞ் சொல்லை இதற்கும் வருவித்துக் கொள்க. (எசு)

எஎ நாக்கி னறிப வினியதை மூக்கினான்
மோந்தறிப வெல்லா மலர்களு நோக்குள்ளுங்
கண்ணினாற் காண்ப வணியவற்றைத் தொக்கிருந்
தெண்ணினா னெண்ணப் படும்.

இ-ள்; நாவினானே அறிப இனிய பொருள்களை; மூக்கினானே மோந் தறிப எல்லாப் பூவினையும்; நோக்குண்டென்று கருதப்படுங் கண்ணினாற் காண்ப அணிய பொருள்களை; கண்ணாற் காணப்படாது செய்பொருள்க ளைப் பலருங் கூடியிருந்து அறிவானே ஆராயத்தகும்; எ-று. (எஎ)

௫௭	நேர்புநேர்நிரைபு	பாம்புசேர்கடறு
௫௮	நேர்புநிரைநிரைபு	பாம்புவருகடறு
௫௯	நேர்புநேர்புநிரைபு	பாம்புபோகுகடறு
௬௦	நேர்புநிரைபுநிரைபு	பாம்புவழங்குகடறு
௬௧	நிரைபுநேர்நிரைபு	களிறுசேர்கடறு
௬௨	நிரைபுநிரைநிரைபு	களிறுவருகடறு
௬௩	நிரைபுநேர்புநிரைபு	களிறுபோகுகடறு
௬௪	நிரைபுநிரைபுநிரைபு	களிறுவழங்குகடறு

எனவும் நிரைபீற்று மூவசைச்சீர் பதினாறும் வந்தன.

இவை அறுபத்துநான்கினும், *நான்குநீக்கி, ஒழிந்த அறுபதும் வஞ்சியுரிச்சீராம். செய்யுள்:—

† 'மேற்கோட்டுநீர் கீழ்ப்பரந்துதன்
விழுக்கோட்டுமெய் வியல்விசும்புதோய்ந்
தோங்குமுன்னர்க் காம்புகிழியப்
பாய்ந்துசென்றுசென் றூங்குநலிபுநின்
றெதிர்த்துமீண்டாங் கதிர்த்துக்கரைகொன்
றலங்குகோட்டுமுத் திலங்குநிலவுச்செய்
தார்திரைக் காவிரி பரக்குந் தண்டலை
மூதா ரோனே பேரிசை வளவன்
சுரம்படர்ந்து வருந்துவ தெவனோ
நிரம்பா வாழ்க்கைப் பாணர் கடும்பே'

இதனுள் நேரீற்று மூவசைச்சீர் பதினாறுள் வெண்சீர் நான்குமொழித்து ஒழிந்த பன்னிரண்டு வஞ்சியுரிச்சீரும் முறையானே வந்தன.

'தண்டண்டலைத் தாதுறைத்தலின்
வண்டோட்டுவயல் வாய்புகைபுகாந்
தயலாலையி னறைக்கடிகையின்
வழிபோகுவர மறித்துருபுகிளர்ந்
தோங்குசென்னிலை வாங்குகதிர்தரீஇப்
போதுதூங்குசிலை மீதுபுகுந்துபுகுந்

* வெண்சீரென மேற்காட்டிய நான்கும்.

† இது முதலாகவரும் நான்குசெய்யுளும் வஞ்சிச்சீர் அறுபதும் வந்தமைக்குப் **பேராசிரியர்** கூறியவை.

தொடங்குசெய்தொழில் வழங்குகிளிக்குழாந்
திருந்துகோட்டுமிசைக் குரங்குவிருந்துகொளூஉ
நன்னர் நன்னாட் டென்னா குங்கொல்
பொன்னிநன் னாட்டுப் பொருந னெங்கோன்
றாடோய் தடக்கை மல்லவ*
னாடுகெழு திருவிற் பீடுகெழு வேந்தே'

இதனுள் நிரையீற்று வஞ்சிச்சீர் பதினாறும் வந்தன.

'வான்பெய்யாது தீம்பெயல்பெய்து
மால்யாறுபேர்ந்து கால்சுரந்துபாய்ந்து
சுரைபொய்யாது நிரைவளஞ்சான்று
வரையாதுதந்து பலாப்பழுத்துவீழ்ந்து
பாம்புகொள்ளாது வீங்குசுடர்நீண்டு
வித்துநாறுவாய்த்து முத்துக்கரும்புபூத்து
வரம்புகொள்ளாது நிரம்புபெருங்கூட்டு
விசும்புநீங்குமஞ்சு துயின்றுபெயர்ந்துபேர்ந்து
வாழை யோங்கிய கோழிலைப் பரக்குந்
தண்டா யாணர்த் தென்ப வென்றும்
படுவது கூட்டுண்டு கடவது நோக்கிக்
குடிபுறந் தரூஉம் வேந்த
னெடுநிலைத் தண்குடை நிழற்று நாடே'

இதனுள் நேர்பீறாகிய வஞ்சிச்சீர் பதினாறும் முறையானே வந்தன.

'சீற்றம்மிகுபு செல்சினஞ்சிறந்து
கூற்றொத்துவிரைபு கோள்குறித்துமுயன்று
புலிப்போத்துலவும் பொலங்கொடியெடுத்துப்
புகலேற்றுமலைந்து பகையரசுதொலைத்து
வேம்புமீதணிபு போந்துபடத்தொடுத்து
வீற்றுவீற்றுப்புனைந்து வேற்றுச்சுரும்புகிளர்பு
களிறுகால்கிளர்ந்து குளிறுகுரல்படைத்துச்
சொரிந்துதூங்குகடாத்து விரைந்துமலைந்துதொலைத்து
மணங்கம ழாரமொடு தயங்கச் சூடிய
வென்வேற் சென்னி பொன்னியற் புனைகழல்

* 'வல்லமன்' எனவும் பிரதிபேதம்.

பாடுபெறு பாணினும் பலவே
பாடா தோடிய நாடுகெழு வேந்தே'

இதனுள் நிரைபீற்று வஞ்சிச்சீர் பதினாறும் முறையானே வந்தன. ()

உக. தன்பா வல்வழித் தானடை வின்றே.

இஃது அவற்றைப் பாவிற்குரிமை கூறுகின்றது.

இ-ள். இவ்வாறுபது வஞ்சிச்சீரும் தன்தன் பாவல்லா ஆசிரியம், வெண்பா, கலியுள் வாரா எ-று. எனவே, சிறுபான்மையான் ஆவன மேற்கூறுதும். உதாரணம் முற்காட்டியவற்றுட் காண்க. இதன்பயன் ஆசிரியவுரிச்சீர் தூங்கலோசையை ஆக்குமாறுபோல, இஃது அகவலோசையை ஆக்காதென்பதாம். (உக)

உஉ. வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய.

இது மற்றைச்சீர்கள் வஞ்சியுண் மயங்குமாறு கூறுகின்றது.

இ-ள். கட்டளையல்லா வஞ்சிப்பாவின்கண் ஈரசைச்சீர்பதினாறும் மூவசைச்சீர் அறுபத்துநான்கும் உரிய. எ-று.

எனவே, கட்டளையிற் கூறுவாராயிற்று. 'வசையில்புகழ் வயங்குவெண்மீன்' (பட்டினப்பாலை) எனத் தன்முன்னர்த் தான்வந்தும், 'திசைதிரிந்து தெற்கேகினும்' (ஷ) என இயற்சீர் நிற்பத் தன்சீர்வந்தும், 'தற்பாடிய தளியுணவின்' (ஷ) எனத்தன்முன்னர் வெண்சீர்வந்தும், 'புட்டேம்பப் புயன்மாறி' (ஷ) என இரண்டு வெண்சீர்வந்தும், 'புள்ளுந்துயின்று புலம்புங்கூர்ந்து' என ஆசிரியவுரிச்சீர் வந்தும் தூங்கலோசை பிறக்கும் என்றுணர்க. (உஉ)

உஙு. வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீ
ரின்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே.

இது கட்டளை ஆசிரியத்திற்கு அடியுறழப்படாத சீர் இவை யென்கின்றது.

இ-ள். வெண்சீரும் ஆசிரியவுரிச்சீரும் கட்டளைஆசிரியப்பாவில் வரும் அளவடிக்குப் பொருந்தநிற்றலின்று. எ-று.

எனவே, நீடுகொடி, உரறுபுலிஎன மூன்னிரைபீற்றவிரண்டும் உறழும் என்பது கண்டுக்கொள்க. கட்டளையடி யிங்ஙனம் வருமெனவே, சீர்வகை

யடிக்கு வெண்சீரும் ஆசிரியவுரிச்சீரும் பொருந்தவரும் என்றுணர்க. வெண்சீர்வந்தன மேற்கூறுப *. 'வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு' (திருமுருகாற்றுப்படை) என ஆசிரியவுரிச்சீர் பொருந்தவந்தது. (உ௩)

உ௪. கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ.

இது கட்டளைக்கலிக்கட் சீர்மயங்குமாறு கூறுகின்றது.

இ-ள். கலித்தளையானாய கலிப்பாவில்வரும் நேரடியிடத்து முற்கூறிய முன்னிரையீற்ற விரண்டுசீர் வருதலும் நீக்கப்படா. எ-று.

† உம்மை இறந்ததுதழீஇயிற்று. 'ஓங்குதிரை யடுக்கம்பாய்ந் துயிர் செருக்குந் துறைவகேள்' 'விளங்குமணிப் பசும்பொன்னின் வியலறைமேல் விளையாடி' எனவரும். ‡ இவ்வாறுகூறவே, சீர்வகைக் கலியடிக்கு இவையொழிந்த ஆசிரியவுரிச்சீர்களும் வெணச்சீர்களும் வேண்டியவாறு வரப்பெறுமாயிற்று. (உ௪)

உ௫. கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே.

இதுவும் கட்டளையடிக்கோர் சீர்வரையறை கூறுகின்றது.

இ-ள். கலித்தளையானாய கலிப்பாவில்வரும் நேரடியிடத்துத் தேமா புளிமா என்னும் நேரீற்றியற்சீரிரண்டும் நிற்றற்குரித்தன்று, துள்ளலோசையைத் தெரிவோர்க்கு. எ-று.

இங்ஙனம் வரைந்தோதவே, சீர்வகையடிக்கண் இவ்விரண்டியற்சீரும் வருதல் பெறுதும். உ-ம். "ஐயிரு தலையி னரக்கர் கோமான்" எனவரும். எனவே, நேரீற்றியற்சீர் ஒழிந்த எட்டியற்சீரும் கலிக்குவருதலும் ஆசிரியத்திற்கும் வெண்பாவிற்கும் ஒழிந்த பத்தியற்சீரும் வருதலும் பெற்றாம். (உ௫)

உ௬. வஞ்சி மருங்கினு மிறுதி நில்லா.

---

* "இன்சீ ரியைய வருவ தாயின்" (௩௦) என்னுஞ் சூத்திரத்துட் காண்க.

† ஆசிரியத்திற் கடியப்படாவாதலேயன்றி ஈண்டுக்கடிதலும் படா என்றவாறாம்.

‡ 'இவ்வாறு கூறவே' என்பது இங்ஙனம் வரையறையுடையன சட்டளையடியெனவே என்றதாம்.

இது கட்டளையல்லா வஞ்சிப்பாவில் வரப்பெறுஉ இயற்சீர்கூறுகின்றது; வஞ்சித்தளைமருங்கினும் என்னாது வஞ்சிமருங்கினும் என வாளா கூறின மையின் கட்டளையன்மை பெறுதும்: தளைத்தற்றொழில் கட்டளையடிக்கண்ணதாகலின்.

இ-ள். வஞ்சிப்பாவிடத்தும் அசைச்சீர் இரண்டும் இறுதலோடுசில்லா முதற்சீர்க்கண். எ-று.

என்றது மற்றைப்பாக்களைப்போலச் சீரியைந்திறுதன் மாத்திரையன்றி முதற்சீர்தோறும் தம்முள் வேறுபாடுதோன்றத் தூக்கப்படும் ஓசை வஞ்சிக்குவேண்டுதலின் அவ்வோசைபடப் பெரும்பான்மை நில்லா தேமா, புளிமா என்னும் இரண்டும் எ-று: என்னை? முதற்சீர் வருஞ்சீரோடு தொடருங்கால் இறுதற்றொழில் பெறுவது நின்ற சீராகலின்; எனவே, நலிந்து கூறியவிடத்துச் சிறுபான்மை தூக்கப்படுமோசைபடவும் நிற்கும் என்றுணர்க. உம்மை இறந்தது தழீஇயிற்று. உ-ம். "கொற்றக் கொடியுயரிய" "களிறுங் கதவெறிந் தனவே" என நேரீற்றியற்சீர் முதற்கட் டூங்காவாயின. "அகல்வயன் மலைவேலி, நிலவுமணல் வியன்கானல்" (புறம்-௧௭) எனவும் "மேதக மிகப்பொலிந்த, வோங்குநிலை வயக்களிறு" (மதுரைக்காஞ்சி) எனவும் ஒழிந்த இயற்சீர் முதற்கட் டூங்கின. இவை கட்டளையன்மையுணர்க. "புன்காற் புணர்மருதின்" "தேன்றூட் டீங்கரும்பின்" என * நலிந்து கூறியவழித் தூங்கின.

இனி "மண்டிணிந்த நிலனும், நிலனேந்திய விசும்பும், விசும்புதைவரும் வளியும், வளித்தலைஇய தீயுந், தீமுரணிய நீரும்" (புறம்-௨) என ஈற்றுக்கண் வருதல் பெரும்பான்மையாதலின் †இறுதி நில்லா எனப் பொருள்கூறலாகாமை யுணர்க. 'மருங்கு' என்றதனான் நேர்நிலைவஞ்சிக்கே இவ்வரையறை: இயனிலை வஞ்சிக்கு இன்றென உணர்க. (௨௬)

௨௭ இசைநிலை நிறைய நிற்குவ வாயி
னசைநிலை வரையார் சீர்நிலை பெறலே.

---

* இந்நலிந்துகாட்டிய இயற்சீர்கள் அளபெடுத்துக்கூறப்படுவன என்று கொண்டு அளபெடை வெண்சீர் என்பர் **பேராசிரியர்.**

† "வஞ்சிப்பாவினுள் அடியீற்றினில்லாது நேரீற்றியற்சீர் என்றவாறு; எனவே, அடிமுதற்கண் நிற்கப்பெறும் என்றவாறும்" என்பது **உரையாசிரியருரை.**

இது நான்கசையுஞ் சீராம்இடனும் உடைய என்கின்றது.

இ-ள். இசை நிலை.........வாயின் எ-து ஓசைநிலைமையாற் சீர்த்தன்மைப்பட நிறைந்து நிற்குமாயின். அசை.........பெறல் எ-து அசைநிலைமைப்பட்ட சொற்களை யெல்லாம் சீர்நிலை பெறுதற்கு வரையார். எ-று.

உ-ம். 'கழலொழா மன்னவர்தங் கை' *'புனலுடன் பேரே வரும்'† "எய்போற் கிடந்தானென் னேறு" (வெண்பாமாலை-வாகை-௨௨) "மேவாரை யட்ட களத்து" (களவழி-௨௫, ௨௭, ௩௬) என நேரசையும், நிரையசையும், நேர்பசையும், நிரைபசையும் ஆயிற்று. இவை ஓரோவோரோசைக்குக் காட்டிற்றேனும் ஒழிந்த அசைகட்குங் கூறிக்கொள்க. இங்ஙனம் கூறுக்கால் 'வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்'(செய்-௭௨) என்றவிதி ஆமாறின்று.()

௨௮ இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே
தளைவகை சிதையாத் தன்மை யான.

இஃது எய்தியது ஒருமருங்குமறுத்தது; இயலசையிரண்டுஞ் சீர்நிலையெய்தியுந் தளைபடா என்றலின். உரியசைதட்கும் என்றலின் எய்தாதது எய்துவித்ததூஉமாம்.

இ-ள். இயற்.........படுத்து எ-து முன்னர்க் கூறிய உரியசை யிரண்டும் இயற்சீர்க்கண்ணே கூறுபடுத்து. தளைவகை.........யான எ-து அவ்வியற்சீர்க்குக் கூறுந்தளைவகை கெடாத தன்மைக்கண்ணே: இயற்றினர்கொளல் எ-து அவற்றையும் இயற்றிக் கொள்க. எ-று.

---

* அவிழ்ந்த துணியசைக்கு மம்பல்முஞ் சீக்கு
மகிழ்ந்திடுவார் முன்ன மலருங்—கவிழ்ந்து
நிழலுழா யானை நெடுமான்றேர்க் கிள்ளி
கழலொழா மன்னவர்தங் கை" (பொய்கையார்வாக்கு: யாப்பருங்கல விருத்திமேற்கோள்-௯௫)

† பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபே
ருன்னேனென் றாழலக்கை பற்றினேற்—கன்னோ
மனனோடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனலுடன் பேரே வரும். (யாப்பருங்கலவிருத்திமேற்கோள்-௧௨)
'அஃதான் றென்ப வெண்பா யாப்பே' என்புழி உரையாசிரியரும் இச்செய்யுளை எடுத்தோதினர்.

நேரீற்றியற்சீர் அதிகாரத்தாற் றேமாபுளிமாப்போலத் தட்டல் கொள்க. தளைவகை சிதையா என்றது எய்தியுந் தளையா என்று கொள்க. 'முலை விலங்கிற் றென்று முனிவாள்' * 'நெய்த்தோர் நிறைத்துக் கணம்புகல்' என இரண்டசைச்சீரும் இயற்சீர் வெண்டளையாகத் தட்டன. 'தளைவகை சிதையாத்தன்மையான' என இடம் நியமித்தது, சீர்வகையான் அசை சீரெனவேறுநின்று அடியுறழ்ந்து எழுபது எனப்பட்ட தளைவகை நோக்குங்கால் வேறெண்ணுந்தொகைபெறாது இயற்சீர்க்கண் அடங்குமென்றற்கு; எனவே, கட்டளையடிக்கே இவ்வரையறை: அல்வழி வரையறையின்மையிற் றளை கொள்ளப்படாதென்றுணர்க. இக்காலத்தார் சீர்வகையடிக்குந் தளை கொள்வர். "இடைமண்டிச் செல்வதனைக் கண்டு, பெடைஞெண்டு" † என்றவழிக் கண்டு என்பதனை இயற்சீர்வெண்டளை யென்பர். இனிக் 'கலித்தளை யடிவயின்' (செய்-௨௫) என்றதன்பின் இச்சூத்திரங்கூறுதலின், இவையுங் கலிக்கு விலக்குண்டு ஆசிரியத்திற்கும் வெண்பாவிற்கும் உரியவாயின; எனவே, ஆசிரியத்திற்கு இயலசைமயங்கிய இயற்சீர்நான்கும் உரியசைமயங்கிய இயற்சீர்ஆறும் ஆக இயற்சீர்பத்தும், முன்னிரை யீற்ற ஆசிரியவுரிச்சீரிரண்டும் ஈண்டுக்கூறிய அசைச்சீரிரண்டும் ஆகப்பதினான்கும் அடியுறழுமாயிற்று. வெண்பாவிற்கு இருவகை இயற்சீர்பத்தும் வெண்சீர் நான்கும் அசைச்சீர் இரண்டும் எனப் பதினாறு சீரும் அடியுறழுமாயிற்று. கலிக்கு நேரீற்றியற்சீர் ஒழிந்த இயற்சீர் எட்டும் வெண்சீர் நான்கும் ஆசிரியவுரிச்சீர் இரண்டும் எனப்பதினான்கும் அடியுறழுமாயிற்று. இனி நாற்பத்துநான்கும் உண்மைவகையால் இயற்சீர்பத்தும் ஆசிரியவுரிச்சீர் இரண்டும் வெண்சீர்நான்கும் அசைச்சீர்இரண்டும் எனப்பதினெட்டாயிற்று. இவற்றுள் இருநிலைமைப் படுவனபட்டு முப்பத்தொன்றுமாறு 'சீர்நிலைதானே' (செய்-௪௧) என்னுஞ் சூத்திரத்துட் கூறுதும். (௨௮)

---

* சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாண்—மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போழ்து. (யாப்பருங்கலவிருத்தி மேற்கோள்-௪, ௧௭, ௩௭)

† தடமண்டு தாமரையின் றாதா டலவ
னிடைமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைஞெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நடாயினா னூர். (ஷை-௩௧)

௨௯. வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே.

இது வெண்சீராற் கலித்தளையாமாறுணர்த்திற்று. கலிக்கு விலக்கிய நேரீற்றியற்சீரதிகாரம் பற்றி இயற்சீர் கூறியதல்லது கலியதிகாரம் விலக்காமை யுணர்க.

இ-ள். வெண்சீரீற்றசை எ-து வெண்சீர்கள் பலதொடர்ந்து ஒருகலியடியுள் நின்றவழி அவ்வெண்சீர்களுள் ஈற்றுநின்ற சீரின் முதல்வந்த நேரசை: நிரையசையியற்று எ-து மற்றை நிரைமுதல் வெண்சீர் வந்து கலித்தளையாயவாறுபோலக் கலித்தளையாம். எ-று.

என்றது, வெண்சீர்ப்பின்னர் நிரைவந்து தட்டலே சிறந்ததுஎன்றார். அதுவுமன்றி வெண்சீர் நான்கும் ஒன்றினும் அது வெள்ளோசையையுந் தருதலிற் கட்டளையாகாமைகருதி முன்னர் மூன்றுசீரும் பகைத்தே வரல்வேண்டும்என்றும், அவைதம்முட்பகைத்தலிற் பின்வருஞ் சீர் ஒன்றினும் பகைத்த தன்மையேயாய்த் துள்ளலோசையே நிகழ்த்துமென்றுங்கூறினர். வெண்சீர் என்றது அஃறிணையியற்பெயராதலிற் பன்மைப்பாற் படவுணர்க. வெண்சீர்களுள் என எழனுருபு தொக்கது. ஈறுஎன்றது இறுதிச்சீரை. ஈற்றசையென்றது இறுதிச்சீரினுடைய அசையென்றவாறு.உம். "அடிதாங்குமளவன்றி யழலன்ன வெம்மையால்' (பாலைக்கலி-௧0) என இவ்வெண்சீர்கள் பகைத்து வந்து ஈற்றுச்சீரின் முதற்கணின்ற நேரசை நிரையசைபோலத்துள்ளலோசைகோடலிற் கலித்தளையாயிற்று. இது கட்டளைக்கே யென்பது 'தளைவகை சிதையாத் தன்மை யான' (செய்-௨அ) எனநின்ற அதிகாரத்தாற் கொள்க. "அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்" (பாலைக்கலி-௧0) என்புழி வெண்சீரிறுதி நிரைமுதலியற்சீர் தட்டலிற் றுள்ளலோசை சிறவாதாயிற்று, 'பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணைமென்றோள்' (கலித்தொகை-கடவுள் வாழ்த்து) போன்று. (௨௯)

௩0 இன்சீ ரியைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையா ராசிரிய வடிக்கே.

இது கட்டளை யல்லுழி வெண்சீர் மயங்குமாறு உணர்த்திற்று.

இ-ள். இனிய ஓசை பொருந்த வரும் ஆசிரிய வடிக்கண் வெண்சீரும் வரப்பெறும். எ-று.

உ-ம். "இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கைத், தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து" (புறம்-௧௯) என்றவழித் தலையாலம் என ஆசி

கள். அமெரிக்கா, ஐரோப்பா தேசங்களில் குதிரை, மாடு, ஆடு, பன்றி முதலிய மிருகங்களையும், கோழி வாத்து முதலிய பக்ஷிகளையும் கொழுக்கச் செய்வதற்கு, மக்காச் சோளத்தின் பச்சைக் கதிர்களை விசேஷமாக உபயோகிக்கிறார்கள்.''

"மக்காச் சோளத்தின் தட்டையை மென்றால் இனிப்பாயிருக்கும். அதிற் சர்க்கரைச்சத்து இருக்கிறது. கரும்புக்குள்ள அரைவாசிச் சத்து இந்தத் தட்டையிலிருப்பதாக அமெரிக்காவிற் கண்டுபிடித்திருக்கிறார்கள். பச்சைத் தட்டையை ஆலையில் நசுக்கிப் பிழிந்து எடுக்கிற இரசத்தைக் காய்ச்சினால் சர்க்கரைப்பாகு உண்டாகிறது. ஆனால் அதை அதிகமாய்க் காய்ச்சினால் கெட்டுப்போகிறதேயொழியக் கட்டிச்சர்க்கரையாவதில்லை. சர்க்கரைக்குப் பிரதியாக மக்காச் சோளப்பாகை உபயோகிக்கலாம். இந்தச் சர்க்கரைச்சத்து இருப்பதால், அந்தத் தட்டைகளைக் கதிர் கொய்தவுடன் வெட்டிப் பாற்பசுக்களுக்கும், வேலை செய்யும் கால்நடைகளுக்கும்போட்டால் அவைகளுக்கு நல்ல தீவனமாகின்றன. தட்டைகளை வெட்டுக்கத்தி கொண்டு, சிறு சிறு துண்டுகளாக வெட்டி மற்றத் தீவனங்களுடன் கலந்து போட்டால் கால்நடைகள் நன்றாய்த் தின்னும். தட்டைகள் அதிகமாய்க் காய்ந்து போனால், கால் நடைகளுக்குத் தீவனமாக உபயோகப்படமாட்டா.

"மகமதிய வைத்தியர்கள் மக்காச் சோளமானது அதிக சத்துள்ள போஜனம் என்றும், க்ஷயரோகத்தாற் பிடிக்கப்பட்ட ஜனங்களுக்கு அது தகுந்த ஆகாரமென்றும், அதிசார பேதியால் அவஸ்தைப் படுகிறவர்கள் அதைச் சாப்பிட்டு வந்தால் வியாதி குணமாய் விடுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். கிரேக்கதேசத்திலும் அமெரிக்காவிலும் மக்காச் சோளக் கதிரிலுள்ள பட்டுநாற்குஞ்சம் போன்ற வஸ்துவைக் கஷாயம் வைத்துக் கொடுத்தால், நீரடைப்பு, நீர்ச்சுறுக்குமுதலான வியாதிகள் குணமாவதாகச்சொல்லுகிறார்கள். மக்காச்சோளக்கதிரில் உள்ள தானியத்தை உதிர்த்து, பின்னுள்ள கற்றையை எரித்தசாம்பலுடன் சாதாரண உப்புக்கலந்து கொடுத்தால் நெஞ்சுச் சளியும், அதனாலுண்டான கக்குவான் என்னும் இருமலும் குணமாகிறதாம். ஜெர்மானி, ஆஸ்திரியா, ஹங்கேரி தேசங்

களில் மக்காச்சோளக்கதிர்களின் புறவிதழ்களைக்கொண்டு அதிகப் பலமுள்ளதும், நேர்த்தியானதுமான ஒருவகைக்காகிதம் செய்யப்படு கிறது. அந்தக் காகிதத்தில் பாங்கி நோட்டுகள்கூட அச்சடிக்கிறார் கள். கால் நடைகளுக்குத் தீவனமாக உபயோகப்படுத்த உதவாத காய்ந்த தட்டையை, வீட்டுக்கூறைகள் வேயவும், அடுப்பெரிக்கவும் உபயோகிக்கிறார்கள்.

"நம்மிராஜதானியில் அநேக இடங்களில் குடிகள் மக்காச்சோ ளத்தைத் தோட்டப் பயிர்களுக்கு ஊடே ஊடே ஒவ்வொரு விதை யாகப் போட்டு வைப்பது வழக்கம். ஒரு புலத்தில் மக்காச்சோ ளம் மட்டும் சாகுபடி செய்வது வெகுசொற்ப இடங்களில் தான். வடஆற்காடு ஜில்லாவில் வேலூரிலும், பால்மனேரிலும், கிருஷ்ண கோதாவரி ஜில்லாக்களிலும் இந்தத் தானியம் அதிகமாகப் பயிரா கின்றது. மொத்தத்தில் சென்னை இராஜதானியில் சுமார் 80,000- ஏக்கருக்குமேல் மக்காச்சோளம் சாகுபடியாகவில்லையென்று சொல் லலாம். கிருஷ்ண, வடஆற்காடு ஜில்லாக்களில்மட்டும் இதைப் புன் செய்ப் பயிராகச் சாகுபடி செய்கிறார்கள். மற்ற ஜில்லாக்களில் இறைவை நிலங்களிலேயே கலப்புப்பயிராகச் சாகுபடி செய்கிறதா கத் தெரியவருகிறது.

"பஞ்சாப்பில்-12,15,206-ஏக்கர்நிலங்களில் மக்காச்சோளம் பயி ராகின்றது. அதில் மூன்றில் ஒருபாகம் மட்டும் நீர் பாய்ச்சப் படு கிறது. மற்றது புன்செய்நிலங்களிற் பயிராகிறது. வடமேற்குமா காணங்களில் 9,78,653 ஏக்கர்களிலும், அயோத்தியாவில் 4,76,036- ஏக்கர்களிலும், பம்பாயில் 1,37,457 ஏக்கர்களிலும், மத்திய மாகா ணங்களில் 1,06,659 ஏக்கர்களிலும், இந்தப் பயிர் சாகுபடியாகிற தாகக் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி மற்ற இராஜ தானிகளில் ஏராளமான நிலங்களில் இந்தப் பயிர் சாகுபடியாகி வந் தும்; நம்முடைய இராஜதானியில் மட்டும் இது விர்த்தியடையாம லிருப்பது விசனிக்கத்தக்க விஷயமாயிருக்கிறது. தென்னிந்தியா வில் சோளப்பயிர் எங்கெங்கு நிலங்களிற் பயிராகுமோ, அந்த நிலங் களிலெல்லாம் மக்காச்சோளமும் பயிராகும். மேலும் குறைந்த ஜலாதாரமுள்ள வானவாரிக்குளநன்செய்களில் நெல் சாகுபடி செய்

வதைவிட, மக்காச் சோளத்தைப்பயிரிட்டால் அதிக ஜலம் பாய்ச்ச வேண்டிய அவசியமிராது. கால்வரத்துக் குளங்களிலும் சில வருஷங்களிற் கோடை மழைகள் குறைந்து போவதால், கார்நெல் பயிரிடப் போதுமான ஜலாதாரமில்லாமலும்; ஒருவேளை பயிரிட்டாலும் தீய்வுகரிவும் அறைகுறைமணிப்பிடியும் நேரிடக்கூடியதாகவுமிருப்பதால், அந்த நிலங்களிலும் கார்நெற்பயிருக்குப் பிரதியாக மக்காச்சோளம் சாகுபடி செய்வது மெத்த நலம். இதனால் மனிதர்களும் கால்நடைகளும் பட்டினியின்றிக் காலங்கழிக்கக்கூடும்."

கம்பு.—*KAMBU.*

நமது நாட்டிற் சாதாரணஜனங்களுடையஉணவுக்குச் சோளம் உபயோகப்படுவதைப் போலவே, கம்பும் உபயோகப்படுகின்றது. கம்பு கரிசற்சோளத்துக்கு அடுத்தாற்போல மலைச்சார்புகளில் மணல்கலந்த பூமியில் மிகுதியாக விளையும். இது சாதாரணமாக ஆனிமாதத்தில் விதைக்கவேண்டிய முதற்பயிர். இந்தக்கம்பில் பாற்கம்பு, பனிக்கம்பு, மயிர்க்கம்பு, பெருங்கம்பு, குள்ளக்கம்பு, தித்திப்புக்கம்பு, அறுபதாங்கம்பு, திருப்பதிக்கம்பு என்றுதிப் பிரிவுகள் உண்டு. கோயம்புத்தூர் ஜில்லாவின் சிலபாகங்களில் அரிசிக்கம்பு அல்லது அறுபதாம் கம்பைத் தோட்டங்களிற் பங்குனி, சித்திரை (எப்பிரல்) மாதத்தில் விதைத்து, ஆனி, ஆடியில் (ஜூன் ஜூலையில்) அறுவடை செய்வர். இதற்குப்பூமியை முன்னரே தக்கபடி உழுதும், எருவடித்தும், ஓர்ஏகர் நிலத்துக்கு ஒன்று ஒன்றரைப்படி, அல்லது 13-இராத்தல் விதைத்தும், ஒருதரம் களையெடுத்தும் ஆறு அல்லது ஏழுதரம் தண்ணீர்கட்டினாற்போதும். ஓர் ஏகரில் நான்குபொதி அல்லது பன்னிரண்டு சலகை அல்லது 2440 இராத்தல் தானியம் கிடைக்கும். அதாவது ஏறக்குறைய 50-ரூபாவாகும்.

புன்செய்ப்பூமிகளில் (கரிசல்மண்தவிர) மற்றநிலங்களில், ஆனி ஆடி மாதத்தில் (ஜூலை ஆகஸ்டில்) விதைக்க (மே)சித்திரைவைகாசி மாதங்களின் மழையிற் செழித்தோங்கும். இது நான்குமாதப் பயி

ரென்று சொல்லப்படும். இதற்கு அதிக மழையுங்கூடாது; அதிக வறட்சியும் கூடாது. கோயம்புத்தூர் முதலான சிலவிடங்களில், கம்பைத் தனிப்பயிராகப் பயிரிடாமல், பருத்திக்கொட்டை, ஆமணக்கு உழுந்து, துவரை, பச்சைப்பயறு, நரிப்பயறு, மொச்சை, புளிமஞ்சி முதலான காய்த்தானியங்களோடு கலந்து பயிரிடுவதுமுண்டு. இவைகளிற் கம்பை ஆகாரத்துக்கு வைத்துக்கொண்டு,மற்றக்காய்த்தானியங்களின் வருப்படியிற் கந்தாயத்துக்குவேண்டிய பணத்தைச் சரிப்படுத்துகிறார்கள். இதைப் புன்செய்ப்பயிராகப் பயிர்செய்வோர், சித்திரை வைகாசி மாதங்களில் மழைபெய்தவுடனே பூமி புழுதியாக உழுதும், எருக்காத்தும்,மறுபடியும் ஆனி ஆடி மாதங்களில் உழுதும் பலதானியங்களைக்கலந்து விதைத்தும், துவரை மொச்சைகளைச்சால் விட்டு விதைத்தும், 6-வாரமானபிறகு மறுபடியும் மேலே உழுது விட்டும்; புரட்டாசி ஐப்பசி மாதங்களில், கம்பை மாத்திரம் கதிர்களாக வெட்டிக்கொண்டும், தைமாதம் காய்த்தானியங்களை அறுத்துக்கொண்டும், பருத்தியையும், கொட்டைமுத்துக்களையும் ஒருவருஷம் பயிராகவிட்டு ஆடி மாதத்தில் அறுக்கிறார்கள். இந்தப்பருத்தி இரண்டு வருஷகாலம் அந்நிலத்திலிருந்து பலனைத்தரும். மஞ்சுக்குப்பம் ஜில்லாவில் கம்பை, நிலக்கடலையோடு சேர்த்துப்பயிரிடுவதுண்டு. கர்நூல் ஜில்லா பத்திக்கொண்ட தாலூகாவில் ஒருவகை விசேஷக் கம்பு விளைகிறது. அதன் நீளம் ஒரு முழமும், மணிகள் பருத்துமிருக்கின்றன. திருச்சிராப்பள்ளி, மதுரை ஜில்லாக்களிற் கம்பு அதிகச் சிறியராசியானவை. சிலர் கம்புநாற்றுக்களை விட்டுவளர்த்து வேறிடங்களில் நட்டுப் பயிரிடுவது முண்டு. கம்பந்தட்டின் சர்க்கு கடினமாகையால், இதைமாடுகளுக்கு அதிகமாக உபயோகிப்பதில்லை. இதைச் சிறியதுண்டுகளாக வெட்டி, வெந்நீரில் நனைத்து, உப்புத்தூவித்துவி உபயோகித்தால் முதற்றரமான தீவனமாகும்.

கேழ்வரகு—இராகி—*RAGI.*

இந்நாட்டின் ஏழை ஜனங்களுக்கு முக்கிய உணவாகிய சோளங் கம்பு தவிர, பனியதிகமான மைசூர் முதலான சில பிராந்தியங்களில் இராகியும் (கேழ்வரகு) ஒரு விசேஷமான தானியம். இதைத்

தோட்டப் பயிராகவும், காட்டுப் புன்செய்ப்பயிராகவும் செய்து வருகிறார்கள். இந்தக் கேழ்வரகில் குண்டுராகி, காட்டுராகி, வெள்ளைராகி, செஞ்சுருட்டை, கருஞ்சுரட்டை, தலைவிரிச்சான், பெருராகி, என்றுதி வகைகள் உண்டு.

இதை அமராவதி நதியின் கீழ்க் கால்வாய்ப் பாசனங்களில் முதற்போகப் பயிராகச் செய்துவருகிறார்கள். இதைச் சாதாரணமாக நாற்றங்கால்களில் ஆனி மாதத்தில் நாற்றுவிட்டு, ஆடிமாதத்தில் இதற்கென்று பலதரம் உழுதும், சாம்பல் முதலான நல்ல எருவைப்போட்டுத் தயார்செய்துமிருந்த பூமியில் பக்குவமாகப் பாத்திகளைக்கட்டித் தண்ணீர் விட்டு நடுவார்கள். சப்பாத்திக் கள்ளிக்கு அடியிலிருக்கும் மண்ணும், அல்லது சப்பாத்திக்கள்ளியைச் சுட்டெடுக்கும் சாம்பலும் இதன் நாற்றுக்கு நல்ல எருவாகும். பயிரிட்ட நாலைந்து தினங்களுக்குள் பூமியைக் கொத்திவிட்டால் அதிக ஜலம் அநாவசியம். அப்போது பதினைந்து தினங்களுக்கு ஒரு தண்ணீரைக் காட்டினாலும் போதும்.

இதற்கு இரண்டுதரம் களையெடுப்பது வழக்கம். ஆடி ஆவணி மாதங்களிற் போதுமானமழை பெய்யாவிட்டால், அடிக்கடி தண்ணீரை, (உத்தேசம்) பத்து பன்னிரண்டு தரம் கட்டிவரவேண்டும், இதைப்பொள்ளாச்சியிற் சில பாகங்களிலும், உடுமலைப்பேட்டை, தாராபுரம் முதலான சிலவிடங்களிலும், நாற்று விட்டு நடாமல் விதைவிதைத்துப் பயிர் செய்கிறார்கள். இது நான்கு மாதத்துப் பயிராகையால், பயிரைச்சுற்றி இருக்கும் பெரிய வரப்போரங்களில் ஆமணக்கு (கொட்டைமுத்தை) நடுவது முண்டு. அதுவும் நல்ல பலனைத்தரும். இராகியைப் பொள்ளாச்சி, பவானி, உடுமலைப்பேட்டையைப்போன்ற மலையடிவாரமுள்ள விடங்களிலும், மழையதிகமாகப் பெய்யும் இடங்களிலும் அன்றி, மற்ற இடங்களிற் புன்செய்ப்பயிராகப் பயிரிடுவது அபூர்வம். இதைப் புன்செய்ப்பயிராகச் செய்வதற்கு, முதலில் பூமியை நன்றாக உழுது எருவிட்டு வைத்த பிறகு இராகியோடு ஆமணக்கு, துவரை முதலான சில காய்த்தானியங்களையும் சேர்த்துவிதைப்பார்கள். காய்த்தானியங்களைப் பத்துப் பன்னிரண்டடி தூரத்துக்கு சால்விட்டு விதைப்பதுண்டு. இப்படி விதைத்து

ஒருமாதமான பிறகு மறுபடியும் மேல் உழுது களையெடுப்பது முண்டு. பொள்ளாச்சி முதலான சிலவிடங்களில் வைகாசி மாதத்திலும், கோயம்புத்தூர், பவானி, உடுமலைப்பேட்டை முதலான விடங்களில் ஆடி மாதத்திலும், விதைப்பதுண்டு. நான்கு மாதமான பிறகு இராகியை அறுவடை செய்துகொண்டு, இரண்டொருமாதமான பிறகு துவரை, ஆமணக்காதிகளை அறுக்கிறார்கள். இந்த ராகியை அறுத்தவுடனே குத்தாரிபோட்டுச் சிலநாள்களான பிறகு எடுத்து வெயிலில் உலர்த்திக் கால்நடைகளால் மிதிக்கவைத்து அடிப்பார்கள். தாள்களை நிலத்திலேயே விட்டுப் பிறகு நாளடைவிலே அறுத்து மாடுகளுக்குப்போடலாம். தோட்ட நிலங்களிற்பயிர்செய்யும் இராகி ஏக்கர் ஒன்றுக்கு 4 பொதி அல்லது 12-சலகை அல்லது 2,520 ராத்தலாகும். அதாவது சுமார் 60-ரூபா வருவாயாகும்.

சோளமானது கரப்பான் என்றும், அதை உண்பவர்களுக்குச் சொறிசிரங்கு முதலானவை உண்டாகுமென்றும்; கம்பானது சீதபித்தகாரியாகையால் உடம்பைக் கெடுக்கும் என்றும் சொல்வதுண்டு; ஆனல் இராகியைப்பற்றி அப்படிப்பட்ட தோஷம் சொல்ல வகையில்லை. இது உண்மையில் உஷ்ணகாரி; தேகத்துக்குப் பலத்தையும் புஷ்டியையும் தரும் திவ்வியமான ஆகாரம். மைசூர் முதலான சில நாட்டாருக்கும், குளிர் நிறைந்த மலைவாசிகளுக்கும் இராகி இன்றியமையா உணவு; இதன் தாள்களும் கால்நடைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும்படியான உணவு. இந்த இராகிப்பயிருக்கும் சுண்ணும்பு, கொள்ளிக்கரிக்குநோவு, செம்பை முதலான நோய்கள் சம்பவிப்பது உண்டு. இராகியானது புன்செய் நிலத்திற் பயிரிடப்பட்டால், மழையற்றகாலத்திற் பயிர்களின் இலைதளிர்கள் மீது வெண்ணிறமயான பஸ்மம் போற் படியும்; அதற்குத்தான் சுண்ணும்பு என்று பெயர். உடனே நல்ல மழை பெய்தால் நோய் தீர்ந்துவிடும். செம்பையானது பனிக்காலத்திலும், மிதமிஞ்சிய ஈரம் சேரும்போதும், செந்துருப்போற் படியும். சில சமயங்களிற் பூச்சிகள் விழுந்து பயிர்களைக் கெடுத்துவிடும். நல்ல எருவுள்ள நிலத்தில் நோய்கள் காண்பது அரிது.

தினை—THINAI.

இந்தத்தினை என்னும் தானியமும் தோட்ட நிலத்திலேயே இராகியைப்போற் பெரும்பாலும் பயிர் செய்வது வழக்கம். ஆனால் இராகியைப்போல் நாற்று விடாமல், விதை விதைத்துப் பயிர் செய்ய லாம். தோட்டப்பயிராகக் கார்த்திகை மார்கழி முதலான (நவம்பர் டிசம்பர்) மாதங்களிலும்; கரூர் முதலான சில இடங்களில் ஆடி (ஜூலை ஆகஸ்டு) மாதங்களிலும் புன்செய்ப் பயிராகச்செய்து வருகி றார்கள். இது அதிக உஷ்ணமான பயிராகையினால், பூமியின் சாரத்தை எல்லாம் இழுத்துவிடுமென்று சிலர் பயிர்செய்கிறதில்லை. இதுபற்றி யே "தினைவிதைக்க வினை விளையும்" என்ற பழமொழியும் வழங்கிவரு கிறது. இதிற் செந்தினை, வெள்ளைத்தினை, கருந்தினை, அல்லது சடை, கொசுத்தினை, வலம்புரி, இடம்புரி என்றாதி வகுப்புகளுண்டு. இத ன்புல் மாடுகளுக்கு நல்லதீனியாகும். இதைப்பல்லாரியிற் பருத்தி யோடு கலந்து பயிரிடுவதுமுண்டு.

வரகு—VARAGU.

வரகைத் தோட்டத்திலாயினும், காடுகளிலாயினும், அபூர்வமா கப் பயிர்செய்கிறார்கள். இது கேவலமான பயிராகையாலும், அதிகச் சூடுள்ள தாகையாலும், வாந்திபேதியை யுண்டாக்கு மென்றஞ்சி, மதுரை முதலான சில ஜில்லாக்களிற் பயிரிடுவதில்லை. இதன் புல்லை யும் மாடுகள் ஆவலுடன் தின்பதில்லை. இது விளையும் பூமியின் சாரத்தையுங்கெடுத்துவிடும். கோயம்புத்தூர், பொள்ளாச்சி, உடும லைப்பேட்டையில் தோட்டப்பயிராகவும், காட்டுப்பயிராகவும் விளை விக்கிறார்கள். இதற்குச் சொற்பத் தண்ணீர் இருந்தாற் போதும். இதிற் பனிவரகு, வெள்ளைவரகு, கருவரகு, முறிவரகு, குதிரைவாலி என்றாதி நான்கைந்து விதங்களுண்டு. தோட்டங்களிற் புரட்டாசி மாதத்திலும், காடுகளில் ஆடி ஆவணிமாதங்களிலும் பயிரிடலாம். சிலர் வரகை நாற்று விட்டு நடுவதுமுண்டு.

சாமை—SAMAI.

சாமையை, ஆவணி புரட்டாசி மாதங்களிலும், பொள்ளாச்சியில் ஆனி ஆடி மாதங்களிலும் விதைக்கிறார்கள், சில விடங்களில் தனி

ப்பபிராகவும், சில விடங்களில், துவரை, மொச்சை யாதி கோது ள்ள பயிர்களுடன் கலப்புப்பபிராகவும் விளைவிப்பதுண்டு. இப் படிச்செய்தால், சாமையைக் கார்த்திகை மார்கழி மாதங்களிலும், துவரை முதலானவைகளைத் தைமாதத்திலும் அறுவடை செய்வார்கள். சாமைக்குச் செவ்வல் ஜல்லிமண் நலம். இதிலும் புல்லுச் சாமை, அறுபதாஞ்சாமை, வெள்ளை, கருப்பு, குள்ளே, மார்கிலஞ் சாமை என்றுதிவகைகளுண்டு. இவைகளில் புல்லுச்சாமை ருசிகரமானது. இதற்கு இரண்டு மூன்று தண்ணீர் விட்டுக் களையெடுத்தாற் போதும். தோட்ட நிலமானால் ஓர் ஏகரில் 400-பெரியபடி சாமை விளைவாகும். புல்லுச்சாமை ஒன்றரை இரண்டடிக்குமேல் வளருவதில்லை. இதன் புல் மாடுகளுக்கு நல்லதீவனமாகிறது. இது பல்லாரிப் பிரதேசங்களில் சிறப்பாக மணிபிடித்து விளைகின்றது. சாமையை, நெல்லைப்போல வேகவைத்து உமியை நீக்குகிறார்கள். இந் தத்தானியமும் சூடான பபிராகவும், பூமியின் சாரத்தை இழுத்து விடுகிறது. இனி இந்தத் தானியப்பயிர்களுக்குச் சம்பவிக்கும் வியாதிகளையும், அவற்றை நீக்கும் உபாயங்களையும், ஆங்கில கிருஷி நிருபர் மித்திரனில் எழுதிய சங்கதியை இதனடியிற் காட்டுவோம்.

நெல், சோளம், இராகி, கம்பு, தினை, கோதுமைப்பயிர்களுக்குச் சம்ப விக்கும் வியாதிகளைப்பற்றி ஆங்கிலகிருஷிகர் பின் வருகிறபடி தெரிவிக்கிறார்.

கோதுமைப்பயிரின் பூஞ்சகாளம்.

SMUT AND PUNJAS.

இந்த பூஞ்சகாளத்துக்கு இங்கிலீஷில் ஸமட் (Smut) என்று பெயர். இந்த வியாதியைப்பற்றி அமெரிக்கா, ஐரோபா கண்டங்களில் கவனமெடுத்துக்கொள்ளப்பட்டு, அதன் சிகிற்சைகளையும் கண்டறிந்துகொண்டு, குணத்தையும் பிரத்தியட்சமாய்க் கண்டிருக்கிறார்கள். நமது நாட்டிலும் இந்த வியாதிக்கு மேற்றிசையார்கள் செய்வதுபோலச்செய்தால், இவர்களும் குணத்தைக்காணலாம். நமது ராஜதானியிற் கோயம்புத்தூரிலும் இன்னும் சேலம், நீலகிரி, மைசூர்

அக்குளத்தினடியிற் படியச்செய்து நீரைமட்டும் அக்குளத்தின்வாயால் மற்ருெரு சிறுகுளத்தில் வழியச்செய்து அவ்வாறு வழிந்தநீரை ஒருவிதப் பிரயோஜனத்துக்கும் உள்ளாக்காமல் வீணுய் இறைத்துவிடுவது வழக்கம். நீரை இவ்வாறு அகற்றியபிறகு முதற்குளத்தின் அடியிற்படிந்த கனபதார்த்தங்களை வெளியிலெடுத்து உலர்த்தி மண்ணுடன் கலந்து நாற்றத்தால் ஒருவிததேக அசௌக்கியமும் உண்டாகாதபடி செய்வார்கள். இது சரியான முறையன்று. தோட்டத்திற்காக இத்தண்ணீரை அதிலிருக்கும் கனபதார்த்தங்களுடன் உபயோகிப்பதே நேரான முறையென்று இக்காலத்தில் எல்லா சுகசந்தர்சன சாஸ்திரிகளும் ஒப்புக்கொண்டிருக்கின்ருர்கள்.

சாக்கடைத்தண்ணீரைக் கடலிற்போக்குவது;—இம்முறையை நமது சென்னையில் நாம் பார்க்கலாம். இவ்வாறு நாம் சீராகச்செய்யவேண்டுமானுல் சமுத்திரநீர்மட்டத்திற்குக் கொஞ்சம் பள்ளமாகவே அச்சாக்கடை சமுத்திரத்திற்கலக்கும் துவாரத்தை வைத்து அத்துவாரத்தின் வழியாகச் சமுத்திரநீர் எதிர்த்துச்செல்லாதவண்ணம் கெட்டிக்கதவுகள் போட்டுக் கடல் உள்ளடங்கியிருக்கும் வேளைகளிற் சாக்கடை வாயைத் திறந்துவிட்டு சமுத்திரம் உயரும் வேளையில் அவ்வாயைமூட ஏற்பாடுசெய்யவேண்டும்.

சாக்கடைத்தண்ணீரை நதியிற் கலப்பது:—சாக்கடையைச் சிலவிடங்களில் நதியில் விடுகின்ருர்கள். இவ்வாறு விடுமிடங்களிற் சாக்கடைவாயிற் சல்லடைபோன்ற கதவுகளையமைத்து, அக்கதவுகளின் உட்பக்கத்திற் கனபதார்த்தங்களைத்தேக்கி, வெளியில் வாரி எறிந்து, சாக்கடைநீரைமட்டும் ஆற்றுநீரிற்கலக்க ஏற்பாடு செய்கின்ருர்கள். இவ்வாறு இவர்கள் செய்வது அச்சாக்கடைநீரில் விஷம்இல்லை என்றும் அதிலுள்ள கனபதார்த்தங்களிற்ருன் விஷமிருக்கின்றதென்றும்அபிப்பிராயம்கொண்டதனுற்போலும். இது முற்றிலும் தப்பான அபிப்பிராயம். அதிக விஷம் பெரும்பாலும் சாக்கடைநீரிலேயேயிருக்கின்றது. நதிஜலத்தில் சாக்கடைஜலம் ஒருபொழுதும் கலக்க இடங்கொடுக்கக்கூடாது.

சாக்கடைத்தோட்டம்:—நாம் முற்கூறியபடி சாக்கடைநீரை முற்றிலும் தோட்டங்களுக்குப்பாய்ச்சி எருவாகப்பண்ணிப் பயிரிடுவதுதான் எல்லாவிதத்திலும் உயர்ந்தமுறை. இவ்வாறுண்டாக்கப்படும் தோட்டம்அச்சாக்கடைநீர் பாய்ச்சப்படும் காலின் இருபக்கங்களிலேயும் அவஸர்ப்பிணியாக (sloping) இருக்கவேண்டும். சாக்கடை நீர் சமேலென்று எங்கும் ஒரே பிரமாணமாகப் பாயவேண்டும். அப்பொழுதுதான் அதிலிருக்கும்எரு பூமியின் மேல் எங்கும் சம்பந்திக்கும். இவ்வெருவால் சில புற்கள், கிழங்குகள், பருப்பினத்தைச்சேர்ந்த காய்கறிகள் முதலியன வெகு செழிப்பாய் விளைகின்

றன. நமது சென்னையில் விசேஷமாய் இச்சாக்கடை ஜலத்தாற் பைம்புல் பயிரிடுகின்றார்கள். வெகு ஏராளமாயும் வெகு செழிப்பாயும் அப்புல் விளைகின்றது. சென்னையிலுள்ள தனவான்கள்வீட்டுக் குதிரைகளுக்கு இப்புல் முக்கிய உணவு. இவ்வாறு உண்டாகும் புல் முதலிய பதார்த்தங்களால் உடம்பிற்கு ஒரு விதத்தீங்குமில்லை. பூமி அடிக்கடி எருவை வாங்கிக்கொள்ளுவதால் அதன் கொழுப்புக்குறைவுபடாமல் எப்பொழுதும் விளைவைக் கொடுக்கின்றது.

இத்தோட்டங்களை உண்டாக்குவதில் நாம் கவனிக்கவேண்டியது முக்கியமாக ஒன்றுண்டு. இத்தோட்டங்கள் ஜனங்கள் குடியிருக்குமிடங்களுக்குச் சமீபத்திலிருந்தால் அச்சாக்கடைநீர் இறைபடும்பொழுது உண்டாகும் நாற்றம் ஜனங்களுடைய சுகத்தைக்கொஞ்சம் மாற்றும். பூமியிற்கலந்த பிறகு ஒருவித உபத்திரவத்தையும் உண்டாக்காது. ஏனெனில் அந்நாற்றம் அந்நாற்றஜலம் அந்நாற்றமண் முதலியவை எல்லாம் பூமியிற்படிந்து ஓஷதிகள் ஆகர்ஷித்து வளரப்பெறும் எருவாகும். அத்தோட்டங்கள் கிணறுகளுக்கு அருகேயிருந்தால் அத்தோட்டத்தின் மண்ணிற்பதியும் சாக்கடை ஜலம் அடித்தரையிற் கசிந்து ஒருகால் அக்கிணற்றுஜலத்தைக் கெடுக்கலாம். நகரத்துக்கு வெகுதூரம் சாக்கடைகளைக்கொண்டுபோவதால் இத்தீமையை நாம் முற்றிலுமகற்றலாம். அல்லது தோட்டங்களை விசாலமாகப்பண்ணிப்பூமிக்குள் 4-5-அடிமட்டும் அச்சாக்கடைநீர் படியும்படி செய்து அதன்மேல் நாம் ஓஷதிவர்க்கங்களை உண்டாக்கிவரவேண்டிய ஜாக்கிரதையைச் செய்துவந்தால் அந்நான்கு ஐந்து அடிக்குள்ளேயே இவ்வோஷதிவர்க்கங்கள் எல்லா மலத்தையும் அந்நீரிலிருந்து ஆகர்ஷித்துக்கொண்டு கூடியமட்டும் சுத்தஜலமே அடித்தோட்டத்திலிறங்கும்படிசெய்யும். இவ்வாறு சாக்கிரதையாகவிருப்பதால் இத்தீங்கை நாம் அகற்றலாம்.

சாக்கடை அவசியம்:—நகரவாசம் பண்ணவேண்டியது எவ்வாறு பல காரணங்களால் ஏற்பட்டிருக்கின்றதோ அவ்வாறே நகரம் ஒன்று ஏற்பட்டால் அதிலுண்டாகும் உத்ஸிருஷ்டங்களை அகற்றச் சிறுசாக்கடைகளும், பெருஞ்சாக்கடைகளும்,சாக்கடைத்தோட்டங்களும் அவசியம் என்று ஏற்பட்டிருக்கின்றது. நகரம் என்றால் நல்விதமாகஅமைக்கப்பட்டசாக்கடைகளில்லாமல் முடியாது. அவ்வாறு சாக்கடைகள் ஏற்பட்டவிடங்களில் மரணத்தொகையை ஒருவாறு கணக்கிட்டுப்பார்க்கையில் நல்விதமான சாக்கடைகள் உண்டாவதற்குமுன் அந்நகரத்தில் மடிந்த ஜனங்களில் நூற்றுக்கு பத்தாவது குறைந்தேயிருப்பதாக எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டிய கணக்கு ஏற்படுகின்றது.இஃதொன்றே நல்விதமான சாக்கடைகள் நகரங்களுக்கு அவசியம் என்பதற்குச் சான்றாகுமல்லவா ? இதேமாதிரி அதிசாரநோய்,

காய்ச்சல், காலரா என்னும் விஷபேதி இந்நோய்களும் நூற்றுக்குப் பத்தாவது குறைந்திருக்கின்றன என்று சுகஸந்தர்சனசாஸ்திரிகள் காட்டுகின்றார்கள்.

மலத்தை அகற்றல்:—நாமிதுவரையிற் சாக்கடைகளைப்பற்றி எழுதினோம். அச்சாக்கடைகளில் மலம் கழுவிவிட்ட கக்கூசுத்தண்ணீரும் மூத்திரமும் கலந்தேயிருக்கும். சில கக்கூசுகள் மலம், மூத்திரங்கள் இவைகள் சாக்கடைகளிற் கலக்காதவண்ணம் கட்டப்பட்டிருக்கும். இப்படியிருக்கும் இடங்களில் மலம் மூத்திரம் இவைகளை அகற்றும்வழிகளையும், சாதாரணக் கக்கூசிலிருந்து மலத்தை அகற்றும்வழியையும்பற்றி இங்குச் சிறிது எழுதுவோம்.

(1) மலத்தை அதிக ஜலத்தால் சாக்கடையிற் சலக்கச்செய்து சாக்கடைஜலத்துடன் அப்புறப்படுத்துவது. (2) மலத்தை அவ்வாறே அகற்றி அப்புறப்படுத்துவது. (3) மலத்திற் சாம்பல் அல்லது கரி இன்னும் மற்றத் தூள்கள் இவைகளைக் கலந்து அப்புறப்படுத்துவது என்று மூன்று விதமாக மலத்தை அப்புறப்படுத்தும் வழிகளைச்சொல்லலாம்.

(1) அதிக ஜலமிருக்கும் நகரங்களில், சாக்கடைகளிலேயே மலத்தையும் ஜலத்தையும் முற்றிலும் அலம்பிவிட்டு அகற்றி நகரவாசத்துக்கு 500-கஜத்துக்கு அதிகமான தூரத்தில் அவ்விதச்சாக்கடைகளைக் கொண்டுவந்து தேக்கி அவ்வாறு தேக்கப்பட்ட சாக்கடைநீரை வெளியே இறைத்துத் தோட்டங்கள் உண்டுபண்ணுவதால் வெகு செழிப்பான தோட்டங்கள் உண்டாவதுடன் ஜனங்களுடைய தேகசௌக்கியத்திற்கும் ஒருவிதக்குறைவுமில்லாதிருக்கிறதென்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறுசெய்ய ஏராளமான தண்ணீரின் உதவிவேண்டும். அன்றியும்இவ்வாறு மலம் ஜலம் அகற்றப்படும் நகரங்களின் சாக்கடையிலிருந்து கெட்ட காற்று வீட்டுக்குட் புகாதவண்ணம் பெருஞ்சாக்கடைகள் வெகு கெட்டியாகவும், கொஞ்சங் கூடத்தேக்கங்களின்றி ஓடுகின்றவைகளாகவும் கட்டப்பட்டிருக்கவேண்டும்.

(2) சிலவிடங்களில் மூத்திரத்தைமட்டும் சாக்கடையிற் கலக்கச்செய்து மலத்தைத்தனியே அப்புறப்படுத்தி அம்மலத்தை ஒன்றுசேர்த்து அதனால் மலபஸ்மம் (Poudrette) என்ற எரு உண்டாக்குவார்கள். இவ்வாறு உண்டாக்கப்படும் எரு பயிர்களுக்கு வெகு உத்தமமான எரு என்று வேளாண்மை செய்கின்றவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இம்மலபஸ்மம் உண்டுபண்ணுவதற்காக யந்திரங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அச்சாலையில் வேலைசெய்கின்றவர்களுக்குக் கெட்டநாற்றத்தின் உபத்திரவம் கொஞ்சமிருக்கலாம் என்றாலும் அவர்களின் தேக சௌக்கியத்திற்கு ஒருவிதக்குறைவுமிருக்கமாட்டாது.

(3) அடுப்புக்கரிப்பொடி, சாம்பல், சாதாரணமண், ரம்பத்தூள், நாற்றத்தை மாற்றுந்தூள்கள் (Deodorizing Powders) இவைகளை மலத்துடன் கலந்து மலத்தை வீட்டைவிட்டு அகற்றி அவ்வாறு குவிக்கப்பட்ட மலத்தை அப்படியே பூமிக்கு எருவாக உபயோகிக்கலாம் என்றும், அப்படிச் செய்வதால் அதை பஸ்மமாகப்பண்ணும் முறையின் சிரமமில்லையென்றும் அப்படியே மலத்தைப் பூமிக்குட்பதிப்பதால் அது பூமிக்கு எருவாகும் குணம் குறைகின்றதில்லையென்றும் சொல்லுகிறார்கள். இம்முறைதான் நமது தேசத்தில் விசேஷமாக வழங்கிவரும் முறை. சில சுகஸந்தர்சன சாஸ்திரிகள் ஒவ்வொரு நகரத்திற்கும் இருவிதச்சாக்கடைகளிருக்கவேண்டும்: ஒரு சாக்கடை மழைத்தண்ணீரை ஆற்றிற்சேர்ப்பதற்கென்றும் மற்றொரு சாக்கடை உத்விருஷ்டத்திற்கும் மலம் மூத்திரங்களுக்கும் தனியேயிருக்கவேண்டும் என்றும் கொஞ்சகாலங்களுக்குமுன் சொல்லிக்கொண்டிருந்தார்கள். மழைநீரும் பூமியில்விழும் முன்னும் விழுந்தபின்னும் பலவித அசுத்தங்களுடன் சேர்ந்துவிடுவதாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றமையாலும் இருவிதச் சாக்கடைகள் கட்டுவது சாத்தியமில்லாமையாலும் அவ்வாறே ஒரு சமயத்திற் கட்டப்பட்டபோதிலும் ஒரு சாக்கடை சம்பந்தம் மற்றொன்றிலும் உண்டாகி அவைகள் முதலிற் றனித்தனியே ஏற்பட்ட பிரயோஜனம் குறைந்துவிடுமாகையால் இக்காலத்தில் இச்சித்தாந்தத்தை சுகஸந்தர்சனவாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை.

உத்விருஷ்டத்தையகற்றுவது எல்லாநகரங்களுக்கும் ஓரேவிதமாகவிருக்கயாட்டாது. ஆங்காங்கிருக்கும் சௌகரியங்களைச் சீர்தூக்கி நாம் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

உத்விருஷ்டங்களையகற்றுவதை நாம் சொல்லும்பொழுது நமது நகரங்களில் உண்டாகும் குப்பை கூளம் மற்ற அழுக்குபதார்த்தங்களிவைகளை யகற்றுவதைப்பற்றியும் நாம் சொல்லவேண்டும்.

உத்விருஷ்டங்களன்றியே பலவிதக் குப்பைகள் உண்டாய்க்கொண்டேயிருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலிருந்து அகற்றப்படும் அடுப்புச்சாம்பல், அடுப்புக்கரி, கஞ்சிகழிநீர், ஒவ்வொரு லாயத்திலிருந்தும் வெளியே கொட்டப்படும் குப்பைகூளம், ஒவ்வொரு மாமிசக்கடையிலிருந்தும் வெளியில் அகற்றப்படும் மஷ்டுகள், வீடுவாயில் இவைகள் அடிக்கடி கூட்டப்பட வெளியிற் கொணர்ந்து குவிக்கப்படும் குப்பைகள் இவைகளெல்லாவற்றையும் நாம் சாக்கடைநீரையும் உத்விருஷ்டங்களையுமகற்றுவது போல எப்பொழுதும் அப்போதைக்கப்போது அகற்றக்கடமைப்பட்டவர்களாகவிருக்கின்றோம். அதேமாதிரியாகத்தான் சவங்களையகற்றும் விஷயமும். இவைகளையெல்லாம்பற்றி இவ்விடத்திற் சிறிது சுருக்கமாகச்சொல்லுவோம்.

சாம்பல், சருகு, எச்சிலிலை இவைகள் போன்ற குப்பைகளை எல்லாம் கூட்டி குப்பைத் தொட்டியிற் கொட்டுகின்றோம். இக்குப்பையை சில நகரங்களிற் புலத்துக்கு எருவாக உதவும்படி விற்கின்றார்கள். சில விடங்களில் வண்டியில் எடுத்துப்போட்டு நகரத்துக்கு அப்பாற் கொண்டுபோய்க் கொட்டுகின்றார்கள். பள்ளங்களைத்தூர்த்து நிரவுவதிற் பெரும்பாலும் இவ்விதக்குப்பை உதவுகின்றது. இவ்வாறுநாம் குப்பைகளைக்கொட்டிப்பள்ளங்களைத் தூர்க்குங்கால் அக்குப்பைகளை நன்றாக நிரவி அதன்மேல் அரை அடி மண்ணை இழுத்துவிட்டு மூடவேண்டும். அவ்வாறு மூடப்படும் குப்பை கொட்டிய விடங்கள் தேகத்துக்குஅசௌக்யத்தை உண்டுபண்ணும் துர்க்கந்தங்கள்வீசுமாகையால் அவைகளையகற்றக் குறைந்தபட்சம் $\frac{1}{2}$-அடிமண் அக்குப்பையின் மேலிருக்கவேண்டும். பட்டணங்களில் பூமிக்குள் மூடப்படும் குப்பையின் ஒவ்வோர் அம்சமும் மண்ணோடு மண்ணாய்மாறித் தேகத்துக்கு ஓர் விதத்தீங்கும் செய்யாமலிருக்கக் குறைந்தபட்சம் ஏழு வருஷங்கள் ஆகவேண்டும் என்று பிரசித்த வைத்தியர்கள் ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். இவ்வாறு குப்பை கொட்டி மூடிய இடத்தையே பெரும்பாலும் சாக்கடைத்தோட்டங்களாகப் பண்ணி இவ்விடங்களிற் பயிரிடவேண்டும்.

நகரத்திற் குவியும் குப்பைகளை பூமியிற்கொட்டி மூடுவதைக்காட்டிலும் நெருப்பிற் கொடுத்து நீறாக்குவது எல்லாவிதத்திலும் மேலானது என்று இக்காலத்தில் எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். இதற்காகச் சிலவிடங்கள் ஏற்படுத்தி அவ்விடங்களில் (Cremator) தகன ஸ்தலம் என்று ஒன்றுகட்டி எல்லாவிதக் குப்பைகளையும் அவ்விடம் கொண்டு வந்து உடைந்த ஓடு, உடைந்த கண்ணாடி, இரும்பு, தகரம் முதலிய கனக்குப்பைகளை வேறாகவும், இலேசான குப்பைகளை வேறாகவும் எரிக்கவேண்டும். கனக்குப்பைகளை நாம் எரித்து உண்டாக்கும்வஸ்துவைச்சாலைகளுக்குச்சரள்கள் போல் உபயோகித்துக்கொள்ளலாம். இலேசான குப்பையால் உண்டாக்கும் நீறை உயர்ந்த எருவாக உபயோகிக்கலாம்.

இவ்வாறு குப்பையை எரிக்க உண்டாக்கப்படும் தகன ஸ்தலங்கள் வெகு சாஸ்திரோக்தமாகக் கட்டப்படவேண்டும். இல்லாவிடில் அவைகளிலிருந்து குப்பை எரியும் காலத்தில் உண்டாகும் நாற்றம் அதிக அசௌக்யத்தை உண்டாக்கும். நமது நகரமாகிய சென்னையில் (Cremators)இந்தத் தகனஸ்தலம்சிலவருஷங்களுக்குமுன்கட்டப்பட்டும் உபயோகப்படுத்தப்பட்டும் வந்தன.ஆனால்அவைகளெல்லாம் அசாஸ்திரீயமாகக்கட்டப்பட்டிருந்தபடியால் சௌக்கியத்திற்குப் பிரதியாக அசௌக்கியத்தையே விளைவித்தன. அக்காரணத்தால் அவைகளை உபயோகிப்பதை நிறுத்திவிட்டார்கள்.மைலாப்பூருக்கருகிலுள்ள மயானத்திற்குச் சமீபத்தில் இவ்வாறு உபயோகத்தி

லிருந்து நீக்கப்பட்ட கிரீமேடர் ஒன்றை நாம் பார்க்கலாம். இக்கிரீமேடர்கள் இக்காலத்தில் நமது தலைமைராஜதானியாகிய கல்கத்தாவில் நல்லஸ்திதியிலிருக்கின்றன. சென்னையில் இரண்டோரிடத்தில் மறுபடியும் இதை உபயோகித்து வருகின்றார்கள். கிரீமேடர்கள் நல்லவைகளாக சாஸ்திரப்பிரகாரம் கட்டப்பட்டால் அவைகளைவிட தேகசௌக்கியத்துக்கு ஆரோக்கியமானவைகள் வேறில்லை. அவைகளுடைய அமைப்பில் வழுவுண்டானல் அவைகளைவிடப் பிரயோசனமற்றவைகளும் தேகஅசௌக்கியத்தைப் பெருக்கப்பட்டவைகளும் வேறில்லை. ஆகையால் கிரீமேடரை நாம் வழக்கத்திற் கொண்டுவருமுன் அதை சாஸ்திரப்பிரகாரம் கட்டிவைப்பதில் வெகுபிரயாசைப்படவேண்டும். ஸினிரேடர்களை உண்டாக்கி உபயோகிக்கும்பொழுது இவைகளிற் கொளுத்தப்படும் அக்கினியின்வீரியம் வெகு அதிகமாகையால் அச்சக்தியையும் ஒன்று சேர்த்து பெருஞ் சக்தியாக ஓரிடத்தில் தேக்கி, மின்சாரசக்தியால் இப்பொழுது நாம் டிராம் வண்டியை ஓட்டுவதுபோல், இச்சினிரேடர் வெப்பத்தின் சக்தியாலும் டிராமை ஓடச் செய்யலாம்.

நான்காம் அதிகாரம்.—

பிணத்தை வியபஸ்தாபனம் செய்தல்.

Chapter IV—Disposal of the dead.

நாம் உத்விருஷ்ட விஷயமாக முன்னரே எழுதின அதிகாரத்தில் பிணத்தையும் எவ்வாறு வாசஸ்தலங்களைவிட்டு அகற்றவேண்டுமென்பதைப்பற்றிப் பேசியிருக்கவேண்டும். ஏனெனில் பிணம் என்பதும் ஓர்வித உத்விருஷ்டமே. ஆனல் ஒவ்வொருவரும் தமது மதாசாரப் பிரகாரம் பிணத்தை அடக்கம் செய்வதிலும் எரிப்பதிலும் எவ்வளவோ சடங்குகள் செய்கின்றபடியால் பிணத்தை சாதாரண உத்விருஷ்டங்களுடன் சேர்க்காமல் அவைகளுடைய வியபஸ்தாபனத்திற்காக இவ்வதிகாரம் எழுதத்தொடங்கினேம். நமது தேசத்தில் சிலர் பிணத்தைப் புதைக்கின்றார்கள். சிலர் எரிக்கின்றார்கள். சிலர் (பார்ஸீ ஜாதியார்—Parsee) கழுகுக்கும் பருந்துக்கும் விருந்திட்டு விடுகின்றார்கள். இம்மூன்று விதங்களுக்குள்ளும் பிணத்தை எரிப்பதே சுகசந்தரிசன விதிப்படி சிலாக்கியமென்பது சிலபேர்களுடைய கொள்கை. விசேஷமாய்ப்பிணங்களைப்புதைக்கின்றதேசங்களாகியஜர்மானி, இத்தாலி தேசங்களிலும் பிணத்தை எரிப்பதை வழக்கத்திற் கொண்டுவந்து அதுவே உத்தமமென்று அங்கிருந்த சுகசந்தரிசன வாதிகள் ஒப்புக்

கொண்டார்கள். பிணத்தை எரிப்பதால் ஒருமணிக்குள்ளாக அதை நீருக்கி விடலாம். அக்காரணத்தாற் பிணத்திஞல் உண்டாகும் நாற்றம் நோய் முதலியவைகள் பிழைத்திருக்கும் நமக்கு ஓர்வித செளக்கியக் குறைவையும் உண்டாக்கமாட்டா.

ஒவ்வொரு பிணத்தையும் நாம் புதைக்கவேண்டியதாக ஏற்பட்டால் நமது நாடு முழுமையும் பிரேத பூமியாகவே மாறிவிடும். சிலமண்ணிற் சவம் சீக்கிரம் அழுகும். சிலமண்ணில் இவ்வழுகல் உண்டாக நாட்செல்லும். இக்காரணங்களாற் பிணங்கள் புதைக்கப்படுமிடங்களில் நின்று விஷக்காற்றும் விஷவாயுவும் கிளம்பி பிழைத்திருக்கப்பட்டவர்களுடைய தேக செளக்கியத்திற்குப் பெருந்தீங்கை விளைவிக்கும்.

[illegible] |
[illegible] ||

பஞ்சபூதங்களால் உண்டாக்கப்பட்ட இத்தேகம் நாம் மாண்டுபோனவுடன் அதை நாம் எரிப்பதாலும் புதைப்பதாலும் தன்னிடத்திலிருக்கிற பஞ்சபூதங்களையும் தனியே விலக்கிவிடுகின்றது. எரிப்பதால் இப்பிரிவு வெகு சீக்கிரம் உண்டாய் ஓர்விதசெளக்கியக் குறைவையும் விளைவிக்காமற் காற்றுடன்காற்றும் மண்ணுடன்மண்ணுமாய்ப் போய்விடுகின்றது. சவத்தைப் புதைப்பதால் வெகு காலம் வரையில் அச்சவம் பூமிக்குள்ளேயே அழுகி அதிற் சிலபாகம் பூண்டு முதலிய பயிர்களாகவும், சில பாகம் பூமிக்குள் ஓடிக்கொண்டிருக்கும் ஜலத்திற் கலந்தும் வெளிக்கிளம்புகின்றது. பிணத்தைச்சேர்ந்த எலும்பு முதலியவைகள் வெகு காலம் கரையாமலே அழுகினதசைப்பற்றுடன் துர்க்கந்தம்வீசிக்கொண்டேயிருக்கும். இத்துர்க்கந்தத்தாலும் அழுகின சவத்தின் துர்க்கந்தம் ஜலத்திற் படுவதாலும் பிழைத்திருக்கின்ற நமக்கு விளையும் நோய்களுக்கு அளவேயில்லை. அன்றியும் ஒவ்வொரு ஜாதியாருக்கும் அவரவர்களுடைய பிணங்களைப்புதைக்க ஒவ்வோர் ஊரிலும் தனித்தனியே இடம் கொடுக்கும்படி வரும். அக்காரணத்தால் வேறு பலவிதநன்மைக்கு உதவும் நிலங்கள் சமாதிக்குழியாகி மற்றெவ்விதப் பிரயோசனத்திற்கும் உதவாமல் வீணுய்விடும்.

பிணத்தை எரிப்பதால்இவ்விதச் சங்கடங்கள் ஒன்றுமில்லை. நூறுவருஷமான போதிலும் அழுகாத பிணம் ஐந்து நிமிஷங்களில் அக்கினியால் பஸ்மமாய்விடும். இடத்திஞல் உண்டாகும்நஷ்டம், துர்க்கந்தங்களால் உண்டாகும் விஷவாயு முதலிய நிர்ப்பந்தங்கள் பிணத்தை எரிப்பதால் நீங்கிவிடுமாகையாற் பிணத்தை எரிப்பதே உத்தமமென்று எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். பிணத்தை எரிப்பதில் ஓர் சிறு ஆக்ஷேபம் சில நியாயாதிகாரிகள் எடுத்துக்காட்டுகின்ருர்கள். அஃது என்னவெனில், யாராவ

தொருவன் விஷத்தை உட்கொண்டு மாண்டிருப்பானேயானல் அவன் உயிருடனிருந்த காலத்தில் அவனுக்கு யார் விஷம் கொடுத்தார்களென்று நாம் விசாரித்துப் பார்க்கவேண்டும்படிவரும். அவ்வாறு செய்ய இறந்தவன் வயிற்றில் விஷம் இருக்கின்றதா இல்லையா என்று நாம் முதல் முதல் பரீக்ஷித்துப்பார்க்கவேண்டும். அப்படிப் பரீக்ஷித்துப்பார்க்கப் பிணம்புதைக்கப் பட்டிருந்தாற்ருன் சாத்தியம். பிணம் எரிக்கப்பட்டிருந்தால் அவ்வாறுசெய்யமுடியாது.

இந்த ஒருகாரணத்தைக் கொண்டே பிணத்தை எரிப்பதைக்காட்டிலும் புதைப்பதே மேலானதென்று சிலருடைய கொள்கை. ஆனல் அது சுகசந்தரிசன முறைக்கு ஒத்ததன்று. ஒருவன் விஷம் வைக்கப்பட்டு மாண்டதை நாம் பரிசோதித்தறிந்துகொள்ள ஓர் ஊரில் மாண்டுபோகும் எல்லாப் பிணங்களையும் புதைக்கவேண்டுமென்று நாம் வாதிப்பது நியாயமன்று. பிணங்கள் புதைக்கப்படுமிடத்திற்குச் சமீபத்திலுள்ள ஸ்தலங்கள் வாசயோக்கியமாகமாட்டா. ஆனல் அவ்விடங்களில் நாம் தேகசவுக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்வதெப்படி? பிணங்களைக் காற்றுப் புகாத கெட்டியாகிய கல்லறைகளில் நாம் புதைக்கவேண்டும். அப்படிச் செய்வதாற் பிணம் அழுகுவது வெகுமெதுவாக நடக்குமென்ருலும் என்றைக்காவதொருநாள் அது முற்றிலும் நடந்து தீரவேண்டும். அப்படி நடப்பதற்குள் அக்கல்லறையிலிருந்து எப்படியாவது அந்நாற்றம் வெளிக்கிளம்பிக் காற்ருல் அகற்றப்படவேண்டும். இக்காரணங்களாற் கல்லறையைச்சுற்றி வீசுங்காற்று அக்கல்லறைக்குச் சமீபத்தில் நமக்குக் கிட்டும் ஜலம் இவைகளெல்லாம் அசுத்தமாகவேயிருக்கும். அல்லாமலும் ஒவ்வொரு பிணத்தையும் ஒரேமாதிரியாக ஆழமான கல்லறையிற் புதைக்கவேண்டுமென்பது எல்லாராலும் செய்ய சாத்தியமில்லாத காரியம். குழியைவெகுஆழமாகத்தோண்டிச்சவத்தைப்புதைத்து, அதனேடு சுண்ணும்பு அல்லது மரக்கரி இவைகளைக்கொட்டி மூடுவதால் ஒருவாறு அசௌக்கியங்கள் நீங்குமென்று சொல்லுவார்கள். அதுவும்சரியன்று. பிணங்களைப் புதைப்பது வழக்கமாய் இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறபடியால் அவ்வழக்கத்தாற் கூடியமட்டும் அதிக உபத்திரவம் உண்டாகாமலிருக்க ஆழந்தோண்டிப் பிணங்களைப்புதைத்து அவ்வாறு புதைத்த இடங்களின்மேல் வெகுசீக்கிரமாய் வளரும் பயிர்களையும் செடிகளையும் வளரவிடுவதேயாம். இப்பயிர்கள் அடியிலிருக்கும் நாற்றங்களையும் அழுகிப்போன வஸ்துக்களையும் தங்கள் எருக்களாகக் கொண்டு வளர்வதால் மனிதர்களுக்கு விஷவாயுவால் விளையும் அசௌக்கியத்தை நீக்கிவிடும்.

பிணத்தை எரிக்கும் ஸ்மசானங்கள் நமது வாசஸ்தலங்களுக்கும் நாம் நீர் எடுக்கும் இடங்களுக்கும் ஒதுங்கியிருக்கவேண்டும். நாம் இவ்வளவு தூரம்

திருச்சிற்றம்பலம்.

நம் மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் "பாண்டியன் புத்தகசாலை"க்கு அடியிற் குறித்த அபிமான சீலர்கள் ஏட்டுப்பிரதிகளும் அச்சுப் பிரதிகளும் அனுப்பி யுதவினார்கள்;—

ஏட்டுப்பிரதிகள்.

1. பிரபோத சந்திரோதயம் (உரையுடன்)
2. தண்டியலங்காரவுரை
3. பாகவதம்

மதுரைஜில்லாபிரம்பனூர்க் கணக்கர் மகா-ள-ள-ஸ்ரீ அருணாசலம் பிள்ளையவர்கள்.

4. பாரதம்
5. நாலடி உரை-2
6. கணக்கதிகாரம்
7. இறையனார் அகப்பொருளுரை, [திவாகரம்
8. வீரசோழியம் எழுத்ததிகாரம், நம்பி [யகப்பொருள்
9. அழகர்பிள்ளைத்தமிழ்-(குறைப்பிரதி)
10. போகர் ரோமரிஷிகளின் வைத்திய [சூத்திரம்
11. யாப்பருங்கலக்காரிகை உரை
12. குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் திவ்வியசரிதை (கலிவெண்பாவில்)
13. பாகவதம்
14. சோதிடநூல்
15. விடுகவித்திரட்டு.

மதுரை ஜில்லா, திருப்பாற் சேர்த்தி பேஷ்கார் மகா-ள-ள-ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளையவர்கள்.

16. அரிசமயதீபம்—திருக்கோஷ்டியூர், அத்தியயனபட்டர் ஸ்ரீமத்-இரா [மாநுஜாசாரியவர்கள்.

அச்சுப்பிரதிகள்.

17. காளையார் கோயிற் புராணம்
18. வைரவன் கோயில் வடிவுடையம்மை [பிள்ளைத் தமிழ்

மதுரை ஜில்லா, அரியக்குடி, ஸ்ரீமத்-சா. கி. அரங்கநாதச் செட்டியாரவர்கள்.

19. திருக்காளத்தி உலா (ஸ்ரீமத்-வே.சாமி நாதையரவர்கள் பதிப்பு)

தஞ்சாவூர்ஜில்லா, ஆலங்காடு-ஸ்ரீமத்-ராம. சிதம்பரஞ்செட்டியாரவர்கள்.

20. வெனிஸ்வர்த்தகன்—ஸ்ரீமத்-கள்ளபிரான் பிள்ளையவர்கள், சப்-மாஜிஸ்ட்ரேட், சைதாபேட்டை: சென்னை.

21. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரது உபதேசரத்தினமாலை (மகேசகுமாரசர்மா மொழிபெயர்ப்பு.)	ஸ்ரீமத்-மா. குப்புசாமி ஐயரவர்கள், சப்ரிஜிஸ்டார் ஆபீஸ், பெரிய காஞ்சிபுரம்.
22. ஸ்ரீமயில மும்மணிக்கோவை 23. ஸ்ரீசவுடாம்பிகையம்மை திருவருட்பத்து முதலியன 24. ஸ்ரீமயில முருகேசர்பதிகம்முதலியன	புதுவை, ஓர்லயன்பேட்டை ஸ்ரீமத் நா. வேங்கடாசலநாயக்கரவர்கள், கந்தாடு, மாக்காணம்.
25. இராமலிங்கம்பிள்ளைபாடல் 26. பிரபுலிங்கலீலை 27. நந்தனார்சரித்திரகீர்த்தனை 28. பிரகலாதாழ்வான் சரித்திரப்பா 29. மயிலாசலக்கலம்பகம் 30. தேவாரத்திரட்டு 31. இந்துதேசசரித்திரம் 32. சைவசமயவிளக்கவினாவிடை 33. பிரபோதசந்திரோதயம்	ஸ்ரீமத். சிவ. அதிகப்ப. வீ. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், புகையிலை மண்டி, திருப்பாதிரிப்புலியூர்.

34. கரலிகித சாஸ்திரம் (இங்கிலீஷ்) —ஸ்ரீமத்-எம். எஸ். பொன்னம்பலபிள்ளையவர்கள், தமிழ்ப் பண்டிதர், விக்டோறியா காலேஜ், யாழ்ப்பாணம்.

35. இ[illegible]மூர் சரித்திரம்—யாழ்ப்பாணம் ஸ்ரீமத்-கா. கந்தையாபிள்ளையவர்கள், சித்தாந்தசைவப் பிரசாரகர், கிளாங்.

இவ்வாறு சங்காபிமானத்தோடுந் தாமே முன் வந்து பிரதிகள் உதவிய இக்கனவான்களுக்கு அநேக வந்தனங் கூறுகின்றேன்.

இங்ஙனம்,

பொ. பாண்டித்துரை,

அக்கிராசனாதிபதி.

உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்.— { ரா. இராகவையங்கார், ஸேது ஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-உ.] குரோதி ஹு ஐப்பசிமீ [பகுதி-கஉ.

உள்ளுறை.

யாட்சிமை தங்கிய புதுக்கோட்டை மகாராஜரவர்கள் நன்கொடை.— } பத்திராசிரியர்.

புகழேந்தி யொட்டக் கூத்தர்.—பத்திராசிரியர். ௩அச

பன்னிருநியாயபரிபாடை.—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. சக0

தமிழிலக்க வரலாறு.—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், M. A., சகசா

சங்கத்தைப்பற்றிய குறிப்பு-ஸ்ரீமத்-வே. சாமிநாதையர். சககூ

தருக்க சூத்திர முதற்பாடம். ஸ்ரீமத்-எஸ். பால்வண்ண முதலியார்.

திவ்வியகவி பிள்ளைப்பெருமாளையங்கார். } ஸ்ரீமத்-கல்குளம்-குப்புசாமி முதலியார்.—B. A. [சஉக சஉரு

இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.—ஸ்ரீமத்-கணேசையர். ச௩0

பிராசீனதர்மங்களினுயர்வும் இக்காலஆசாரங்களும். ச௩ரு

புத்தகக் குறிப்பு.—பத்திராசிரியர். ௩சகூ

நான்மணிக்கடிகை (பழைய உரையுடன்) உரு

தொல்காப்பியம் செய்யுளியல்.—நச்சினார்க்கினியருரை. ௩௩

சுகசந்தர்சனதீபிகை.—ஸ்ரீமத்-பண்டித—நடேசசாஸ்திரியார். ௩௩

மதுரைத்தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப்பரீக்ஷை.—

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ - 4.] 1904. [தனிப்பிரதி அணா-8.

நம்முடைய சந்தாதார்களுக்கு.

"செந்தமிழ்" இரண்டாந் தொகுதி இப்பன்னிரண்டாம் பகுதியோடு இனிது முற்றியது. இனித் தொடங்குவது மூன்றாந்தொகுதியாகும். அதற்குரிய சந்தாத்தொகையாகிய ரூபா நான்கையும் செந்தமிழபிமானிகளெல்லாம் சங்கநடைபேறுகருதி அன்போடு முன்பணமாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. முன்பணமனுப்பத்தாழ்ப்பின், மூன்றாந் தொகுதியின் முதற்பகுதியை வி. பி. தபால்வாயிலாக விடுக்கக்கருதுகின்றோம். சென்றவாண்டிற் "செந்தமிழை" அபிமானித்து ஆதரித்த தமிழ்மக்களெல்லாம் என்றும் அதனை அபிமானிப்பார்கள் என்னும் உறுதி பெரிதுமுடையோம்.

இங்ஙனம்

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

உ

கடவுள் துணை

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

இரண்டாந்தொகுதி.

பத்திராசிரியர்—ரா. இராகவையங்கார்.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1903—1904.

'செந்தமிழ்' இரண்டாந்தொகுதியின்

உள்ளுறை.

அச்சிட்டதொல்காப்பிய மரபியலுரை—பத்திராசிரியர். ... ௩௬௧.

ஆகுபெயரன்மொழித்தொகைஆராய்ச்சி. } நா. வேதாசலம்பிள்ளையவர்கள் ௧௯௪, ௨௧௮, ௨௪௦

ஆராய்ச்சி. பத்திராசிரியர் ... ... ௪.

ஆவினன்குடி. பத்திராசிரியர் ... ... ௧.

இசைத்தமிழ். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள். ... ௩௪௭.

இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.-சி. கணேசையரவர்கள். ௪௩௦

இலக்கணவாராய்ச்சி.— அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் ௧௫௮.

உபசர்க்கம். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் ... ௧௨௪.

உலகில் உயர்ந்தார் யார்? ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் ௯.

உள்ளது. ஸ்ரீகாசிவாசி-செந்திநாதையரவர்கள். ௫௯, ௮௯, ௧௩௫.

ஓரடித்தமிழ்ச்சொற்கள். ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள். [௪௩, ௮௨.

ஔவையார். பத்திராசிரியர். ௧௯௦, ௨௨௩.

கடவுள். ஸ்ரீகாசிவாசி-செந்திநாதையரவர்கள் ௨௫௧.

கந்தபுராணம். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௩௧௧.

கவிமரபு. தா. சுந்தரராஜசர்மா அவர்கள். ௧௮௫, ௨௬௦.

சந்தானகுரவர். திருமயிலைச்சண்முகம்பிள்ளையவர்கள். ௨௮௮, ௩௦௫

சிலதமிழ்ச்சொல்வழக்காறு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் [௨௩௭.

சிலப்பதிகாரமணிமேகலைகளின் பிறப்பிடம் யாது? — தா. பொன்னம்பலம்பிள்ளையவர்கள். ௧௭௯, ௨௧௧, ௨௫௫.

செல்வம். தி.செல்வக்கேசவராயமுதலியாரவர்கள் M.A. ௩௩௮, ௩௬௭.

சேதுபதிகள். பத்திராசிரியர். ... ... ௩௦, ௬௬.

சொற்பொருட்குற்றங்கள். ஆ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் ௭௪.

தமிழிலக்கவரலாறு. து. அ. கோபிநாதராயரவர்கள் M. A,. ௪௧௬.

தருக்கசூத்திரமுதற்பாடம். — எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள். ௧௭, ௫௫, ௮௭, ௧௩௩, ௩௪௨.

தமிழே அநேகபாஷைகளுக்கு இலக்கங்கொடுத்தது. — ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள், ௧௨௦.

திருக்குறட்பெயர்க்காரணம். நா. வேதாசலம்பிள்ளையவர்கள். ௩௫௧.

திருக்குறளதிகாரப்பிறழ்ச்சி! — ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் ௩௮.

திருவாதவூரர்புராணம். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௨௦௬.

நடுவெழுத்தலங்காரக்கவி. அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௨௩௪

நட்பு. தி. செல்வக்கேசவராயமுதலியாரவர்கள். M. A., ௨௮௧, ௩௦௮.

நல்லிசைப்புலமை மெல்லியலார்கள். பத்திராசிரியர். ௧௦௯, ௩௨௯.

நன்னூற்குறிப்பு. திரு.நாராயணையங்காரவர்கள். ௨௯௨, ௩௨௪, ௩௭௭.

நுணங்குமொழிப்புலவர்க்கு வணங்குமொழி விண்ணப்பம். — அ. சண்முகம்பிள்ளையவர்கள்: ௪௮.

நுண்பொருட்கோவை. — அ. சண்முகம்பிள்ளையவர்கள். ௮௨, ௧௨௯, ௨௪௫.

பரிமேலழகருரையும் திருக்குறளும். — கல்குளம். குப்புசாமி முதலியாரவர்கள் ௨௩.

பல்லவசக்கரவர்த்திகள். ம. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். ௧௭௩.

பன்னிருநியாயபரிபாடை. அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௪௧௦.

பாரிமகளிர். பத்திராசிரியர். ... ... உசூரு
பாற்கரசேதுபதியவர்கள். பத்திராசிரியர். ... ... உகூ.
பிங்கலநிகண்டு. அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ... உஎசூ,
பிரமஸ்ரீ. வே. சாமிநாதையரவர்களது வருகைக்குறிப்பு. சகக.
பிராசீன தர்மங்களினுயர்வும், இக்கால ஆசாரங்களும். ஙசூக, ஙருசூ [சஙரு.
திவ்வியகவி பிள்ளைப்பெருமாளையங்கார். கற்குளம். குப்புசாமிமுதலியாரவர்கள். B. A., ஙஅஎ, சஉசூ.
புகழேந்தியொட்டக்கூத்தர். பத்திராசிரியர். ஙகூங. [சஙகூ.
புத்தகக்குறிப்பு. பத்திராசிரியர். சூச, கசஎ, கஅசூ, உகூங, ஙஉஅ.
பூதப்பாண்டியன்தேவியார். பத்திராசிரியர். ... ... உகூஎ.
பெரியாழ்வார்காலநிருணயம். மு. இராகவையங்காரவர்கள். சக, கூசூ.
வெண்பாவிலக்கணம். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ஙஎஉ.
வெள்ளிவீதியார். பத்திராசிரியர். ... ... கசகூ.

‘செந்தமிழ்’ இரண்டாந்தொகுதியில் வெளிவந்த

நூல்கள்.

[முடிந்தவை.]

க. அநுமானவிளக்கம். திரு. நாராயணையங்காரவர்கள். க, உ, ரு, சூ-பகுதிகள்.

உ. விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம். சே. ப. நரசிம்மலு நாயுடு அவர்கள், க, உ, ங, சூ, எ-பகுதிகள் (ஙங-ம்பக்கமுதல் எங-ம் பக்கம் வரை)

ங. திருநூற்றந்தாதிமூலமும் உரையும். அவிரோதியாழ்வார், க-ம் பகுதி:

ச. பன்னிருபாட்டியல். க-ம் பகுதி முதல் ரு-ம் பகுதி வரை (சச-பக்கம்.)

ரு. திணைமாலைநூற்றைம்பது. கணிமேதாவியார். உ-ம் பகுதிமுதல் அ-ம் பகுதிவரை. (ருக-பக்கம்.)

சு. அட்டாங்கயோகக்குறள். வருத்தமறவுய்யும்வழி.

எ. நான்மணிக்கடிகை. (பழைய உரையுடன்) விளம்பிநாகனார், கூ-ம் பகுதி முதல் கஉ-ம் பகுதிவரை (ருஉ-பக்கம்.)

[முடியாதவை.]

க. திருச்செந்திற்கலம்பகம். (இலக்கணக்கொத்துச் சுவாமிநாத தேசிகர்) எ-ம் பகுதி.

உ. விவசாயநூல். சே. ப. நரசிப்மலுநாயுடு அவர்கள், அ-முதல் கஉ-வரைப்பகுதிகள்.

ங. சுகசந்தர்சனதீபிகை. பண்டித ச. ம. நடேசசாஸ்திரியவர்கள். அ-ம்பகுதிமுதல் கஉ-ம்பகுதிவரை.

ச. தொல்காப்பியம் செய்யுளியல் நச்சினார்க்கினியருரை. அ-ம் பகுதிமுதல் கஉ-ம்பகுதிவரை.

உ

திருச்சிற்றம்பலம்.

நம் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் "பாண்டியன் புத்தகசாலை க்கு அடியிற்குறித்த அபிமானசீலர்கள் ஏட்டுப்பிரதிகளும் அச்சுப் பிரதிகளும் உதவினமைக்குப் பெரிதும் நன்றிகூறுகின்றேன்.

ஏட்டுப்பிரதிகள்.

பேறையூர் ஜமீந்தாரவர்களாகிய ஸ்ரீமாந்-
நாக்யசாமிதும்பிச்ச நாயகரவர்கள் அளித்தவை.

1. தக்ஷிணமூர்த்திகலைஞானம்
2. கர்மகாண்டம் 300 [1200.
3. ராமதேவர் 1000
4. அகத்தியர் 1500
5. வகாரமுற்ற-100
6. வைத்திய அட்டவணை
7. ராமவேர் 500 முதலியசில்ல
8. ஜோவியம் [றை ஏடு
9. மச்சமுனி 800
10. அத்திகர்மசூத்திரம் 300
11. சயமுனிவாதம் 1000
12. மச்சமுனி 800
13. அகத்தியர்பூரணம் 1300
14. கருவூரார்திரட்டு
15. மச்சமுனி 800
16. குறுமுனி 250
17. மச்சமுனி 800
18. ஷை ஷை [வணை
19. அகத்தியர் வைத்திய அட்ட
20. தக்ஷிணமூர்த்திகடைக்காண்டம்
21. கர்ப்பக்குறி [600
22. கொங்கணர்
23. அகத்தியர் 1500
24. சில்லறை வைத்தியம்
25. கொங்கணர் 500
26. சிவானந்த மாணிக்கம்
27. மச்சமுனி 800
28. கொங்கணர் ஞானம்
29. சூதமுனிசூத்திரம்
30. கொங்கணர் கடைக்காண்டம்
31. மணியலங்காரம் [500
32. சித்தராரூடம்
33. குறுமுனிஞானத்திரட்டு
34. தக்ஷிணமூர்த்தி சூத்திரமுதலி
35. அகத்தியர் ஞானம் 1200 [யன
36. ஷை சூத்திரம் 300
37. ஷை வைத்தியம் 150
38. வகாரசூத்திரம்
39. அகத்தியர்கலைஞானம்
40. ராமதேவர் 800
41. ஷை ஷை
42. கொங்கணர்கடைக்காண்டம்
43. அகத்தியர் முப்பூ
44. சில்லறை வைத்தியம்
45. அகத்திய சூத்திரம்
46. சித்தராரூடம்
47. குணவாகடம்
48. கொங்கணர் கடைக்காண்டம்
49. ராமதேவர்பாடல்
50. கும்பமுனி 1200
51. வைத்திய அட்டவணை
52. வைத்தியம் சில்லறை
53. பரிபூரணம் 1200
54. தக்ஷிணமூர்த்தி வாசிகாமக்ஷணி
55. கருமகாண்டம் 300
56. சில்லறை
57. சரநூல்
58. பரிபூரணம் 1200
59. சில்லறை வைத்தியம்
60. ஷை ஷை
61. சகாதேவநூல்
62. சில்லறை
63. சுந்தரானந்தர் அதீத சூத்திரம்
64. கருவூரார் சூத்திரம்
65. குற்றாலப்புராணம்
56. உபமானசங்கிரகம்
67. சில்லறை
68. பரங்கிரிப்புராணம்
69. சில்லறை ஏடு
70. சில்லறை ஏடு

71	மகாபாரதம் (வில்லிபுத்தூரார்) மூலம்-திருப்புறம்பயம், ஸ்ரீமத்-தாஸப்ப நாயக்கரவர்கள் பிரதி.	ஸ்ரீமத்-வே. சாமிநாதையர் அவர்கள் மூலம்
72	மகாபாரதம் (அசுவமேதயாக முதற் பிற்பாகம்)	ஸ்ரீமத்-வே. சாமிநாதையரவர்கள்.
73	மகாபாரதம் (வில்லி) முற்றும்.	ஸ்ரீமத்-பி. இலக்ஷ்மணபிள்ளையவர்கள், பென்ஷன் ஓவர்சீயர், பறங்கிப்பேட்டை.
74	ஷெ குறை.	
75	ஷெ படையெழுச்சி முதல் 13-ம்போர்வரை உரை.	
76	ஷெ 14-ம் போர்முதல் முடிவுவரை உரை.	
77	ஷெ இராசசூயமுதல் வெளிப்பாட்டுச்சருக்கம் வரை உரை.	ஸ்ரீமத்-வித்வான் மு. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், துறையூர், திருச்சி ஜில்லா.
78	ஷெ 14-ம் போர்முதல் முழுதும் உரை.	
79	ஷெ 13-ம்போர்ச்சருக்க முறை (குறை).	
80	ஷெ (குறை).	ஸ்ரீமத்-உக்கிரபாண்டிய பட்டரவர்கள், மதுரை.
81	கயற்கண்ணி பல்சந்தமாலை.	
82	திருவாலவாயுடையார் திருப்பணி வரலாறு.	ஸ்ரீமத்-பரமசிவ பட்டரவர்கள், மதுரை.
83	திருவாலவாயுடையார் திருக்கோயில் ஸ்தானீகர் வரலாறு.	
84	மதுரைத்தலவரலாறு.	

சென்ற 11-ம் பகுதியில், 6 முதல் 16 வரையிலுள்ள எண்களையுடைய பிரதிகள், வேப்பத்தூர் ஸ்ரீமத்-பிச்சு பாரதிகள், ஸ்ரீமத்-சௌந்தர பாரதிகள் அளித்தவை என்று திருத்திக்கொள்க.

அச்சுப்பிரதிகள்.

85 The famous Literature, 20 Volumes:—H. H. Rajah M. Dinaker Bahadoor avergal of Ramnad.

86	வில்லிபாரதம் காண்டவ தகனச் சருக்கவுரை.	ஸ்ரீமத்-வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரவர்கள் தமிழ்ப்பண்டிதர், காலேஜ், கும்பகோணம்.
87	F. A. Tamil Text Part II.	

88 First public lectures in Ceylon.—மூளாய் ஸ்ரீமத்-எஸ். பொன்னம்பல பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், விக்டோரியா காலேஜ், யாழ்ப்பாணம்.

89 தருக்காமிருதம் (தமிழ் மொழிபெயர்ப்பு).—ஸ்ரீமாந் பேறையூர் ஜமீந்தாரவர்கள்; (60-பிரதிகள்).

போ. பாண்டித்துரை,

அக்கிராஸனாதிபதி.

ஸ்ரீ:

மகாராஜராஜஸ்ரீ:

மாட்சி பொருந்திய

புதுக்கோட்டை மகாராஜரவர்கள்

மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கு

அன்புற்றுதவிய

நன்கொடை.

நம் மதுரைத் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியவர்களாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவரவர்கள், இத்தமிழ்ச்சங்கத்தை ஆதரித்தளித்தல்வேண்டி, சென்றவாண்டில், இப்பரதகண்டத்துள்ள மகாராஜசமூகங்கட்குச் செய்துகொண்ட "விஞ்ஞாபனபத்திரிகையைக்" கண்ணுற்றுவந்து, திருவனந்தபுரம், மைசூர், பரோடா, தர்பங்கா என்னுந் தேசமன்னர்கள் பொருளுதவிபுரிந்து அபிமானங் காட்டிய செய்தி தமிழ்நாட்டார்பலரும் அறிந்ததொன்றும். அவ்வாறே, தமிழ்மன்னராக விளங்கும் மாட்சிதங்கிய புதுக்கோட்டைமகாராஜரவர்கட்கும் விடுக்கப்பெற்ற விஞ்ஞாபனபத்திரத்தை, அவ்வேந்தரவர்கள் கண்ணுற்றுப்பெரிதுமுவந்து, தாய்மொழியாகிய தமிழ்நாட்டுத்தாங்கள்கொண்டுள்ள அபிமானத்தையும் அதனைவளர்த்தற்கென் றெழுந்த மதுரைத்தமிழ்ச்சங்கத்தைத் தாங்கள் ஆதரித்தற்கிசைந்த உள்ளன்பையும்விளக்கித் தங்கள்சம்ஸ்தானமந்திரியாகிய திவான் பஹதூர் ஸ்ரீமாந்-வேங்கடராமதாஸ்நாயுடுகாருவாயிலாக, 31-10-04-ல் விடுப்பித்த கடிதமொன்று சங்கத்து அக்கிராசனாதிபதியவர்கள் சில நாள்கட்குமுன்பு எய்தப்பெற்றார்கள். ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற அக்கடித விஷயம் அடியில் வருமாறு;—

"ஐயா,

மதுரையிற் றங்களால் ஸ்தாபிக்கப்பெற்று நடைபெறும் மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குப் போஷகராக அமர்ந்து தமிழ்ப்பாஷையின் அபிவிருத்திக்குரிய உதவிகளைச் செய்து கொடுத்தல்வேண்டித் தாங்கள், மாட்சிதங்கியசமுகத்துக்கு 1903ஷு ஜூலைமீ 13உ விடுத்த அச்சுவிஞ்ஞாபனபத்திரத்தை மகாசமுகம் கண்ணுற்றுவந்து,

அச்சங்கத்திற்கு **ரூபா ஐயாயிரம் நன்கொடையுதவி** அத்தொகையை ஐந்து முறையில் ஐந்து வருஷங்களுக்குச் செலுத்திவரவும், இன்னும், சங்கம் நடை பெறுங்காறும் மாதமொன்றற்கு **ரூபா ஐம்பது** வீதம் நடப்புமாதமுதற்றெய்திமுதலாக **மாதவுதவி** அளித்துவரவும் கருணைகூர்ந்து கட்டளையிட்டருளிய செய்தியைத் தங்கட்கு அறிவிக்கின்றேன்.

மேற்குறித்தவாறு, அந்நன்கொடையில் முதன்முறையிற் செலுத்தற்குரிய தொகையாகிய ரூபா ஆயிரமும், நடப்புமாதத்து உதவித்தொகையாகிய ரூபா ஐம்பதுமாக இருவகையினுங்கூடிய ரூபா 1050-க்கும் ஒரு மாற்றுண்டியற்பத்திரம் இதனுள் வைத்தனுப்பப்பெற்றுள்ளது. எஞ்சிய நன்கொடைத் தொகையையும், மாதவுதவித்தொகையையும் ஒழுங்குபெற அனுப்பிவரக்கூடுமென்னும் உறுதியுடையேன். மேற்குறித்த தொகையை மாற்றுண்டியல்மூலம் பெறுவதிற் றங்கட்கு விருப்பமிருக்குமென்றே எண்ணுகிறேன். அன்றியும், மகாசமூகம் சங்கவிஷயத்தில் மிக்க விருப்புடையவர்களாகவும், அதன் போஷகராக அமர்ந்ததில் அதிகௌரவம் பாராட்டுபவர்களாகவும் நன்கு விளங்குதலால், சங்கத்தின் முயற்சி விவரங்களையும், அதன்றேர்ச்சி விவரங்களையும் அவ்வக்காலங்களில் எனக்குத்தெரிவித்துவருவீர்களென்றும் நம்புகின்றேன்.

மகாசமூகத்தால் அளிக்கப்பெற்ற நன்கொடையையும்; மாதவுதவியையும் எத்தகையதோர் நல்வழியில் உபயோகிக்கலாமென்று தங்கட்குத் தோற்றுகின்றதோ, அவ்வழியிற் றங்கள் உபயோகித்துக் கொள்ளலாகும். "**ஒரேதமிழ்வேந்து**" என்று இராமநாதபுரம் அரசரவர்கள் மகாசமூகத்துக்குப் பெயரிட்டழைத்ததற்கு இயைய, தங்கள் தமிழ்ச்சங்கம் மகாசமூகத்தால் இப்போது ஆதரிக்கப்பெறுதலை அவ்வரசரவர்கள் நேரிற்கண்டு மகிழ்தற்கில்லாமையை நினைந்து வருந்துகின்றேன்.

மாட்சிதங்கிய மகாராஜரவர்களது தமிழபிமானமும், மனோதயாளமும், இக்கடிதத்தால், எத்துணைச்சிறப்புடன் விளங்குகின்றன? மகாராஜரவர்கள், இச்சங்கத்தின் மூலதனத்திற்கென்று ரூபா ஐயாயிரமும், அதன் நடைபேற்றுக்கென்று மாதந்தோறும் ரூபா ஐம்பதும் தங்கள் சமஸ்தானத்தினின்று உதவிவரக்கட்டளையிட்டு, சங்கத்தின் முக்கியபோஷகராக அமர்ந்துவிளங்குவதிற் றங்கட்

குள்ள முழுமகிழ்ச்சியையுங்காட்டி விடுத்தருளிய இக்கடிதம் தமிழ்மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்தையும் கவரத்தக்கதாகும்.

இவ்வாறு திவானவர்களிடமிருந்து கிடைத்த கடிதத்தைச் சங்கஅக்கிராசனுதிபதியாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவரவர்கள் பெற்று, மாட்சிதங்கிய மகாராஜா அவர்களது மனோதயாளத்தைப் பெரிதும் வியந்து, அவர்களது உபகாரத்தாற் றாம் அளவற்ற மகிழ்ச்சிகொண்டு உண்மையான நன்றி செலுத்துவதாகவும், தமிழ்நாட்டு ஆங்கிலகலாசாலை மாணவர்க்குத் தமிழறிவுபெருகுதல் வேண்டிச் சங்கத்தில் நடத்தப்பெறும் தமிழ்ப் பரீக்ஷைகளிலும், தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிலும் முதன்மைபெறத்தேறும் மாணுக்கர்க்கு மகாராஜா அவர்கள் பெயராற் பதக்கங்கள், பரிசுகள் அளித்தலில் அந்நன்கொடையை உபயோகித்து, மகாசமுகத்தின் பெயரைச் சிறக்கசெய்யத் தாம் விரும்புவதாகவும், அதனைக்குறித்து மகாசமுகத்திற் றெரிவிக்கவேண்டுவதாகவும் திவானவர்கட்குக் கடிதமெழுதியுள்ளார்கள். அக்கிராசனுதிபதியவர்கள் அவ்வுபகாரநிதியை இத்தகைய நல்வழியில் உபயோகிக்க நினைந்தது, அனைவர்க்கும் பெருமகிழ்ச்சி தரத்தக்கதேயாம்.

'முற்காலத்து வேந்தர்பலர் ஆதரவுபெற்றுச் செழித்தோங்கிய தமிழ்மொழி, இக்காலம் தன்னைப்பேணி வளர்த்தற்குரிய தமிழ்த்தனிவேந்தரின்றித் தளர்வுற்றது' என்னும் பொதுக்கொள்கையை மகாராஜாவர்களது இத்தமிழ்க்கொடை ஒருவாறு பிறகிடச்செய்யுமென்பது ஒருதலை. தமிழ்த்தாயிடந் தோன்றிய மலையாளங் கன்னடம் முதலியசேய்மொழிகள் தம்மைப் பேணும் முடியுடையரசரை உடையனவாக, அத்தாய்மொழியைத் தாங்கற்குரிய முடிவேந்தர் செந்தமிழ்நாடாளும் புதுவை மன்னரையன்றி வேறியாருளர்? இவ்வாறு முன்னின்றுபகரித்த மாட்சிதங்கிய மகாராஜாவர்கள் நீடுவாழவும், அவர்களது நாடுங்குடியும் நன்குசெழித்தோங்கவும் எல்லாம் வல்ல இறைவன்றிருவருள் பெருகுவதாக.

தமிழ்த்தலைமை வேந்தராகிய இம்மகாராஜாவர்களது வள்ளன்மையைப்பின்பற்றி ஏனைய தமிழ்ப்பிரபுக்களும் ஒழுகுவார்களாயின், நம் தமிழ்மங்கை எல்லாநலங்களும்பெற்றுச் சிறந்துவிளங்குமன்றோ?

அவர்கள் உள்ளங்களினும் இத்தகைய அபிமானமுண்டாக்குமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம்.

முற்காத்த மூவேந்தர் முற்றியபின் றமிழ்மடந்தை
யெற்காத்தற் குரியவர்யா-ரென்றுதளர் காலத்தே
தற்காத்தற் குரிமையுடைத் தமிழ்வேந்தன் தானென்றே
மற்காத்த புயங்காட்டிப் புதுவையர்கோன் வந்தனனல்.

நீயேசெந் தமிழ்வேந்த னின்னதே தமிழாட்சி
தாயேபோ லிச்சங்கந் தாங்கல்கட னெனவெழுதி
மீயேகும் பாற்கரவேள் விண்ணின்று புகழ்கேட்பச்
சேயேபோற்புதுவையர்கோன் திருத்தகுபொன்னளித்தனனே.

வேறு நன்கொடைகள்.

:o:

செந்தமிழ்ப் பாண்டிநாட்டுப் பேறையூர் ஜமீந்தாரவர்களாகிய ஸ்ரீமாந்—நாகயசாமி தும்பிச்ச நாயக்கரவர்கள், இத்தமிழ்ச்சங்கத்திற்கு வந்து அதனைப் பார்வையிட்டுவந்து, சங்கநிதிக்குத் தாங்கள் ரூபா ஆயிரமுபகரிப்பதாக முன் வந்து கைச்சாத்திட்டதோடு, அந்நிதியில் ஒருபகுதிவரவாக ரூ 150 நேரில் அளித்து முதவினார்கள். இப்பிரபு அவர்களது தமிழபிமானமும், ஈகையும் பலரும் நன்கறிந்தவையே. இவ்வாறு உதவிய பிரபு அவர்களைப் பெரிதும் வாழ்த்தி இத்தமிழகம் நன்றிகூறத்தக்கது.

*   *   *   *   *

செந்தமிழ்ப் பாண்டிவளநாட்டுச் சேற்றூர் ஜமீந்தாரவர்களாகிய ஸ்ரீமாந்—சேவகப்பாண்டியத்தேவரவர்கள், நம் தமிழ்ச்சங்கத்துக்கு அன்போடு முதவுவதாக முன்னர்க் கைச்சாத்திட்ட தொகையாகிய ரூ 3000 ல் ஒரு பகுதி வரவாக, ரூ 500, ஸ்ரீமாந்—பேறையூர் ஜமீந்தாரவர்கள் மூலம் விடுத்துதவினார்கள். இவ்வாறு பிரபுக்கள் முன்னின்று ஆதரிப்பின் தமிழபிவிர்த்தியடையத் தடையென்னை? இப்பிரபு அவர்கள் நீடுவாழத் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

நம் தமிழ்ச்சங்கத்திற் கண்ணுங்கருத்துமுடையவர்களாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவரவர்களது தமிழபிவிர்த்தி கருதிய பெருமுயற்சியை, மேற்குறித்த உபகாரங்கள் ஊக்கவல்லனவாகும். தமிழருமையறிந்த பிரபு ஒருவரைத் தனக்குரிய தலைவராகப்பெற்ற இச்சங்கம், இவைபோன்ற பெருநலங்களெல்லாம் ஒருங்கெய்திச் சிறத்தற்குரியது என்பதில் ஒருசிறிதும் ஐயமின்று.

பத்திராசிரியர்,